



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:134 | 29-11-2025 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

### இன்றைய பஞ்சாங்கம்

29.11.2025 கார்த்திகை 13
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
இன்று மாலை 6.03 வரை
நவமி பின்பு தசமி

நட்சத்திரம்:
இன்று இரவு 10.07 வரை
பூரட்டாதி பின்பு உத்திரட்டாதி.

யோகம் :
இன்று அதிகாலை 5.52 வரை
ஹர்ஷனம் பின்பு வஜ்ரம்

கரணம் :
இன்று காலை 6.40 வரை
பாலவம் பின்பு மாலை
6.03 வரை கௌலவம்
பின்பு தைதுலம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.14 வரை
சித்த யோகம் பின்பு இரவு
10.07 வரை யோகம் சரியில்லை
பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று இரவு 10.07 வரை
ஆயில்யம் பின்பு மகம்

நல்ல நேரம்
காலை 8.00 – 9.00.
மாலை 4.45 – 5.45.
இராகு காலம்
காலை 9.00 – 10.30.

எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00

குளிகை
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## மணிக்கு 10 கிமீ வேகத்தில் நகர்ந்து

# தமிழகத்தை நெருங்கும் ‘டிட்வா புயல்’

**சென்னை, நவ.29:**

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய இலங்கைகடலோரப்பகுதிகளில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று நேற்று காலை 11.30 மணியளவில் புயலாக வலுவடைந்து இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. இந்த புயலுக்கு ‘டிட்வா’ என பெயரிடப்பட்டு உள்ளது. ஏமன் நாடு இந்த பெயரை பரிந்துரைத்து இருக்கிறது.

டிட்வா புயல் தற்போது சென்னைக்கு 530 கி.மீ தூரத்திலும், புதுச்சேரிக்கு 430 கி.மீ தெற்கு தென்கிழக்கு திசையிலும் நிலைகொண்டு இருக்கிறது. இந்நிலையில் 7 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வந்த டிட்வா புயல் தற்போது 10 கி.மீ வேகத்தில் வடக்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து வருகிறது. இது வருகிற 30-ந்தேதி அதிகாலை வடதமிழகம், புதுச்சேரி மற்றும் அதனையொட்டிய தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதியை அடையக்கூடும் என ஆய்வு மையம் கணித்துள்ளது.


தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆந்திர கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும் எனவும் மேலும் கடல் பகுதியிலும் பலத்த காற்று வீச கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கைவிடுத்துள்ளது.

**பேரிடர் மீட்புப் படையினர் விரைந்தனர்**

வங்கக்கடலில் உருவாகியுள்ள இந்த புயலால் தமிழ்நாட்டுக்கு மழைக்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாகவே கணிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் தென் மாவட்டங்கள், காவிரி டெல்டா மாவட்டங்கள், வட கடலோர மாவட்டங்களில் நல்ல மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அதன்படி, இன்று புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் இன்று அதி கனமழை பெய்யும் என்றும் ராமநாதபுரம், திருச்சி, அரியலூரி, சிவகங்கை, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராமேஸ்வரத்தில் கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது. பலத்த காற்று வீசுவதால் பாம்பன் பாலத்தில் ரெயில்கள்




செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில், நாகை, பாம்பன், தூத்துக்குடி, காரைக்கால் துறைமுகத்தில் 4-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

சென்னை, கடலூர், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி துறைமுகங்களில் 2-ம் எண் புயல் எச்சரிக்கைக்கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.புயல் மற்றும் கனமழை எச்சரிக்கையைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில பேரிடர் மேலாண்மை அதிகாரிகளின் வேண்டுகோளை அடுத்து மீட்புப் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 6 மாவட்டங்களுக்கு தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் விரைந்துள்ளனர். ஒவ்வொரு தேசிய பேரிடர் மீட்புக் குழுவுக்கும் 30 பேர் வீதம் மொத்தம் எட்டு குழுக்கள் அரக்கோணத்தில் இருந்து புறப்பட்டுள்ளனர்.

**புதுவைக்கு 60 பேர்**

புதுச்சேரிக்கு இரண்டு குழுக்கள் (60 பேர்), தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு தலா ஒரு குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். கூடுதலாக, இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள மக்களைக் கண்டுபிடித்து காப்பாற்ற உதவும் வகையில் மோப்ப நாய்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதில் ராணி, மிக்கி, லைக்கா மற்றும் ராம்போ ஆகிய நான்கு பயிற்சி பெற்ற மோப்ப நாய்கள் இடம் பெற்றுள்ளன. இந்த நாய்கள் பேரிடர்களின் போது இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள மக்களைக் கண்டுபிடித்து காப்பாற்றுவதற்கு மீட்புக் குழுவினருக்கு உதவுகின்றன.

**கனமழை எச்சரிக்கை: தமிழகம் முழுவதும் சனிக்கிழமை பள்ளிகளுக்கு விடுமுறை!**

அதி கனமழை எச்சரிக்கை காரணமாக தமிழகம் முழுவதும் அனைத்து பள்ளிகளுக்கும் சனிக்கிழமை விடுமுறை விடப்படுவதாக தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

**9 மாவட்டங்களில் கனமழை**

அந்த வகையில் இன்றும், நாளையும் 9 மாவட்டங்களில் அதி கனமழை வரை பெய்யும் என தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியில் இன்றும், நாளையும் தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வரை வீசக்கூடும். ஆந்திர கடலோரப் பகுதிகள், மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நாளை மறுநாள் வரை மணிக்கு 50 முதல் 80 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசும் என்பதால், மீனவர்கள் இந்த பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

ராமேசுவரம்பாம்பன் பாலம் பகுதியில் மணிக்கு 60.07 கி.மீ. வேகத்தில் காற்று வீசி வருவதால், ரெயில் போக்குவரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ராமேசுவரத்தில் இருந்து இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 4 மணிக்கு தாம்பரம் நோக்கி புறப்படும் ரெயில் மண்டபத்தில் இருந்து புறப்படும். இதேபோல், ராமேசுவரத்தில் இருந்து இன்று மாலை 5.50 மணிக்கு சென்னை எழும்பூர் நோக்கி புறப்படும் ரெயிலும் மண்டபத்தில் இருந்து புறப்படும் என்றுதெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கோவா சர்வதேச திரைப்பட விழாவில் ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’ பெற்ற ரஜினிகாந்த்!



**கோவா,நவ.29:**

கோவாவில் 20-ந்தேதி தொடங்கியது. இதில் பல்வேறு மொழிகளில் வெளியான திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

மேலும் திரைப்படம் சார்ந்த ஆவணப்படங்கள், ஆய்வறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட உள்ளன. சிறப்பு ஆய்வரங்குகள், பயிற்சி பட்டறைகளும் நடைபெற்றன.

இந்நிலையில் விழாவின் இறுதி நாளான இன்றைய நிகழ்வில், தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான ரஜினிகாந்த் சினிமாவில் 50 ஆண்டுகளைக் கடந்துள்ளதைச் சிறப்பிக்கும் வகையில் வாழ்நாள் சாத்தையாளர் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார்.

விருது பெற்றது குறித்து நடிகர் ரஜினிகாந்த் பேசுகையில், என்னை வாழவைக்கும் தெய்வங்களான தமிழ் மக்களுக்கு நன்றி. நான் நடிப்பையும் சினிமாவையும் காதலிக்கிறேன். 100 ஜென்மம் எடுக்கும் வாய்ப்பு கிடைத்தாலும் ஒரு நடிகனாக, ரஜினிகாந்தாகவே பிறக்க விரும்புகிறேன் எனக் கூறியுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில், மத்திய இணையமைச்சர் எல். முருகன், கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த விழாவை இந்திய தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகம் மற்றும் கோவா மாநில அரசு ஆகியவற்றால் இணைந்து நடத்தப்படுகிறது.

# கோவாவில் 77 அடி உயர ராமர் சிலையை திறந்து வைத்தார் பிரதமர் மோடி

**பனாஜி,நவ.29:**

கோவாவில் 77 அடி உயரமுள்ள ராமரின் வெண்கல சிலையை பிரதமர் நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார்.

தெற்கு கோவாவில் உள்ளஸ்ரீ சம்ஸ்தான் கோக்கரன் பர்த்தகலி ஜீவோட்டம் மடத்தின் 550-வது ஆண்டினைக் கொண்டாடும் சார்தா பஞ்சாஷ்டமனோத்சவ நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, அங்கு வெண்கலத்தால் செய்யப்பட்ட 77 அடி உயர ராமரின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். ஜீவோட்டம் மடம் உருவாக்கியுள்ள ராமாயண நிகழ்வுகளை சித்தரிக்கும் பூங்கா தோட்டத்தையும் அவர் திறந்து வைத்தார்.





சிறப்பு அஞ்சல் தலை மற்றும் நினைவு நாணயத்தை வெளியிட்டு உரையாற்றிய பிரதமர் மோடி, "இன்று இந்தியா ஒரு கலாச்சார மறுமலர்ச்சியை அனுபவித்து வருகிறது. அயோத்தியில் ராமர் கோயில் மறுசீரமைப்பு, காசி விஸ்வநாதர் கோயில் விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தல், உஜ்ஜயினியில் உள்ள மகாகாலேஸ்வர் கோயில் விரிவாக்கம் ஆகியவை நாட்டின் மீண்டும் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு மற்றும் ஆன்மிக பாரம்பரியத்தின் தீவிர மறுமலர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன.

பல நூற்றாண்டுகளாக ஏராளமான சவால்களை எதிர்கொண்ட போதிலும் கோவா, அதன் பாரம்பரியத்தை பாதுகாத்து படிப்படியாக வலுப்படுத்தி உள்ளது. கோவாவில் கோயில்கள், மரபுகள், மொழி என அனைத்தும் அச்சுறுத்தலுக்கு உள்ளான காலங்கள் இருந்தன. ஆனால் இந்த அழுத்தங்கள், சமூகத்தின் உறுதியை ஆழப்படுத்தி அதன் கலாச்சார அடையாளத்தை வலுப்பதின. ஒவ்வொரு கலாச்சார மாற்றத்திற்குப் பிறகும் கோவா அதன் அசல் வடிவத்தைப் பாதுகாத்து வருகிறது. இது கோவாவின் தனித்துவமான பண்பு.

ஸ்ரீ சம்ஸ்தான் கோக்கரன் பர்த்தகலி ஜீவோட்டம் மடம் ஐந்து நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஏராளமான சவால்களை எதிர்கொண்டு தப்பிப்பிழைத்து, தொடர்ச்சியின் அடையாளமாக நிற்கிறது.

காலங்கள் மாறின, நாட்டிலும் சமூகத்திலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. மாறி வரும் சவால்களுக்கு மத்தியில் மடம் அதன் திசையை இழக்கவில்லை. மாறாக, அது மக்களுக்கு வழிகாட்டும் மையமாக உருவெடுத்து நிற்கிறது. இதுவே அதன் மிகப் பெரிய அடையாளம்" என தெரிவித்தார்.த்வைத தத்துவத்தை பின்பற்றும்ஸ்ரீ சம்ஸ்தான் கோக்கரன் பர்த்தகலி ஜீவோட்டம் மடம் என்பது முதலாவது கௌட் சரஸ்வத் பிராமண வைஷ்ணவ மடமாகும். இது குஷாவதி ஆற்றங்கரையில் உள்ள பர்த்தகலியை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

## ஹாங்காங் தீவிபத்து: பலி எண்ணிக்கை 128 ஆக உயர்வு

**தாய்போ, நவ.29:**

சீனாவின் தன்னாட்சி பிராந்தியமான ஹாங்காங்கின் தாய்போ மாவட்டத்தில் உள்ள வாங் புக் கோர்ட் என்ற அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று முன்தினம் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அங்கு தலா 35 மாடிகளுடன் 8 அடுக்குமாடி கட்டிடங்கள் உள்ளன.

மொத்தம் 2 ஆயிரம் வீடுகளில் 4,800 பேர் வசித்து வருகின்றனர். இந்நிலையில், அடுக்குமாடி குடியிருப்பு தீ விபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 128 ஆக உயர்ந்துள்ளது. 70-க்கும் அதிகமானோர் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், மாயமான 200 தேடும் பணிகள் நடந்து வருகிறது. இதனால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப் படுகிறது.


தீ விபத்து தொடர்பாக மேலும் 6 பேரை போலீசார் கைது செய்துள்ளனர். தீ விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




# டிச.4-ல் இந்தியா வருகிறார் ரஷ்ய அதிபர் புதின்

**புதுடெல்லி,நவ.29:**

இந்தியா - ரஷ்யா வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இரண்டு நாள் பயணமாக டிச.4-ம் தேதி இந்தியா வருகிறார்.



இது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், “பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் 23-வது இந்தியா - ரஷ்யா வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக அரசு முறைப் பயணமாக டிச. 4ல் இந்தியா வருகிறார். டிச.5-ம் தேதி வரை அவரது பயணம் இருக்கும்.

இந்த பயணத்தின்போது, அதிபர் புதின், பிரதமர் நரேந்திர மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்துவார். ரஷ்ய அதிபர் புதினை வரவேற்கும் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, அவருக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் விருந்தளிக்கிறார்.

இந்த அரசுமுறைப் பயணம், இருதரப்பு உறவுகளில் நிலவும் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யவும், சிறப்பான, சலுகையுடன் கூடிய இருதரப்பு மூலோபாய கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கான தொலைநோக்குப் பார்வையை முன்வைக்கவும், பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இந்திய மற்றும் ரஷ்ய தலைமைக்கு வாய்ப்பாகும்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருக்குறள் குறள்-454

**மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்**
**கினத்துள தாகும் அறிவு**



ஒருவனுக்கு சிறப்பறிவு மனத்தில் உள்ளது போலக் காட்டி (உண்மையாக நோக்கும் போது) அவன் சேர்ந்த இனத்தில் உள்ளதாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



நடந்ததெல்லாம்
நன்மை என்று எண்ணி
விட்டால்.....

நடக்கப்
போவதெல்லாம்
நன்மையாகவே
கண்டிப்பாக முடியும்

**உஷா முத்துராமன்**

## நடிகர் சிவகுமாருக்கு கவுரவ டாக்டர் பட்டத்தை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்



தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை & கவின்கலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் நடிகர் சிவகுமாருக்கு கவுரவ டாக்டர் பட்டத்தை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

## தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் மாணவர்களுக்கு பரிசுகள்...!



**வந்தவாசி, நவ 29:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த கீழ்க்கொடுங்காலூர் - கன்னிகாபுரம் கிராமத்தில் சோனிக் தன்னார்வ அமைப்பின் அலுவலக திறப்பு விழா மற்றும் குழந்தைகள் தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு சிறப்பு அழைப்பாளராக, தொழிலதிபர் கவிஞர் அ.ஜ.இஷாக் பங்கேற்று அலுவலகத்தை திறந்து வைத்து, பள்ளி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். மேலும் இந்த நிகழ்ச்சியில் சோனிக் நிறுவனர் பி.லுசியன், தொண்டு நிறுவன மாவட்ட அமைப்பாளர் குமரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதா குமார், ஊராட்சி செயலாளர் சக்திவேல் முருகன், ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல் பா.சீனிவாசன், எஸ்ஆர்எம் கணினி மைய நிர்வாகி எ.தேவா, ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் கதிரவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வள்ளியூரில் ரூ.10 கோடியில் கட்டப்படும் பேருந்து நிலைய பணி



திருநெல்வேலி மாவட்டம் வடக்கு வள்ளியூரில் ரூ.10 கோடியில் கட்டப்படும் பேருந்து நிலைய பணிகளை அமைச்சர் நேரு நேற்று பார்வையிட்டார். உடன் அப்துல்வகாப் எம்எல்ஏ மற்றும் அதிகாரிகள், திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

## மாணவி களுக்கு விலையில்லா சைக்கிள்



பேராவூரணி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று மாணவி களுக்கு விலையில்லா சைக்கிள்களை அசோக்குமார் எம்எல்ஏ வழங்கினார்.

# உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் யாக வேள்வி பூஜை



**செய்யாறு நவ .29:**
செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் நேற்று சிறப்பு யாக வேள்வி பூஜை நடைபெற்றது.

ஆலய குரு சங்கர் குருஜி, பால சன்னியாசி லோகேஸ்வர சரஸ்வதி சுவாமிகள் ஆகியோர் சிறப்பு வழிபாடு நடத்தினர்.பின்னர் கலச புறப்பாடு நிகழ்வும்,அதனை தொடர்ந்து மூலவரான ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகமும், ஆராதனையும் நடைபெற்றது .திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# ஸ்ரீகாசி விஸ்வநாதர் சுவாமி ஆலயத்தில் மஹா சம்வத்ஸரா அபிஷேக 108 சங்காபிஷேகம்



**திருவாரூர், நவ.29:**
வலங்கைமான் அருகே உள்ள ஆதிச்சமங்கலம் ஸ்ரீ காசி விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீகாசி விஸ்வநாதர் சுவாமி ஆலயத்தில் மஹா சம்வத்ஸரா அபிஷேக 108 சங்காபிஷேகம் மற்றும் திருக்கல்யாண உற்சவ விழா நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அருகே உள்ள ஆதிச்சமங்கலம் கிராமத்தில் உள்ள ஸ்ரீ காசி விசாலாட்சி அம்பாள் சமேத ம்ரீ காசி விஸ்வநாதர் சுவாமி ஆலயத்தில் மஹா சம்வத்ஸரா அபிஷேக 108 சங்காபிஷேகம் மற்றும் திருக்கல்யாண உற்சவத்தை முன்னிட்டு காலை 8 மணிக்கு சுவாமிக்கும் அன்பாளுக்கும் மஹா சம்வத்ஸரா அபிஷேக 108 சங்காபிஷேகம் நடைபெற்று சிறப்பு அலங்காரத்தில் காட்சி அளித்தார், அதனைத் தொடர்ந்து தீபாராதனை நடைபெற்று பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் அருட்பிரசாதமும், அன்ன தானமும் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அம்பாளுக்கும், சுவாமிக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றது. நிகழ்வுக்கு பீடாதிபதி சங்கர நாராயணி பீடம் ஸ்ரீஸ்ரீசங்கர தீர்த்த சுவாமிகள் வருகை புரிந்தார், அவர் பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் அருட்பிரசாதமும் வழங்கி ஆசி வழங்கினார். அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் அன்னதானம் நடைபெற்றது. நிகழ்வில் ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இவ்வாலய மஹா சம்வத்ஸரா அபிஷேக 108 சங்காபிஷேகம் மற்றும் திருக்கல்யாண உற்சவத்தை ஆதிச்சமங்கலம் ஜெய. இளங்கோவன் மற்றும் கிராமவாசிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

# வலங்கைமான் வரதராஜன்பேட்டை மகா மாரியம்மன் ஆலயத்தில் உள்ள 6 நிரந்தர உண்டியல்கள் திறப்பு



**திருவாரூர், நவ.29:**
திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் வரதராஜன்பேட்டை தெருவில் மகா மாரியம்மன் ஆலயம் உள்ளது. இவ்வாலயம் தமிழகத்தில் தலை சிறந்த சக்தி தலங்களில் ஒன்றாகும். இவ்வாலயத்தில் உள்ள 6 நிரந்தர உண்டியல்கள் திறப்பு இந்துசமய அறநிலையத்துறை துணை ஆணையர்/ நகை சரிபார்ப்பு அலுவலர் ப. இராணி முன்னிலையில் ஆலய செயல் அலுவலர் கோ.கிருஷ்ணகுமார், தக்கார்/ ஆய்வர் க.மும்மூர்த்தி ஆகியோர் மேற்பார்வையில் திறந்து மஞ்சக்குடி சுவாமி தயானந்த கல்லூரி மாணவர்கள், தொழவூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், வலங்கைமான் விடியல் பாராமெடிக்கல் பயிற்சி பள்ளி மாணவிகள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் எண்ணிக்கை பணியில் ஈடுபட்டனர். 6 நிரந்தர உண்டியல்கள் மூலம் ரூபாய் 21,75,245 ரொக்கமும், பொன் இனங்கள் 0.203 கிராமும், வெள்ளி இனங்கள் 0.244 கிராமும் பக்தர்களால் காணிக்கையாக கிடைக்கப்பெற்றது.

## வெள்ளிக்கிழமை ஸ்ரீவாசவி அம்மன் சிறப்பு வழிபாடு



**பொள்ளாச்சி, நவ.29:**
பொள்ளாச்சி மாவட்டம் ஆனைமலை வட்டம் கோட்டூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடு ஸ்ரீ வாசவி அம்மன் மஞ்சளினால் அலங்கரித்து வண்ணமலர் மாலைகளுடன், தங்க ஆபரணங்களுடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, பெண்கள் அனைவரும் பாட்டுக்கள் பாடி தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு ஸ்ரீ வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திருதிய சோபன் பயிற்சி



செய்யாறு கல்வி மாவட்டம் புளியரம்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் பயிலும் சாரணியர் இயக்க மாணவிகள் சாரணிய ஆசிரியை ஏ. மலைமணி மேற்பார்வையில் நேற்று செய்யாறு இந்தோ- அமெரிக்கன் மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற திருதிய சோபன் பயிற்சி வகுப்பில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். தலைமையாசிரியர் ப. சந்திரசேகரன் உள்ளிட்ட ஆசிரியர்கள் ,பெற்றோர்கள் சாரணிய மாணவிகளுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

## ஸ்ரீ வரசித்தி விநாயகர் வெள்ளிக் கவசத்தில் அருள் பாலிப்பு!



**வேலூர், நவ. 29:**
வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், வள்ளிமலை ரோட்டில் உள்ள ஸ்ரீவரசித்தி விநாயகர் கோயிலில் வெள்ளிக்கிழமை காலை நடை திறக்கப்பட்டு ஸ்ரீ வரசித்தி விநாயகருக்கு அபிஷேக ஆராதனைகள் நடந்தது. இதையடுத்து தீப, தூப ஆராதனைகள் நிறைவு பெற்று பக்தர்கள் ஸ்ரீவரசித்தி விநாயகரை வழிபட்டனர். ஸ்ரீவர சித்தி விநாயகர் வெள்ளிக் கவசத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். பூஜையில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஜெயக்குமார் குருக்கள் செய்திருந்தார்.

## மாரியம்மன் தேர் திருவிழா



மொடக்குறிச்சி மாரியம்மன் தேர் திருவிழாவில் தொகுதி எம்எல்ஏ சரஸ்வதி மக்களுடன் சேர்ந்து தேரை வடம் பிடித்து இழுத்தார்.

## துணை முதல்வருக்கு கமல்ஹாசன் பிறந்தநாள் வாழ்த்து



துணை முதல்வர் உதயநிதியை மக்கள் நீதிமய்யம் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து கூறினார்.

## முன்னாள் அமைச்சர் ஹண்டே 99வது பிறந்தநாள்



பாஜக மூத்த தலைவர் முன்னாள் அமைச்சர் ஹண்டே 99வது பிறந்தநாளில் மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்து அவரிடம் வாழ்த்து பெற்றார்.

## விழிப்புணர்வு பிரச்சார வாகனம்



நாகர்கோவிலில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை கலெக்டர் அழகுமீனா கொடியசைத்து துவக்கி வைத்தார்.

## மேட்டுப்பாளையம் தொகுதியில் பிரேமலதா



மேட்டுப்பாளையம் தொகுதியில் மக்களை சந்தித்த தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா.

## புதிதாக கட்டப்படவுள்ள மினி ஜவுளிப் பூங்கா கட்டடத்திற்கு கனிமொழி எம்.பி. அடிக்கல்




ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம் முப்பிலிவெட்டி கிராமத்தில் புதிதாக கட்டப்படவுள்ள மினி ஜவுளிப் பூங்கா கட்டடத்திற்கு கலெக்டர் இளம்பகவத் தலைமையில், அமைச்சர் கீதாஜீவன் முன்னிலையில் கனிமொழி எம்.பி. அடிக்கல் நாட்டினார்.

# வேலூர் ஹாக்கி வீரர்கள் சென்னைக்கு பயணம்!



**வேலூர், நவ.29:**
வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து நவம்பர் 28ஆம் தேதி சென்னையில் தொடங்கும் உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியினை காண்பதற்காக வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 55 ஹாக்கி வீரர்கள் மற்றும் 55 வீராங்கனைகள் பேருந்துகள் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதனை வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கொடியசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு வாழ்த்துகளையும் அப்போது மாவட்ட ஆட்சியர் தெரிவித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தயார் நிலையில் 6 ஆயிரம் நிவாரண முகாம்கள்: அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தகவல்

**சென்னை, நவ.29:**

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால், தமிழகத்தின் டெல்டா மற்றும் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதையடுத்து, நேற்று சென்னை சேப்பாக்கம் எழிலக வளாகத்தில் உள்ள அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அவர் கூறியதாவது: நீர்த்தேக்கங்களில் உபரிநீர் இருப்பினை முன்கூட்டியே திறத்தல் மற்றும் முறையான நீர் மேலாண்மையின் மூலம் நகரம் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் ஏற்படாமல் பாதுகாக்குமாறும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய தாழ்வான பகுதிகளை தொடர்ந்து கண்காணிக்குமாறும் தேவைக்கேற்ப பொது மக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்க வைக்குமாறும் மாவட்ட நிர்வாகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள 122 பல்நோக்கு பேரிடர் பாதுகாப்பு மையங்களும், 6,033 தற்காலிக நிவாரண முகாம்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அலுவலர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பேரிடரை எதிர்கொள்ள அனைத்து உபகரணங்களுடனும் தயார் நிலையில் உள்ளது. தேசிய பேரிடர் மீட்புப் படையின் ஒரு அணி நெல்லையிலும், ஒரு அணி விழுப்புரம் மாவட்டத்திலும், ஒரு அணி சென்னையிலும் முன்கூட்டியே நிறுத்தப்பட்டுள்ளன. கூடுதலாக 5 அணி அரக்கோணத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. ஆய்வின்போது, வருவாய் நிர்வாக ஆணையர் எம்.சாய்குமார், துறை செயலர் பெ.அமுதா, பேரிடர் மேலாண்மை ஆணையர் சிஜிதாமஸ் வைத்யன் உடனிருந்தனர்.

## சட்டப் போராட்டத்தில் வென்று மருத்துவரான 3 அடி உயர கணேஷ்!



**அகமதாபாத், நவ.29:**

குஜராத்தில் 3 அடி உயர கணேஷ் பாரையா, சட்டப் போராட்டத்தில் வென்று இன்று மருத்துவராக திகிழ்கிறார்.

குஜராத்தின் பாவ்நகர் மாவட்டத்தில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்தவர் கணேஷ் பாரையா. மூன்று அடி உயரம் மட்டுமே கொண்ட இவர், 20 கிலோவுக்கும் குறைவான எடை கொண்டவர். மேலும் உடல் இயக்க குறைபாடும் இவருக்கு உள்ளது. எனினும் மருத்துவராகி சேவையாற்ற வேண்டும் என்பது இவரது கனவாக இருந்தது.

இந் நிலையில் கடந்த 2018-ம் ஆண்டு இவரது உயரத்தை மட்டுமே காரணமாக கூறி எம்பிபிஎஸ் அட்மிஷன் அளிக்க இந்திய மருத்துவ கவுன்சில் (எம்சிஐ) மறுத்துவிட்டது. உடல்ரீதியிலான குறைபாடு மருத்துவராக பணியாற்றுவதற்கு தடையாக இருக்கும் என்று எம்சிஐ கூறியது. இதையடுத்து கணேஷ், பிஎஸ்சி படிப்பில் சேர்ந்தார். அதே வேளையில் பள்ளி முதல்வர் உதவியுடன் எம்சிஐ முடிவுக்கு எதிராக குஜராத் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். எனினும் அவரது வாதத்தை உயர் நீதிமன்றம் ஏற்கவில்லை. இதையடுத்து உச்ச நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்தார். 4 மாதங்களுக்கு பிறகு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், உயரத்தை காரணமாக கூறி கணேஷுக்கு எம்பிபிஎஸ் அட்மிஷன் மறுக்கக் கூடாது" என உத்தரவிட்டது. இதையடுத்து 2019-ல் பாவ்நகர் மருத்துவக் கல்லூரியில் கணேஷ் சேர்க்கை பெற்றார். 5 ஆண்டுகள் மருத்துவப் படிப்புக்கு பிறகு ஓராண்டு மருத்துவப் பயிற்சியையும் அவர் இந்த ஆண்டு நிறைவு செய்தார். தற்போது அவர் தனது விருப்பப்படி கிராமப்புறத்தில் பணியாற்றி வருகிறார்.

## குழந்தைகள் நலன் பேணும் நிறுவனங்களுக்கு சேவை விருதுகளை வழங்கினார் முதல்வர்




**சென்னை, நவ.29:**

சமூக நலத்துறை சார்பில் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டபடி, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் இயக்ககத்தின் கீழ் செயல்படும் நிறுவனங்கள், அலகுகளை அங்கீகரிப்பதற்காகவும், ஊக்குவிப்பதற்காகவும் குழந்தைகள் நலன் - சேவை விருதுகள் வழங்கப்படுகிறன்ன.

இந்த ஆண்டுக்கான விருதுகள் - அரசு குழந்தைகள் இல்லங்கள் என்ற பிரிவில் தஞ்சாவூர் அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசினர் குழந்தைகள் இல்லம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கீழ் செயல்படும் குழந்தைகள் இல்லங்கள் என்ற பிரிவில் தூத்துக்குடி புனித மரியன்னை கருணை இல்லம், சட்டத்துக்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள் என்ற பிரிவில் சென்னை அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு என்ற பிரிவில் ராமநாதபுரம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு ஆகியவற்றுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் விருது வழங்கினார்.

பரிசுத் தொகையாக தலா ரூ.1 லட்சத்துக்கான காசோலைகளையும் வழங்கினார்.

அமைச்சர் கீதாஜீவன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், சமூக நலத் துறைச் செயலர் ஜெய ஸ்ரீமுரளிதரன், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் பங்கேற்றனர் என்று தமிழக அரசு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## ஆருத்ரா நிறுவனம் தொடர்புடைய இடங்களில் சோதனை ரூ.1.50 கோடி சொத்து ஆவணங்கள் பறிமுதல்

**சென்னை, நவ.29:**




சென்னை அமைந்தகரையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வந்த ஆருத்ரா கோல்டு டிரேடிங் என்ற நிதி நிறுவனம் 2020-22 வரை, முதலீட்டாளர்கள் ஒரு லட்சம் பேருக்கு அதிக வட்டி தருவதாகக் கூறி ரூ.2,438 கோடி மோசடி செய்ததாக புகார் எழுந்தது.

இதையடுத்து பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார், அந் நிறுவனத்தின் இயக்குநர்கள் ராஜசேகர், அவரது மனைவி உஷா உள்ளிட்ட 24 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இதில் சட்டவிரோத பணப்பரிவர்த்தனை நடந்திருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து, பொருளாதார குற்றப்பிரிவு பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அடிப்படையில் அமலாக்கத்துறையும் தனியாக வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தது. இதன் தொடர்ச்சியாக சென்னை உட்பட 15-க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை நேற்று முன்தினம் சோதனை நடத்தியது.

சோதனை தொடர்பாக அமலாக்கத் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஆருத்ரா நிறுவனம் பல்வேறு வட்டி சலுகைகளை அறிவித்து 1,04,433 பேரிடமிருந்து ரூ.2,438 கோடி வைப்புத் தொகையாகப் பெற்று மோசடி செய்துள்ளது. இந்த வழக்கில் இதுவரை பொருளாதார குற்றப்பிரிவு 40 தனி நபர்கள், நிறுவனங்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இந்நிலையில் அமலாக்கத் துறை விசாரணையில், ஆருத்ரா நிறுவனத்தின் வங்கிக் கணக்குகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் கணக்குகளில் சுமார் ரூ.2 ஆயிரம் கோடி பரிவர்த்தனைகள் நடந்திருப்பது தெரிய வந்துள்ளது. மேலும் ரூ.10 லட்சத்துக்கு மேல் நடைபெற்ற 1,230 பரிவர்த்தனைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

இதில் பெரும்பாலான பரிவர்த்தனைகள், பொதுமக்களின் வைப்புத் தொகையைத் தனிப்பட்ட மற்றும் வர்த்தகம் அல்லாத நோக்கங்களுக்காக நிறுவனத்தின் பல வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருப்பது தெரியவந்தது.

மேலும் இதில் ஆருத்ரா நிறுவனத்தின் சில இயக்குநர்கள் பெயரளவிலானவர்கள் என்றும், மோசடியில் அவர்களுக்கு எந்தப் பங்கும் இல்லை என்றும் தெரியவந்தது.

இதையடுத்து நேற்று முன்தினம் சென்னை, காஞ்சிபுரம், மும்பை, கொல்கத்தா உள்ளிட்ட 21 இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.1.50 கோடி மதிப்புள்ள சொத்து ஆவணங்கள், ரூ.22 லட்சம் பணம், மோசடி தொடர்பான ஆவணங்கள், டிஜிட்டல் ஆதாரங்கள், சொத்து உரிமை ஆவணங்கள், நிதிப் பட்டுவாடா மற்றும் பிற முதலீடுகள் தொடர்பான ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தமிழக முதல்வர் என் தொகுதிக்கு நிறைய செய்திருக்கிறார்" - நயினார் வழங்கிய நற்சான்று

**நெல்லை, நவ.29:**

முதலமைச்சர் என் தொகுதிக்கு பாலம், ரோடு, கல்லூரி என நிறைய நன்மைகளைச் செய்துள்ளார். அதேபோல் மக்களுக்கும் பொங்கல் பரிசாக ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும் என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது: நான் யாரையும் சந்திப்பதற்காக டெல்லி செல்லவில்லை. அது என்னுடைய சொந்தப் பயணம். முந்தா நாள் மதியம் சென்றுவிட்டு நேற்று காலையில் திரும்பிவிட்டேன். இதில் அரசியல் உள்நோக்கம் எதுவும் இல்லை. செங்கோட்டையன் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்திருப்பதால் அதிமுக - பாஜக கூட்டணிக்கு எந்தப் பின்னடைவும் இல்லை.

செங்கோட்டையன் 1977 முதல், 50 ஆண்டுகளாக அரசியலில் இருக்கும் மூத்த தலைவர். எம்ஜிஆர், ஜெயலலிதா மற்றும் எடப்பாடி பழனிசாமி ஆகியோரின் அமைச்சரவையில் பணியாற்றியவர். அதிமுக-வை பொறுத்தவரை அதற்கென தனி வாக்கு வங்கி உள்ளது. ஒரு தலைவர் விலகிச் செல்வதால் அந்த வாக்கு வங்கி அப்படியே அவருடன் செல்லுமா என்பது கேள்விக்குறிதான். தேர்தலுக்குப் பின்னரே அதன் தாக்கம் தெரியும்.

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் 2026-ல் கூட்டணி ஆட்சி அமையும் எனக் கூறி உள்ளார். கருத்துச் சொல்ல அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், எஜமானர்களான வாக்காளர்களே அதை முடிவு செய்வார்கள். 2006-ல் திமுக மைனாரிட்டி அரசை அமைத்ததைத் தவிர, தமிழக வரலாற்றில் தனிப்பெரும்பான்மை கொண்ட ஆட்சியைத்தான் மக்கள் தேர்வு செய்துள்ளனர்.



திமுக ஆட்சிக்கு வந்த பிறகு சொத்துவரி மற்றும் மின்கட்டணத்தை 300 சதவீதம் உயர்த்தியுள்ளது. சொன்ன வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. ஆனால், பொங்கல் பண்டிகை வரவுள்ள நிலையில், கடந்த முறை ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள். இந்த முறை மக்கள் ரூ.5 ஆயிரம் எதிர்பார்க்கிறார்கள்.

முதலமைச்சர் என் தொகுதிக்கு பாலம், ரோடு, கல்லூரி என நிறைய நன்மைகளைச் செய்துள்ளார். அதேபோல் மக்களுக்கும் பொங்கல் பரிசாக ரூ.5000 வழங்க வேண்டும் என்று நானும் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் இந்த அரசால் லட்ச ரூபாய் வரைக்கும் நஷ்டத்தில் இருக்கையில், வெறும் ஆயிரம் ரூபாய் கொடுத்தால் ஓட்டுப் போடுவார்களா என்பது சந்தேகமே.

உலகின் மிகப்பெரிய கட்சி: பாஜக சுமார் 1,600-க்கும் மேற்பட்ட எம்எல்ஏ-க்கள், 300-க்கும் மேற்பட்ட எம்பி-க்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய கட்சி. தம்பி விஜய் இப்போது தான் கட்சி ஆரம்பித்திருக்கிறார். அவர் இன்னும் ஒரு கவுன்சிலர் கூட ஆகவில்லை. அப்படிப்பட்டவர், எடுத்தவுடனேயே லாங் ஜம்ப் செய்து உலகத்தையே தாண்டுவேன் என்று சொல்வது சரியாக இருக்காது. தேர்தலில் நின்று தன் பலத்தை நிரூபித்த பிறகு பேசலாம். எம்ஜிஆர் கட்சி ஆரம்பிக்கும் முன்பே எம்எல்ஏ-வாகவும், திமுக-வின் முகமாகவும் இருந்தார். ஆனால் விஜய் இப்போது நடிகராக மட்டுமே உள்ளார்.

பாஜகவுக்கேவந்திருக்கலாமே..

அதிமுக-வில் இருந்துகொண்டு பாஜக-வை நம்பினோம் என்று செங்கோட்டையன் சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்கும்? செங்கோட்டையன் தவெக-வில் இணைந்ததன் பின்னணியில் பாஜக இருப்பதாகத் திருமாவளவன் சொல்வது தவறானது. பாஜக பின்னணியில் இருந்தால் அவர் ஏன் தவெக-வுக்குச் செல்ல வேண்டும்; பாஜக-வுக்கே வந்திருக்கலாமே.

பழனிசாமியின் போக்கு காரணமாகவே நிர்வாகிகள் வெளியேறுகிறார்களா என்று கேட்கிறீர்கள். அடுத்த கட்சிகளின் உள்கட்சி விவகாரங்கள் குறித்து பேசுவது நாகரிகமாக இருக்காது. டிடிவி. தினகரன் கூறியது போல் மூன்றாவது அணி அமைந்தாலும், நான்காவது அணி அமைந்தாலும், 2026-ல் தேசிய ஜனநாயக கூட்டணிதான் ஆட்சியைப் பிடிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### வெட்டிவேரின் மகத்துவம்!

* பொதுவாகவே வெட்டிவேர் இருக்கும் இடத்தில் காற்று மாசுபாடானது கட்டுக்குள் இருக்கும். காற்றில் இருக்கும் மாசுகளை வெட்டிவேரானது நீக்கும் தன்மை பெற்றது.

* சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் வெட்டிவேர் மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

* வெட்டிவேரின் மூலம் உடல் சோர்வு நீங்கி உடலில் உள்ள அணுக்கள் புதுப்பிக்கப்படுகின்றன. பெண்கள் உடலில் இருக்கக்கூடிய சுரப்பிகள் முறையாக வேலை செய்வதற்கு பயன் படுகிறது.

* தோலில் இறந்த செல்கள் அதிகமாக இருந்தால் தோலானது பளபளப்பாக இருக்காது. அப்படி உள்ள இடங்களிலும் செல்களைப் புதுப்பித்து தோலை பளபளப்பாக ஆக்கிவிடும்.

*வெட்டிவேரானது உடல் இயக்கத்திற்கு தேவையான எரிசக்தியை அளிப்பதால் சாப்பிடும் உணவை எளிதில் ஜீரணிக்க உதவுகிறது.

* மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட விஷத்தின் தன்மையை முறிக்கிற சக்தி வெட்டிவேருக்கு உண்டு.

* பல நாடுகளில் இந்த வெட்டிவேரை தியானம் செய்வதற்கு பயன்படுத்துகிறார்கள். காரணம், சுற்றுச்சூழலை சுத்தப்படுத்துகிறது.

*வெட்டிவேரானது சாதாரண புல்லாக இருந்தாலும் பலதரப்பட்ட பலன்களை உடையதாக உள்ளது.

### பித்தத்தை குறைக்கும் தேங்காய்



பொதுவாக தேங்காயை பலகார வகைகளுக்கும், சமையலுக்கும் ருசிக்காக பயன்படுத்துவர். ஆனால் தேங்காயை உணவில் சேர்த்துக் கொள்வதால் பலவித நன்மைகளை பெறலாம்.

* நன்றாக முற்றின தேங்காயை உடைத்து துருவி, பால் எடுத்து, தினசரி காலையில் ஒரு கப் சாப்பிட்டு வந்தால் உடல் நல்ல பலம் பெறும்.

* தேங்காய்ப்பாலுடன், எலுமிச்சம் பழச்சாற்றையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் பித்தம் சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

* வாத நோயினால் கஷ்டப்படுபவர்கள் தினசரி உணவில் தேங்காயை சேர்த்து சாப்பிட்டு வந்தால் நோயின் தாக்கம் தணியும்.

* தேள் கொட்டி விஷம் ஏறி கஷ்டப்படுகிறவர்களுக்கு ஒன்பது மிளகை எடுத்து, ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து மென்று சாப்பிட்டு விட்டு, ஒரு முற்றிய தேங்காயின் அரை மூடியை பல துண்டுகளாக்கி, நன்றாக மென்று சாப்பிட்டால் விஷம் இறங்கிவிடும். கடித்த இடத்தில் ஏற்படும் கடுப்பு நின்று விடும்.

இப்படி பல வகை பயன்களும் தரக்கூடிய தேங்காயை உணவில் தினமும் சேர்த்துக் கொண்டு நன்மைகளை பெறலாம்.

### எளிய வீட்டு வைத்தியம்

* வெதுவெதுப்பான வெந்நீரில் எலுமிச்சை பழச்சாறு பிழிந்து, அதனுடன் சிறிது உப்பு, தேன் கலந்து குடித்தால், பசி எடுக்கும். சோர்வு, மயக்கம் வராது.

* மூன்று (அ) நான்கு உலர்ந்த அத்திப்பழம் தினமும் சாப்பிட்டு வந்தால் உடம்பில் நார்ச்சத்து கூடும்.

* நார்ச்சத்து அதிகரிக்க தினமும் ஆரஞ்சு, பேரீச்சை பழங்கள் சாப்பிடலாம்.

* 10 அல்லது 15 துளசி இலையை தண்ணீரில் கொதிக்க வைத்து, அந்த நீரை அருந்தினால், சளி, இருமல் போய்விடும்.

* சிறிதளவு பூண்டு பல் எடுத்து, தண்ணீரில் கொதிக்கவிட்டு, அந்த நீரை பருகினால் காய்ச்சல் பறந்து விடும்.

# மயக்க ஸ்பிரே அடித்து நகை கொள்ளை: ராஜஸ்தான் மாநில கொள்ளையர்கள் 3 பேர் கைது



**சென்னை, நவ.29:**

நகைக் கடையில் மயக்க ஸ்பிரே அடித்து தங்க நாணயக் கொள்ளையில் ஈடுபட்ட ராஜஸ்தான் மாநில கொள்ளையர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் ஜுவல்லரி உரிமையாளர் என்பதும் கொள்ளையடித்த நகைகளை வைத்துநகைக்கடை ஆரம்பித்த தகவலும் வெளியாகியுள்ளது.

சென்னை எழுகிணறு பகுதியைச் சேர்ந்தவர் ஜெகதீஷ் (34). யானைக்கவுனி, வெங்கட்ராயன் தெருவில் நகைப் பட்டறையுடன் கூடிய நகைக் கடை நடத்தி வருகிறார்.

கடந்த 24-ம் தேதி மாலை அவர் வழக்கம்போல் கடையில் இருந்தார். அப்போது, அங்கு வந்த இருவர் தங்கக் காசுகள் வாங்குவது போல கடைக்குள் வந்து, தங்க நாணயத்தில் முத்திரை பதிக்க வேண்டும் என்று கேட்டனர்.

ஜெகதீஷ் உள்ளே சென்று முத்திரை பதிக்கும்போது, திடீரென அவரைத் தாக்கி முகத்தில் ஸ்பிரே அடித்து மயக்கமடையச் செய்தனர். பின்னர் அங்கிருந்த ரூ.60 லட்சம் மதிப்புள்ள 750 கிராம் தங்க நாணயங்கள், வெள்ளி நாணயங்கள் மற்றும் தாமிரத் தகடுகளை கொள்ளையடித்து தப்பினர்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு மயக்கம் தெளித்த ஜெகதீஷ், இதுகுறித்து யானைக்கவுனி காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார்.

அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் கொள்ளையில் ஈடுபட்டது ராஜஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிந்தது.

இதையடுத்து, சென்னை போலீஸார் ராஜஸ்தான் மாநிலத்துக்கு விரைந்து, அங்கு பாலி மாவட்டம், கர்மாவாஸ் பட்டா கிராமத்தைச் சேர்ந்த வர்தாராம் என்ற வினோத் (33), அதே மாநிலத்தைச் சேர்ந்த சர்வான் குர்ஜார் (19), ஓம்பிரகாஷ் (23) ஆகிய 3 பேரை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

பின்னர் அங்குள்ள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சென்னை அழைத்து வந்து சிறையில் அடைத்தனர். முன்னதாக அவர்களிடமிருந்து 414.8 கிராம் தங்க நாணயங்கள், 36 கிராம் வெள்ளி நாணயங்கள் மற்றும் 295 கிராம் தாமிரத் தகடுகள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்டவர் தாராம் ராஜஸ்தானில் கே.கே. ஜுவல்லர்ஸ் என்ற பெயரில் நகைக்கடை நடத்தி வருவதும், கொள்ளையடித்த நகைகளைக் கொண்டு ராஜஸ்தானில் நகைக் கடை ஆரம்பித்து நடத்தி வந்ததும் தெரியவந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.




## தங்கம் விலை பவுனுக்கு ரூ.560 உயர்வு!

**சென்னை, நவ.29**

தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.560 உயர்ந்து ரூ.94,720-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அந்த வகையில், அக்.17-ம் தேதி ரூ.97,600-ஆக விலை அதிகரித்து, வரலாறு காணாத புதிய உச்சத்தை தொட்டது. அதன்பிறகு கடந்த 28-ம் தேதி ஒரு பவுன் தங்கம் ரூ.88,600 ஆக குறைந்தது. தொடர்ந்து தங்கம் விலை ஏற்ற இறக்கமாக இருக்கிறது.

இந்த நிலையில், சென்னையில் (நவ.28) தங்கம் விலை பவுனுக்கு ரூ.560 உயர்ந்து, ரூ.94,720-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராம் தங்கம் ரூ.70 உயர்ந்து, ரூ.11,840-க்கு விற்கப்படுகிறது.

இதுபோல, வெள்ளி கிராமுக்கு ரூ.3 உயர்ந்து, ரூ.183 ஆகவும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.3,000 உயர்ந்து, ரூ,1.83 லட்சமாகவும் உள்ளது. அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு வீழ்ச்சி கண்டு ரூ.89.50 ஆக உள்ளது. இத்துடன், தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பதும் ஆபரணத் தங்கத்தின் விலை உயர்வுக்கு காரணமாக உள்ளது.

## கல்லறை, பட்டா சிக்கல்களுக்கு விரைவில் தீர்வு: மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் தகவல்

**சென்னை, நவ.29:**

'கல்லறை, பட்டா சிக்கல்களுக்கு டிசம்பர் மாதத்துக்குள் தீர்வு காணப்படும்' என மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் தெரிவித்தார். தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் ஆணையக் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் தமிழகம் முழுவதும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நடந்து வருகிறது.



அதன் நிறைவாக சென்னை மாநகருக்கான கலந்தாய்வுக் கூட்டம், மாநகராட்சி ரிப்பன் கட்டிட வளாக கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் சொ.ஜோ.அருண் சே.ச தலைமையில் நடந்த கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் சிறுபான்மையினர் சமூகங்களின் தலைவர்கள் மற்றும் பொதுமக்களை சந்தித்து, அவர்களது கருத்துகளை ஆணையத் தலைவர் கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: மாநிலம் முழுவதும் ஆய்வு செய்து, 1,477-க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களைப் பெற்றுள்ளோம். இவற்றுள் 1,156 கோரிக்கைகளுக்கு கூட்ட அரங்கிலேயே தீர்வு கண்டிருக்கிறோம். சிலவற்றுக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

சிறுபான்மையினருக்கு முக்கிய பிரச்சினையாக இருப்பது கல்லறை மற்றும் கபர்ஸ்தான் வசதி இல்லாமைதான். அந்தவகையில் கல்லறை அமைக்க இடங்கள் வேண்டும், இடமிருக்கும் இடத்தில் அதற்குப் பட்டா வேண்டும், பட்டா வழங்கப்பட்ட இடத்தில் சுற்றுச்சுவர் அமைத்தல், பாதுகாப்பு மற்றும் கட்டுமானத்துக்கான உதவித்தொகை வேண்டும் என்ற கோரிக்கைகளே அதிகமாக வைக்கப்பட்டுள்ளன.

அதேபோல் ஆலயங்கள், மசூதிகள், சமண விகார்கள், பவுத்த விகார்கள் போன்ற வழிபாட்டுத் தலங்களுக்கு தடையில்லாச் சான்றிதழ் வேண்டும் என்றும், 10 ஆண்டுகள், 50 ஆண்டுகள், 100 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கும் இடங்களுக்கு பட்டா வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. பட்டா இல்லாததால், புனரமைப்பு மற்றும் பழுதுபார்க்கும் நிதியைப் பயன்படுத்த முடியாமல் போகிறது.

மாநிலம் முழுவதும் உள்ள கல்லறை மற்றும் பட்டா பிரச்சினைக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் தீர்வு காண்பதை விட, மாநில அளவில் ஓர் அரசாணையாக வெளியிட்டுத் தீர்வுகாண வேண்டும் என முதல்வரிடம் பரிந்துரை வைத்துள்ளோம்.

## இந்தியாவை வளர்ந்த நாடாக்க கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும்: அண்ணா பல்கலை. முன்னாள் துணைவேந்தர் வலியுறுத்தல்

**சென்னை, நவ.29:**

சென்னை சகோதயா பள்ளி கூட்டமைப்பின் சார்பில் சிபிஎஸ்இ பள்ளிகளின் முதல்வர்களுக்கான 'தேசிய அளவில் கற்றல், கற்பித்தலில் உள்ள சவால்கள்' குறித்த கருத்தரங்கம் சென்னையில் நடைபெற்றது.

இதில் அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் இ.பாலகுருசாமி பேசியதாவது: சுதந்திரம் பெற்று நீண்ட காலமாகியும் ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளைப் போல் நாம் முன்னேற முடியவில்லை. நாம் முன்னேற சிறந்த கல்வி, தனிநபர் வருமானம், ஆரோக்கியம் ஆகியவை முக்கியமாகும். அதிலும் முக்கியமானது கல்வி. நாட்டில் 78 சதவீதம் எழுத்தறிவு பெற்றவர்களாக மாறிவிட்டோம். பொறியியல், வானியல் துறைகளில் நாம் முன்னேறியுள்ளதாக கூறிக் கொள்கிறோம். ஆனால், அதனால் நமக்கு பெரிய அளவில் பயனில்லை.

நிலவில் தண்ணீர் உள்ளதை கண்டறிந்தோம். அதனால் நம் குக் கிராமங்களுக்கு குடிநீர் கிடைக்கப்போகிறதா? திறமையை வளர்க்கும் கற்றல்தான் முக்கியம். நம் நாட்டின் பொருளாதாரம் வளர்ந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் தனிநபர் வருமானத்தில் மோசமாக உள்ளோம். தற்போது நீதி, நேர்மை, உண்மை, தைரியத்தை வளர்க்கும் ஆசிரியர்கள்தான் தேவை. ஏனெனில் நாட்டில் உள்ள ஐஏஎஸ் உள்ளிட்ட உயரிய பதவிகளில் உள்ளவர்களில் 50 சதவீதம் பேரும், பல்கலைக்கழக துணைவேந்தர்களில் 70 சதவீதம் பேரும் ஊழல்வாதிகளாகவே உள்ளனர். 2020-ல் இந்தியாவை வளர்ந்த நாடாக்க வேண்டுமென்ற கனவுடன் அப்துல்கலாம் செயல்பட்டார். அவர் கனவு கடந்து ஐந்தாண்டுகளாகிவிட்டன. தற்போது பிரதமர் மோடி 2047-ல் வளர்ந்த நாடாக்குவேன் எனக் கூறுகிறார். நம் நாட்டின் அடிப்படை கல்வியின் கட்டமைப்பை மாற்றாதவரை நாடு முன்னேறுவது கனவுதான். இந்தியாவை வளர்ந்த நாடாக்க, நம் கல்வி, ஆசிரியர், மாணவர்கள் தரத்தில் உயர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா 5ம் நாள்: கண்ணாடி ரிஷப வாகனத்தில் சந்திரசேகரர் வீதிஉலா

4ம் நாள் (27-11-2025)














5ம் நாள் (28-11-2025)







**திருவண்ணாமலை, நவ.29:**

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் 4-ம் நாளான நேற்று காலை 10 மணி அளவில் வெள்ளி மூஷிக வாகனத்தில் விநாயகரும், நாக வாகனத்தில் அம்பாளுடன் சந்திரசேகரரும் சிறப்பு அலங்காரத்தில் அருணாசலேஸ்வரர் கோவில் ராஜகோபுரம் எதிரே உள்ள 16கால் மண்டபத்தில் எழுந்தருளினர்.

இதைத்தொடர்ந்து சாமிக்கு சிறப்பு பூஜைகள் நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து மேள தாளங்கள் முழங்க விநாயகரும், அதன் பின்னர் நாக வாகனத்தில் சந்திரசேகரரும் கோவில் மாடவீதிகளை சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். மாட வீதிகளில் பக்தர்கள் தங்களின் வீடுகளின் அருகே சாமி வந்ததும் தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி வழிபட்டனர். இரவு 10 மணியளவில் நடைபெற்ற உற்சவத்தில் பஞ்சமூர்த்திகளான விநாயகர், வள்ளி, தெய்வானையுடன் முருகர், உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகிய சாமிகள் வெள்ளி கற்பக விருட்சம்,காமதேனுவாகனம் மற்றும் இதர வெள்ளி வாகனங்களில் எழுந்தருளி கோவில் மாடவீதிகளை சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

கார்த்திகைதீபத்திருவிழா ஐந்தாம் நாள் காலை உற்சவத்தில் கண்ணாடி ரிஷப வாகனங்களில் விநாயகர் மற்றும் அம்பாளுடன் சந்திரசேகரர் வீதி உலா வந்து அருள்பாலித்தார்.

தீபத்திருவிழாவின்போது சாமி வெள்ளி பெரிய ரிஷப வாகனத்திலும், வெள்ளி ரதத்திலும் எழுந்தருளி மாடவீதி உலா வருவது முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். அதன்படி நேற்று (வெள்ளிக்கிழமை) இரவு சாமி வெள்ளி பெரிய ரிஷப வாகனத்தில் எழுந்தருளினார். தொடர்ந்து (சனிக்கிழமை) இரவு வெள்ளி ரதத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறார். (ஞாயிற்றுக்கிழமை) பஞ்சமூர்த்திகள்தேரோட்டம் நடைபெற உள்ளது.

# இரண்டாம் அதிர்ச்சி



கடிதத்தைப் படித்த சீதா, தன் கண்கள் வழிந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைக்கவில்லை. அவளது உதடுகள் மெல்லிய புன்னகையில் விரிந்தன. பொங்கி வழிந்த பாலைச் சுத்தம் செய்ய வேண்டும் என்ற பதற்றம்கூட இப்போது இல்லை. அவளது பார்வையில் கடிதத்தில் இருந்த வரிகள் மட்டுமே நிரந்தரமாக பதிந்திருந்தன.

அந்தக் கடிதத்தில் பரத் எழுதியிருந்தான்:

அன்பு அக்கா,

நீ எனக்காக இந்தப் பட்டணத்தில் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல. என் படிப்புக்காகவும், நம் குடும்பத்திற்காகவும் நீ எத்தனை டீ போட்டிருப்பாய், எத்தனை முறை கண் கலங்கி இருப்பாய் என்று எனக்குத் தெரியும். இனிமேல் அது வேண்டாம்.

கடந்த இரண்டு மாதங்களாக நான் இரவும் பகலும் தூங்காமல் படித்து ஒரு பெரிய அரசுத் தேர்வு எழுதினேன். இன்று காலைதான் ரிசல்ட் வந்தது. அக்கா, உன் தம்பி இப்போது இந்தியன் ரயில்வேயில் ஒரு பெரிய பதவியில் தேர்ச்சி பெற்றுவிட்டேன்!

சம்பளம், பதவி எல்லாவற்றையும்விட பெரிய விஷயம், நீ இனி வேலை பார்க்கத் தேவையில்லை என்பதுதான். என் முதல் சம்பளம் வந்ததும், உனக்கு ஒரு புதிய வீடு வாங்குகிறேன். இந்தக் கடிகாரத்தை மட்டும் நீ வைத்துக்கொள். இது உனக்கு ஓய்வு கொடுக்கும் நேரத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. நீ போடும் டீயைப்போல, இனி உன் வாழ்க்கையும் சுவையாக மாறும். என்னை நீ நேரில் பார்க்கும்போது கட்டிப்பிடித்துக்கொள்!

அன்புடன், உன் தம்பி பரத்.

சீதா மெதுவாக நிமிர்ந்தாள். சூர்யா புறப்பட்டுச் சென்ற பாதையைப் பார்த்தாள். அவனுக்கு ஒரு நன்றியுரைக்க வேண்டும் என்று தோன்றியது. அதே சமயம், அவளது அலுவலகத்தின் மூத்த மேலாளர் ராஜன், வாடிக்கையாளர்களுடன் அவளது டீ ஸ்டாலை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

ராஜனின் முகம் சற்று இறுக்கத்துடன் இருந்தது. அவர் சீதாவின் அருகில் வந்து, பொங்கி வழிந்த பாலைச் சுட்டிக்காட்டி, "என்ன சீதா இதெல்லாம்? வாடிக்கையாளர்கள் வர நேரமாச்சே? எல்லாமே கன்னாபின்னாவென்று கிடக்குதே! கொஞ்சம் பொறுப்பாவே இல்லையா?" என்று அதட்டினார்.

அந்த நொடிவரை பதறிய சீதாவின் முகத்தில் ஒரு துளிகூடப் பயம் இல்லை. அவள் புன்னகையுடன் நிமிர்ந்தாள். அவளது கண்களில் இன்னும் ஆனந்தக் கண்ணீரின் ஈரம் இருந்தது.

"சாரி சார். இது கடைசி முறை. இனிமேல் இந்த ஸ்டாலில் இப்படி நடக்காது," என்றாள்.

ராஜனுக்கு ஆச்சரியம். சீதா இவ்வளவு அமைதியாகப் பேசியதில்லை. "இனி நடக்காதுன்னா? என்ன அர்த்தம்?" என்று அவர் கேட்டார்.

சீதா கையில் இருந்த கடிதத்தை மெதுவாக மடித்து, தனது கௌண்டரின் கீழ் வைத்தாள். பிறகு அங்கிருந்த தனது சாதாரண துணியாலான கைப்பையை எடுத்தாள்.

"சார், என் தம்பி இன்னைக்கு ஒரு அரசு வேலையில பாஸ் பண்ணியிருக்கான். என் வாழ்க்கையில இனிமேல் டீ போடவோ, பால் பொங்குவதைப் பார்த்துப் பதறவோ அவசியம் இல்லை. இன்றிலிருந்து நான் வேலையை ராஜினாமா செய்கிறேன்," என்று நிதானமான குரலில் அறிவித்தாள்.

ராஜன் வாயடைத்து, என்ன சொல்வதென்று தெரியாமல், கையில் இருந்த ஃபைல்களைக் கீழே போட்டார். வாடிக்கையாளர்களும் ஒரு நொடி ஸ்தம்பித்து நின்றனர்.

சீதா புன்னகையுடன், டீ ஸ்டாலில் அவள் பயன்படுத்திய துடைப்பத்தையும், கத்தரிக்கோலையும் கௌண்டரில் வைத்தாள். அவளது கண்களில் தெரிந்த தெளிவும், திடமும், அவள் ஒரு டீ ஸ்டால் ஊழியர் அல்ல, ஒரு வெற்றிகரமான தம்பியின் சகோதரி என்பதைப் பறைசாற்றியது.

அவள் ஸ்டாலில் இருந்து வெளியேறினாள். வெளியேறும் முன், ராஜன் ஒரு வார்த்தை மட்டும் மெதுவாகக் கூறினார்: "டீ நல்லா இருந்துச்சு சீதா... உன் தம்பிக்கு என் வாழ்த்துக்கள்."

சீதா தலை அசைத்தாள். அன்று காலை முதல் அவளது நெஞ்சில் கொதித்துக்கொண்டிருந்த பாசமும், பதற்றமும், இப்போது வெற்றியின் அமைதியாக மாறியிருந்தது.



**-டாக்டர் ப.பாண்டியராஜன்**
மதுராந்தகம்

# உள்ளூரிலே பொக்கிஷம்



நாகநாதன் கிராமத்தில் மூதாதையர் சம்பாதித்த நிலத்தை மேற்பார்வை பார்த்து வந்தார். இதுவே இவருக்கு பிரதான தொழில் ஆகும். இதன் மூலம் வரும் வருமானத்தால் இவர் வாழ்க்கை நல்ல விதமாகவே சென்றது. இவர் மகன் துரைராஜ் நன்கு படித்து கிராமத்தை விட்டே செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக இருந்தார். ஒரு சிலரே இவருக்கு நண்பர்கள். பள்ளி இறுதியாண்டு படிப்பு வந்ததும் அப்பாவிடம் மாடியில் சகல வசதியுடன் கூடிய ஒரு போர்ஷன் கட்டிக்கொண்டு மேலேயே வாசம் செய்தார். தேர்வு முடிவு வந்ததில் துரைராஜ் மாநிலத்தில் இரண்டாவது மதிப்பெண் பெற்றதால் மருத்துவ துறையில் அரசாங்க ஒதுக்கீட்டில் சென்னையில் அரசாங்க மருத்துவ கல்லூரியில் சேர்ந்தார். துரைராஜ் சென்னை வந்த பிறகு ஊர் பக்கமே செல்ல மனமில்லால் இங்கிருந்து வெளி நாடு செல்லும் நோக்கத்தில் இருந்தார். இந்தப் படிப்பிலும் தனது திறமையைக் காட்டி முதல் மாணவராக தேர்வானார் துரைராஜ். விடுமுறையில் வந்த துரைராஜ் வெளிநாட்டில் உள்ள மருத்துவ பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்தார். அமெரிக்காவில் உள்ள ஒரு மருத்துவ பல்கலைக்கழகம் மேற் படிப்பு படிக்க இவருக்கு அனுமதி தந்தது. அப்பாவிடம் ஆகும் படிப்புச் செலவைச் சொன்னதும் அவர் யோசித்தார். அப்போது அங்கு வந்த துரைராஜ் மாமா, மருமகனே ஆகும் செலவில் நான் பாதி தருகிறேன் என்றதும் நாகநாதனுக்கு என்ன சொல்வது என்று அறியாமல் திகைத்து நிற்க, துரைராஜ் மாமா, மருமகனே மற்ற ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்றார். நாகநாதன் இவர் அமெரிக்கா சென்றால் எங்கே ஊர் பக்கம் வருவார் என்றதும் , துரைராஜ் மாமா முருகேசன் நாம் செல்லுவோம் என்றார். மாமாவின் ஏற்பட்டால் துரைராஜ் பணம் எல்லாம் கட்டி பிரயாணத்திற்கு தயாரானார்.

நாகநாதன் இப்படி மகன் செல்லுகிறானே என்று வருத்தப்படாமல் முருகேசன் மகளிடம் மட்டும் அவன் தன்னை நிலைப் படுத்திக் கொண்டாலே போதும் என்றார். முருகேசன் மகள் அப்பா இதுவரை அவர் படிப்பிற்கு எவ்வளவு செலவாகி இருக்கும் என்றதும், நோட்டில் தான் பார்க்க வேண்டும் என்றார். முருகேசன் மகள் துர்கா மருத்துவ துறைக்கு பயன்படும் செடிகளை பயிரிட்டு அதன் வேர், பூக்கள், காய்கள், கனிகள் இவற்றை வியாபாரம் செய்து வருகிறார். நிறைய வாடிக்கையாளர்கள் இவர் சம்பாதித்து வைத்து உள்ளார். வரும் வருமானத்தில் இவர் நிறைய நல்ல தொண்டுகள் செய்கிறார். நாகநாதன் ஆலோசனைப்படி தான் இவர் விவசாயம் செய்கிறார். துரைராஜ் வெளிநாடு செல்வதற்கு ஒரு வாரம் இருக்கும் நிலையில் தனது அப்பாவிடம் தானும் வயல்வெளிக்கு வருகிறேன் என்றார். நாகநாதன் வா போகலாம் என்றார். வயலுக்கு வந்த துரைராஜ் நிறைய கேள்விகள் கேட்டார். அப்போது நாகநாதன் இருக்கும் போது எல்லாம் நீ அறியாமல் விட்டு விட்டு இப்போது ஒரே நேரத்தில் அறிந்து கொள்ள நினைப்பது கொஞ்சம் கடினம் தான் என்றார். துரைராஜ் பதிலேதும் கூறாமல் , சுற்றி வலம் வந்தார். என்ன இவ்வளவு பெரிய வயல்கள் நமக்கு உள்ளதா என்று நினைத்தார். அப்பா எப்படி நிர்வகிக்கிறார் என்று நினைத்தார் துரைராஜ். சற்று தள்ளி வந்து பூச்செடிகள் , காய்கறிகள் வளர்ந்துள்ளதைக் கண்டு ஏதும் பேசாமல் நகர்ந்தார் துரைராஜ்.

அடுத்த நாளும் அப்பாவிடம் வயலுக்கு வந்த துரைராஜ், இயற்கை உரங்கள் தாராளமாக கிடைக்கிறதா என்றதும், நாகநாதன் பக்கத்துக்கு வயலுக்கு அழைத்துச் சென்றார். அங்கே இயற்கை உரம் தயாரிக்கும் பணி நடந்துகொண்டிருந்தது. துரைராஜ் இந்த கருவிகள் எல்லாம் எப்போது வாங்கினீர்கள் என்றதும், நாகநாதன் துர்காவிடம் கேள் என்றதும், துரைராஜ் துர்காவுமா இதில் உள்ளார் என்றார். அதோடு அந்த பேச்சு நின்றது. நாகநாதனும் மேற்கொண்டு துர்கா செய்யும் பயிர்கள் பற்றி பேசவில்லை. துரைராஜ் வேறு எந்த தானியங்கள் விவசாயம் செய்கிறீர்கள் என்றார். நாகநாதன் சமயம் பார்த்து பயிரிடுவோம் என்றார். பூச்சி தாக்குதலுக்கு எப்படி கையாளுகிறீர்கள் என்றார் துரைராஜ். இயற்கையில் பூச்சிக் கொல்லி மருந்து தயாரித்து அதனை உபயோகிக்கிறோம் என்றார்..

துரைராஜுடன் ஒரு பட்டாளமே அவரை வழி அனுப்ப தயாரானது. துரைராஜ் ஏதும் சொல்லவில்லை. விமானநிலையம் வந்ததும் துரைராஜ் எல்லோரிடமும் வருகிறேன் என்று கூறி விட்டு, துர்காவிடம் வயல் வெளிகளில் அப்பாவுக்கு துணையாக இரு என்றார். துர்கா துரைராஜ் தவிர அனைவர் கண்களிலும் நீர் பெருக்கெடுத்து ஓடியது.

துரைராஜ் உள்ளே சென்றதும் அனைவரையும் ஊர் திரும்ப ஆயத்தம் ஆன போது துர்கா சில இடங்களை பார்த்துவிட்டு செல்லலாம் எனக் கூறி அழைத்து சென்றார். நாடு இரவில் எல்லோரும் ஊர் திரும்பினார்கள். ஊர் போய் சேர்ந்ததும் துர்காவிற்கு நலமா வந்ததாக செய்தி அனுப்பினார் துரைராஜ்.

மேற்படிப்பை முடித்த துரைராஜ் புற்று நோய் சம்பந்தமான ஆராய்ச்சி நிறுவனத்தில் சேர்ந்தார். பல கட்டுரைகள் எழுதினார் துரைராஜ். அவரது சில கண்டுபிடிப்புகள் அவருக்கு நல்ல பெயரை வாங்கித் தந்தது. இன்றுடன் துரைராஜ் ஊரிலிருந்து வந்து நான்கு வருடங்கள் கடந்தன. ஊருக்கு பணம் அனுப்புவதில் தவறியதில்லை துரைராஜ். அமெரிக்காவிலேயே நிறைய வெகுமதிகள் வாங்கி தலை சிறந்த மருத்துவர்களில் ஒருவர் என்ற பெயர் பெற்றார் துரைராஜ்.

நாகநாதன் துர்காவிடம் என்ன என் மகனுக்கு நாம் இருப்பது ஞாபகம் இருக்குமா என்றதும், துர்கா மேலும் மேலும் பதவிகள் வரும் போது எப்படி நம் ஞாபகம் வரும் என்று சோகத்துடன் கூற, நாகநாதன் நீயும் ஏன் திருமணம் வேண்டாம் என்கிறாய் என்றார். துர்கா பதில் ஏதும் கூறாமல் நகர்ந்தார்.

துரைராஜ் தனது பணியில் முழு கவனமும் செலுத்தினாலும் சமீப காலமாக அவருக்கு ஊர் ஞாபகம் வந்து கொண்டே இருந்தது. துர்காவை தொடர்பு கொண்டு ஊர் நிலவரம் பற்றி கேட்டார். கடைசியில் துர்கா நாங்கள் கிளம்பி வரலாமென யோசிக்கிறோம் என்றதும் துரைராஜ் ஏதும் சொல்லாமல், அப்புறம் பேசுகிறேன் என்று கூறி தொடர்பை துண்டித்தார். இதற்கு பிறகு ஒரு மாதத்தில் துர்காவை தொடர்பு கொண்ட துரைராஜ் நான் அடுத்த வாரம் கிளம்பி ஊருக்கு வருகிறேன் என்றார். துர்கா நேரில் பேசலாம் என்று கூறி தொடர்பில் இருந்து வெளியே வந்தார்.

**-மு.வெ.சம்பத்**

## வாழ்ந்தே தீருவோம்

# நகரும் நிழல்கள்

**அத்தியாயம் -30**



■முனைவர்
**க. அன்பழகன் (ஹரணி)**
கரந்தை.தஞ்சாவூர்

## மனிதர்கள் இருக்கிறார்கள்

இப்போ சொல்லு என்றார். சொன்னாள். முழுமையாகச் சரவணனை நம்பிய வாழ்க்கை இப்படி தொடங்கிய இடத்திலேயே சிதைந்துவிட்டதைச் சொல்லி அழுதாள். இப்போது காப்பகத்தில் வந்திருப்பதையும் ஒரு மாதத்திற்குள் தனக்கான நிலைப்பாட்டையும் சொன்னாள்.

கவலைப்படாதே. ஒவ்வொரு மனுஷனுக்கும் ஒரு வாழ்க்கை இருக்கு. அதை அவங்க வாழ்ந்துதான் ஆகணும். நாம நினைச்சா மாறாது. நினைச்சா சாகமுடியாது. எஃது எப்ப நடக்குமோ அது தானா நடக்கும். எங்கேயோ பிறந்தோம் இப்பட சந்திப்போம்னு நினைச்சிருப்போமா.. இஃது எல்லாம் ஏன் நடக்குது? தெரியாது. கடவுளை நம்புறவங்களுக்கு இது கடவுள் செயலா இருக்கலாம். அப்படித்தான் நான் நினைக்கறேன். என்னை அப்பா ஸ்தானத்துலே வச்சிட்டே.. உன்னை நல்லபடியா ஒரு வாழ்க்கையில வச்சுப் பாத்துட்டுதான் நான் சாவேன்.. என்னோட கதை பெரிய கதை.. ஒரு அப்பாவா நான் தோத்துப்போயிட்டேன்.. அதான் எல்லாம் இருந்தும் எல்லாத்தையும் விட்டுட்டு வந்துட்டேன். இனிமே அந்த வாழ்க்கைக்குத் திரும்ப முடியாது.. போகப்போக நீயே என்னைப் பத்தித் தெரிஞ்சுக்குவே.. நானும் சொல்வேன்.. நான் சொல்றபடி கேளு.. இழந்ததையே நினைச்சுக்கிட்டிருந்தா.. இருக்கற காப்பாத்தமுடியாது.. சரவணன் பெரிய இழப்புதான். ஆனாலும், நீ வாழ்ந்தாகவேண்டும்.. நீ இருக்கறவரைக்கும் சரவணன் இருப்பான். உனக்கான ஒரு புது வாழ்க்கை இருக்கு.. வாழணும்.. அதுக்குத்தான் சொல்றேன்.. உன்னை ஒரு கோச்சிங் சென்டரில சேத்து விடுறேன்.. சேர்ந்து படி.. ஹோட்டல் நேரத்தைக் குறைச்சு தரேன்.. இரவு நேரத்துல வகுப்புக்குப் போ.. தீவிரமாப் படி பரிட்சை எழுது.. நல்ல அரசு உத்தியோகம் அமைஞ்சுட்டா உனக்கான நிலைப்பாடு வந்துடும்.. என்கூட ஒருத்தன் இருக்கான். அவன் பேரு சிவராமன் என்று சிவராமன் கதையைச் சொன்னார்.. அவனுக்கும் தான் ஒரு தந்தையாக இருந்து வாழப்போகிற வாழ்க்கையைச் சொன்னார்.

மாதவன் சொல்லி முடித்ததும் வள்ளியம்மை மாதவன் கைகளைப் பிடித்துக்கொண்டாள்.. அப்பா.. உங்ககூடவே இருந்துடவா என்றாள்.

மாதவன் யோசிக்காமல் சொன்னார்.. காப்பகத்தைக் காலிப் பண்ணிட்டு வந்துடு.. நான் பாத்துக்கறேன்..

இருவரும் எழுந்து நடந்தார்கள் கோயிலை விட்டு. வள்ளியம்மைக்கு ஏதோ ஓர் அர்த்தம் இந்த வாழ்க்கையில் இருப்பதாக உணர்ந்தாள். யாருமறியாத சென்னைக்குச் சரவணனை நம்பி வந்தாள்.. சரவணன் எதிர்பாராமல் இறந்துபோனான். தவித்து நின்றவளுக்கு ஆண்டவன் கருணை அதிகம் போலும். ஆனந் வந்தான். இப்போது மாதவன். ஆனால், இந்தத் தொடக்கம் சரவணன் தொடங்கி வைத்ததுதான். அவனை நினைக்க நினைக்கக் கண்களில் நீர்ப் பொங்கி வழிந்தது. துடைத்து, துடைத்துக்கொண்டே நடந்தாள்.

சரிம்மா நான் போகிறேன்.. என்னோட போன் நம்பர் இது. என்று கொடுத்துவிட்டு வள்ளியம்மையை ஓர் ஆட்டோவில் ஏற்றி அனுப்பிவிட்டு நடந்தார.

வள்ளியம்மை ஆட்டோவில் ஏறிக்கொண்டாள். இப்போது அவளுக்கு ஓர் அழுத்தமான நம்பிக்கை வந்தது. கண்களில் நீர் இல்லை. வெளியே வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தாள். வண்டிகளிலும், கார்களிலும் பேருந்துகளிலும் சைக்கிள்களிலும், நடந்தும் போய்க்கொண்டிருந்த மனிதர்கள் மாறுபட்ட கோணத்தில் தெரிந்தார்கள். அவளுக்கு லேசாக உள்ளுக்குள் ஒரு மகிழ்ச்சி வந்தது.



- தொடரும்

# 27 நட்சத்திரங்களுக்கும் உரிய சித்தர்கள்

எல்லா சித்தர்களின் ஜீவ சமாதியும் சிவாலயமாகவே இருக்கும். குறைந்தது சித்த தியானத்திற்கு அரைமணி நேரமாவது ஒரு நிலையில் அமர வேண்டும். இந்த வழிமுறையை கடைபிடித்து உங்கள் கஷ்டத்தையும், வறுமையையும் போக்கிக்கொள்ளுங்கள். இப்போது 27 நட்சத்திரங்களுக்கும் உரிய சித்தர்கள் யார் யார் என்பதை பார்ப்போமா?




1. அசுவினி: அசுவினி நட்சத்திரக்காரர்கள் வணங்க வேண்டிய சித்தர் பெயர் காளங்கிநாதர். இவருடைய சமாதி மற்றும் சக்தி அலைகள் கஞ்சமலை மற்றும் திருக்கடையூர் ஆகிய தலங்களில் உள்ளது.

2. பரணி: சித்தர் போகர் ஆவார். இவருடைய சமாதி பழனி முருகன் சன்னதியில் உள்ளது.

3. கிருத்திகை:b இந்த நட்சத்திரத்திற்குரியவர் ரோமரிஷி சித்தர் ஆவார். இவருக்கு சமாதியும் இல்லை. இவர் உடல் அழியவும் இல்லை. நேரடியாக கைலாயத்திற்கு சென்றுவிட்டார் என்பதால், இவரை திங்கள்கிழமை வெள்ளை ஆடை அணிந்து வடக்கு நோக்கி நினைத்து வணங்க வேண்டும்.

4. ரோகிணி: சித்தர் மச்சமுனி ஆவார். இவருடைய ஜீவ சமாதி திருப்பரங்குன்றத்தில் உள்ளது.

5. மிருகசீரிஷம்: சித்தர் பாம்பாட்டி சித்தர். ஜீவ சமாதி சங்கரன்கோயில் என்ற ஊரில் உள்ளது. இன்னொருவர் சட்டமுனி சித்தராவார். ஊர் திருவரங்கம் ஆகும்.

6. திருவாதிரை: சித்தர் இடைக்காடர். ஜீவ சமாதி திருவண்ணாமலையில் உள்ளது.

7. புனர்பூசம்: சித்தர் தன்வந்திரி ஆவார். இவர் வைத்தீஸ்வரன் கோவிலில் ஜீவ சமாதி ஆனவர் என்பது குறிப்பிடத்தக்கது.

8. பூசம்: கமல முனி சித்தர் ஆவார். இவருடைய ஜீவ சமாதி திருவாரூர் என்ற ஊரில் உள்ளது.

9. ஆயில்யம்: இந்த நட்சத்திரத்திற்கு உரிய சித்தர் அகத்தியர். இவருடைய ஒளி வட்டம் குற்றால பொதிகை மலையில் உள்ளது. சமாதி திருவனந்தபுரத்தில் உள்ளது.

10. மகம்: இந்த நட்சத்திரத்தில் அவதரித்தவர் சிவ வாக்கிய சித்தர் ஆவார். இவர் ஜீவ சமாதி கும்பகோணத்தில் உள்ளது.

11. பூரம்: இந்த நட்சத்திரத்தில் அவதரித்த தெய்வ பெண்மணிஸ்ரீ ஆண்டாள் ஆவார். இவர் பூமாதேவியின் அம்சமாக உள்ளார். அடுத்து ராமதேவ சித்தரும் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்தான். இவரை வழிபட வேண்டுமானால் அழகர்மலைக்கு செல்வது சிறப்பு.

12. உத்திரம்: இந்த நட்சத்திரத்திற்கு உரிய சித்தர் காகபுஜண்டர் ஆவார். இவர் ஜீவசமாதி திருச்சி மாவட்டம் உறையூரில் உள்ளது.

13. அஸ்தம்: சித்தர் கருவூரார் ஆவார். இவர் சமாதி கரூரில் உள்ளது. அடுத்து இவர் ஒளிவட்டம் வந்து செல்லும் இடம் தஞ்சாவூர் பெரிய கோயில் ஆகும்.

14. சித்திரை நட்சத்திரம்: சித்தர் புண்ணாக்கீசர் ஆவார். நண்ணா சேர் என்ற இடத்தில் இவர் ஜீவ சமாதி உள்ளது.

15. சுவாதி: சித்தர் புலிப்பாணி ஆவார். சமாதி பழனி அருகில் வைகாவூர் என்ற இடத்தில் உள்ளது.

16. விசாகம் நட்சத்திரம்: சித்தர் நந்தீசர் மற்றும் குதம்பை சித்தர் ஆவார். நந்தீசர் காசி நகரத்திலும், குதம்பை சித்தரின் ஜீவ சமாதி மாயவரத்திலும் உள்ளது.

17. அனுஷம்: சித்தர் வால்மீகி அல்லது வான்மீகர் என்று அழைக்கப்படுவார். இவரின் ஜீவ சமாதி எட்டுக்குடியில் உள்ளது.

18. கேட்டை: சித்தர் பகவான் வியாசர் ஆவார். இவர் உடல் அழிவற்றது. எனவே காற்றோடு காற்றாக கலந்து இருப்பார். இவரை நினைத்தாலே போதும். அவ்விடம் வருவார்.

19. மூலம் நட்சத்திரம்: சித்தர் பதஞ்சலி ஆவார். இவர் சமாதி ராமேஸ்வரத்தில் உள்ளது.

20. பூராடம்: சித்தர் பூரம் நட்சத்திரத்திற்கு சொல்லப்பட்ட ராமதேவர் எனும் யாகோப்பு சித்தரே ஆவார். அழகர்மலை மற்றும் மெக்காவில் ஜீவ ஒளி உள்ளது.

21. உத்திராடம்: இந்த நட்சத்திரத்திற்குரிய சித்தபிரான் கொங்கணர். இவர் ஜீவசமாதி திருப்பதியில் உள்ளது.

22. திருவோணம்: இந்த நட்சத்திரத்திற்கு உரிய சித்தர் தட்சிணாமூர்த்தி சுவாமிகள் ஆவார். இவருடைய சமாதி பாண்டிச்சேரி அடுத்து உள்ள பள்ளித்தென்னல் என்ற இடத்தில் உள்ளது.

23. அவிட்டம்: சித்தர் திருமூலர் ஆவார். இவருடைய ஜீவசமாதி சிதம்பரத்தில் உள்ளது.

24. சதயம்: இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர் கௌபாலர். இவரின் சமாதி எங்கு என தெரியவில்லை. எனினும் மன ஒழுக்கத்தோடு இவரை நினைத்தாலே தேடிவந்து அருள் புரிவார் எனக் குறிப்பு உள்ளது.

25. பூரட்டாதி: இதற்கான சித்தர் சோதி முனி ஆவார். இவர் ஜோதி வடிவிலே ஜீவனாக உள்ளவர். அதனால் இவருக்கு தீபம் ஏற்றி வழிபட்டால் அங்கு அருள்பாலிப்பார்.

26. உத்திரட்டாதி: இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர் டமரகர் சித்தர் ஆவார். இவரும் நேரிடையாக காற்றில் ஐக்கியமாகி கலந்து விட்டதாக வரலாறு கூறுகிறது. இவரை வீட்டிலேயே சிறுமணி ஓசையில் வரவழைத்து அவர் அங்கு வந்ததாக பாவித்து வணங்கலாம்.

27. ரேவதி: சித்தர் சுந்தரானந்தர் ஆவார். இவர் ஜீவசமாதி கோயில் மதுரையில் உள்ளது. தனி அறையில் ஒற்றை தீபம் மற்றும் ஏற்றி மன ஒரு நிலைப்பாட்டோடு சித்தரை வணங்கி வந்தால் போதும்.



**ப.கோபிபச்சமுத்து**
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

## தினம் ஒரு தலைவர்கள்

# அழகுமுத்துக்கோன் வரலாறு

1728ல் இல் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கட்டாலங்குளத்தில் பிறந்தவர். இவரது தந்தை அழகுமுத்துக்கோன் தாய் அழகு முத்தம்மாள்.

அந்த காலகட்டத்தில் தாத்தா, தந்தை பெயரே மகனுக்கு வைப்பது வழக்கம். அந்தவகையில் தான் இவருக்கும் வீர அழகுமுத்துக்கோன் என பெயரிடப்பட்டது.

1729ஆம் ஆண்டு இவரது தம்பி சின்ன அழகு முத்துக்கோன் பிறந்தார். இவர்கள் அழகுமுத்து சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

1750 ல் தந்தை மன்னர் அழகுமுத்துக்கோன் அனுமந்தகுடி போரில் மரணம் அடைந்தார். தந்தையின் மரணத்தை தொடர்ந்து தனது 22 வயதில் அண்ணன் அழகுமுத்துக்கோன் கட்டாலங்குள சீமையின் மன்னரானார்.

வீர அழகுமுத்துக்கோனுக்கு எட்டயபுரம் மன்னரான ஜெகவீரராமபாண்டிய எட்டப்பர் மன்னர் சிறந்த நண்பராக இருந்தார்.

அழகுமுத்துக்கோன் ஆங்கிலேயர்கள் தன்னுடைய நாட்டில் வியாபாரம் செய்வதை விரும்பவில்லை, அதனால் ஆங்கிலேயர்கள் மீது அவருக்கு வெறுப்பு அதிகமாக இருந்தது.

எந்த உரிமையில் வரி கேட்கிறீர்கள்? இப்படியொரு நிலையில் 1750ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் தளபதி அலெக்சாண்டர் கிரேன் மற்றும் மருதநாயகம் (கான்சாகிப்) ஆகியோர் எட்டயபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு வரி வசூலிக்க வந்தனர்.

ஆங்கிலேயர்களை எதிர்க்க வீர அழகுமுத்துக்கோன் ஆலோசனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். இந்த கூட்டத்தில் அழகுமுத்து சகோதரர்கள், ஜெகவீரராம எட்டப்பர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதில், ஆங்கிலேயர்களுக்கு வரி செலுத்துவதில்லை என முடிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து வரி கட்ட முடியாது என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது.

“வணிகம் செய்ய வந்த நீங்கள் எங்கள் மக்களிடம் வரி வசூலிக்க என்ன உரிமை இருக்கிறது? வரி வசூல் செய்ய வந்தால் கும்பினிகளின்( ஆங்கிலேய வியாபாரக் கூட்டம்) தலை இந்த மண்ணில் உருளும்” என்று அந்த கடிதத்தில் எழுதியிருந்தது.

இதனால் ஆத்திரம் கொண்ட பிரிட்டிஷார்கள் எட்டயபுரபாளையத்தில் தனது படைகளை குவித்தனர். அப்போது, எட்டயபுர மன்னரையும் மக்களையும் பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்த வீரன் அழகுமுத்துக்கோன் படையை திரட்டத் தொடங்கினார்.

எட்டயபுரம் பாளையத்துக்கு ஆதரவாகப் போராடிய அழகுமுத்து சகோதரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே போர் மூண்டது. இந்த போரில் அழகுமுத்துக்கோன் வென்றார். இதுதான் பிரிட்டிஷாருக்கு எதிராக நடந்த முதல் போர் என வரலாறு கூறுகிறது.

இதைத்தொடர்ந்து பல இடங்களில் ஆங்கிலேயர்களுக்கு எதிர்ப்பு கிளம்பிய நிலையில், 1755 பிப்ரவரி மாத தொடக்கத்தில் திருநெல்வேலி சீமை நோக்கி ஒரு பெரிய படை அணிவகுத்தது.

இந்தப் படையெடுப்பின் முக்கிய நோக்கம் தென்நாட்டு அரசர்களிடம் இருந்து கப்பம் வசூலிப்பதும், கும்பினிகளின் அதிகாரத்தை தென் நாட்டில் நிலைநிறுத்துவதுமாகும்.

மார்ச் 9, 1755இல், மருதநாயகம் தலைமையிலான படைகள் காளமேகப் பெருமாள் கோயிலுக்கு தீ வைத்து, அங்கிருந்த அனைத்து



ஆபரணங்களையும் கொள்ளையடித்தன.

அந்த சமயத்தில் மதுரையில் இருந்து ஆங்கிலேயப் படை திருநெல்வேலிக்கு வருவதை அறிந்து அவர்களை எதிர்க்க மன்னர் பூலித்தேவன் எட்டயபுர மன்னரிடம் உதவி கேட்டார். ஆனால் அவர் உதவி செய்யவில்லை. அழகுமுத்துக்கோன் சகோதரர்கள் பூலித்தேவனுக்கு உதவி செய்ய முன் வந்தனர்.

பூலித்தேவனின் படையும் திருவிதாங்கூர் ராணுவமும் அழகுமுத்துக்கோனின் படையுடன் இணைந்து ஆங்கிலேய படைகளை எதிர்த்து போரிட்டது. இதுவே குறுநில மன்னர்களின் கூட்டமைப்புக்கான முதல் படி.

1755ல் எட்டயபுரத்தைத் தாக்க வந்த ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக வீர அழகுமுத்துக்கோனின் படையை சின்ன அழகுமுத்துக்கோன் வழிநடத்தினார்.

அங்கிருந்த பெருமாள் கோயிலை தாக்க வந்த போது, அதை காக்க

அழகுமுத்துக்கோனின் படைகள் கடுமையாகப் போராடிக் கொண்டிருந்த நேரத்தில், சின்ன அழகுமுத்துக்கோன் ஆங்கிலேயர்களால் சுடப்பட்டு 1755 ஏப்ரல் 07ஆம் தேதி பெருமாள் கோயில் முன் மரணமடைந்தார்.

தனது தம்பியின் மரணத்தை தாங்கிக் கொள்ள முடியாத மன்னர் வீர அழகுமுத்துக்கோனும், அவரது வீரர்களும் கடும் போரில் ஈடுபட்டனர். போர் முடிவடையும் தருவாயில் பிரிட்டிஷ் படைகள் பின்வாங்கின.

அப்போது அழகுமுத்துக்கோனின் வீரத்தை நன்கறிந்த மருதநாயகம் எட்டயபுரம் அரண்மனையை தாக்கப்போவதாக அறிவித்தார். அந்த பதட்டமான சூழலில் எட்டயபுரம் மன்னரையும், மக்களையும் காத்து பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்த வீர அழகுமுத்துக்கோன், வெளியே சென்று ஆள்திரட்டி 700க்கும் அதிகமானவர்களை தனது படையில் சேர்த்தார்.

இவர்கள் பெத்தநாயக்கனூர் கோட்டையில் தங்கியிருந்த நிலையில் கான்சாகிப் படைகள் தாக்குதலில் ஈடுபட்டன. வீர அழகுமுத்துக்கோனும் அவரது தளபதிகளும் கடுமையாகப் போரிட்டனர். அப்போது அழகுமுத்துக்கோனின் குதிரை சுட்டுதள்ளப்பட்டது.

முத்துகோனின் வலது காலிலும் சுடப்பட்டது. இருந்தபோதிலும் ரத்தம் சொட்ட, சொட்ட தொடர்ந்து மூன்று மணி நேரம் போர் புரிந்தார் அழகுமுத்துக்கோன். பல வீரர்கள் இறந்தனர்.

அழகுமுத்துக்கோனையும், அவரது 6 தளபதிகளையும், 248 வீரர்களையும் ஆங்கிலேயப்படை சிறை பிடித்தது. நடுக்காட்டுச்சீமை பகுதிக்கு அழைத்துச் சென்று பீரங்கி முன்பு நிறுத்தி வரி செலுத்துமாறு வற்புறுத்தினர்.

தாய் நாட்டுக்காக மரணத்துக்கு முத்தம் மன்னிப்பு கேட்டால் உயிர் மிஞ்சும் என எச்சரித்தனர். ஆனால் எதற்கும் அஞ்சாத அழகுமுத்துக்கோன், வரி கட்ட ஒப்புக்கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டார். பின்னர் அனைத்து வீரர்களின் வலது கரங்களும் வெட்டப்பட்டன.


வீரன் அழகுமுத்துக்கோனும் 6 தளபதிகளும் பீரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில், 7 பேரும் உடல்கள் சிதறி உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் சேகரிக்கப்பட்டு, எட்டயபுரம் அருகில் உள்ள சோழாபுரம் கண்மாயில் எரியூட்டப்பட்டது.

”கட்ட மிகுந்திடம் கட்டாலங்குளம் அழகு முத்துக்சேருவைகாரன் அவன் கோட்டை பெத்த ஊரிலும் தானுமே கொற்றவன் காக்கவே சண்டை செய்தான் வீராதி வீரரும் சூராதி சூரரும் வெங்கல கைகளை தானிழந்தார்... மன்னாதி மன்னரை மார் காத்து நின்ற முத்து மாணிக்க சேர்வையும் மாய்ந்து விட்டார் பரிமேல் ஏறிரண கள மேவிய பச்சைமால் சேர்வையும் மாண்டுவிட்டான்” என்ற “சேவைக்காரர் சண்டை கும்மி” பாடல் அழகுமுத்துக்கோனின் போரையும் அவர் போரில் கொல்லப்பட்டதையும் கூறுகிறது.

தனது நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் இவர் மரணத்தை முத்தமிட்ட ஆண்டு 1759

ஆங்கிலேயருக்கு எதிராக போரிட்ட வீரமுத்துக்கோனுக்கு தமிழக அரசு, கட்டாலங்குளத்தில் மணி மண்டபம் கட்டியது. இங்கு ஆண்டுதோறும் ஜூலை 11ஆம் நாள் அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது. 2015 ஆம் ஆண்டு இந்திய அரசின் சார்பில் தபால் தலை ஒன்று வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# தனுஷ் தயாரிப்பில் D55- மம்முட்டி, சாய் பல்லவி நடிக்க வாய்ப்பு




இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி D55 படத்தை ஒரு பெரிய அளவில் ஆக்ஷன் அதிரடி படமாக எடுக்க முடிவு செய்துள்ளார்.

கோபுரம் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிப்பில் தனுஷ், ராஜ்குமார் பெரியசாமி இணையும் படம் D55. இப்படத்தில் தனுஷிற்கு ஜோடியாக நடிகை பூஜா ஹெக்டே நடிப்பதாக கூறப்பட்டது. மேலும் இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தனுஷ், ராஜ்குமார் பெரியசாமி இணையும் D55 படத்தில் இருந்து கோபுரம் பிலிம்ஸ் நிறுவனம் விலகியுள்ளது. இப்போது இப்படம் தனுஷின் வுண்டர்பார் ஸ்டுடியோ தயாரிப்பில் உருவாக உள்ளது.

இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி D55 படத்தை ஒரு பெரிய அளவில் ஆக்ஷன் அதிரடி படமாக எடுக்க முடிவு செய்துள்ளார். மலையாள நடிகர் மம்முட்டி இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க பேச்சுவார்த்தை நடப்பதாகவும் இதற்காக அவருக்கு 15 கோடி ரூபாய் சம்பளம் வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. மேலும் இப்படத்தின் கதாநாயகியாக சாய் பல்லவி நடிக்க உள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இனிவரும் நாட்களில் இப்படம் தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.





மஞ்சள் நிற உடையில் நடிகை அனுபமா பரமேஸ்வரன் அழகிய போட்டோஷூட். ரசிகர்களை கவரும் புகைப்படங்கள் இதோ.

# 'டியூட்' படத்தில் 'கருத்த மச்சான்' பாடலை நீக்க ஐகோர்ட் உத்தரவு



நடிகர்கள் பிரதீப் ரங்கநாதன், சரத்குமார், மமிதா பைஜு உள்ளிட்டோர் நடித்த 'டியூட்' திரைப்படத்தில் இளையராஜா இசையமைத்த 'கருத்த மச்சான்', '100 வருஷம்' ஆகிய பாடல்கள் அனுமதியில்லாமல் பயன்படுத்தப்பட்டுள்ளதாக சென்னை ஐகோர்ட்டில் இளையராஜா வழக்கு தொடர்ந்து இருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி என்.செந்தில்குமார் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, படத்தயாரிப்பு நிறுவனம் தரப்பில், இந்த பாடல்கள் மீதான உரிமையை எக்கோ நிறுவனத்திடம் இருந்து சோனி நிறுவனம் பெற்றுள்ளது. சோனி நிறுவனத்திடம் இருந்து தாங்கள் அனுமதி பெற்றோம் என்று கூறப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த இளையராஜா தரப்பு வக்கீல், "இந்த விவகாரத்தில் எக்கோ நிறுவனத்துக்கு எதிராக இந்த ஐகோர்ட் தடை விதித்துள்ளது" என்று கூறினார். உடனே நீதிபதி, "30 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான பாடல்கள் தற்போது 'டிரெண்ட்' ஆகியுள்ளது. இதனால் இளையராஜாவுக்கு என்ன பாதிப்பு? அதுமட்டுமல்ல முன்கூட்டியே வழக்கு தொடராமல், படம் ஓ.டி.டி. தளத்தில் வெளியான பின்னர் தொடர்வது ஏன்?" என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு இளையராஜா தரப்பு, "படம் வெளியானதும் தயாரிப்பு நிறுவனத்துக்கு இளையராஜா தரப்பில் வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. ஆனால், அதுபோல யாரும் இல்லை என்று நோட்டீஸ் கடிதம் திரும்ப வந்துவிட்டது" என்று விளக்கம் அளிக்கப்பட்டது. இதையடுத்து இந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து இவ்வழக்கில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், இளையராஜா பாடல்களின் புனிதத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பாடல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 'கருத்த மச்சான்' பாடலை நீக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

இதனிடையே, 'கருத்த மச்சான்' பாடலை 'டியூட்' படத்தில் இருந்து நீக்க 7 நாள் அவகாசம் தேவை என்ற தயாரிப்பு நிறுவனத்தின் கோரிக்கையே நீதிபதி நிராகரித்தார்.

இசையமைப்பாளர் இளையராஜா மனுவுக்கு பதிலளிக்க தயாரிப்பு நிறுவனத்திற்கு உத்தரவிட்ட நீதிபதி வழக்கை ஜனவரி 7-ந்தேதிக்கு ஒத்திவைத்தார்.

# நடிகர் சிவகுமாருக்கு மதிப்புறு முனைவர் பட்டத்தை வழங்கினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



தமிழ் சினிமாவின் பழம்பெரும் நடிகர் சிவகுமார். இவர் 1965-ம் ஆண்டு வெளியான 'காக்கும் கரங்கள்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர். 1967-ம் ஆண்டு வெளியான 'கந்தன் கருணை' திரைப்படம் தான் இவருக்கு மிகப்பெரிய பிரபலத்தை பெற்று தந்தது.

இதனை தொடர்ந்து நடிகர் சிவகுமார் கடைசியாக 2001-ம் ஆண்டு வெளியான 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தில் நடித்திருந்தார். சின்னத்திரை தொடர்களிலும் நடித்துள்ளார். தற்போது நடிப்பை நிறுத்திவிட்டு சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார்.

இந்த நிலையில், தமிழ்நாடு இசை மற்றும் கவின் பல்கலைக் கழகம் சார்பில் நடிகர் சிவகுமார், ஓவியர் சந்துரு ஆகியோருக்கு மதிப்புமிக்க டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

சென்னை கலைவாணர் அரங்கில் இன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் நடிகர் சிவகுமாருக்கு மதிப்புறு முனைவர் பட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

# பான் இந்தியா நடிகருடன் இணையும் லோகேஷ் கனகராஜ்



தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குநர்களில் ஒருவர் லோகேஷ் கனகராஜ். மாநகரம், கைதி, மாஸ்டர், விக்ரம், லியோ, கூலி போன்ற கேங்ஸ்டர் படங்களை இயக்கி பெயர் பெற்றவர் லோகேஷ் கனகராஜ்.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் அடுத்த என்ன படம் வெளியாகும் என ரசிகர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், லோகேஷ் கனகராஜ் கதாநாயகனாக அறிமுகமாக உள்ளார்.

சாணிக் காயிதம், கேப்டன் மில்லர் படங்களின் இயக்குநர் அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் புதிய கேங்ஸ்டர் படம் உருவாகிறது. இந்த படத்தின் மூலம் கதாநாயகனாக லோகேஷ் கனகராஜ் அறிமுகமாகிறார்.

பல நடிகர்களை இயக்கி வெற்றிப் படங்களை வழங்கிய பிறகு, லோகேஷ் கதாநாயகனாக அறிமுகமாவதை காண ரசிகர்கள் ஆவலுடன் உள்ளனர். அவர் ஒரு கதாநாயகனாக வெற்றி பெறுவாரா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இதனிடையே, லோகேஷ் கனகராஜ், ஒரு பான் இந்தியா படத்தை இயக்க உள்ளதாக சினிமா வட்டாரத்தில் தகவல் வெளியாகி உள்ளது.

லோகேஷ் கனகராஜ் கூறிய கதை அல்லு அர்ஜுனுக்கு பிடித்து உள்ளதாகவும் இதனால் அவர் கதாநாயகனாக நடிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்க உள்ள இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த ஆண்டு இறுதியில் தொடங்க திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அட்லி இயக்கத்தில் நடிகர் அல்லு அர்ஜுன் தற்போது மிகப்பிரமாண்டமான ஒரு படத்தில் நடித்துக்கொண்டு வருகிறார். எனவே அப்படத்தை முடித்துக்கொண்டு லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் அவர் நடிக்க தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.



பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியல் புகழ் நடிகை சுஜிதாவின் லேட்டஸ்ட் போட்டோஷூட். சேலையில் அழகிய ஸ்டில்கள் இதோ.

# 'பைசன்' படக்குழுவை பாராட்டிய தினேஷ் கார்த்திக்



மாரி செல்வராஜ் இயக்கத்தில் துருவ் விக்ரம் நடிப்பில் வெளியான படம் 'பைசன்'. இப்படத்தில் துருவ் விக்ரமுக்கு ஜோடியாக அனுபமா பரமேஸ்வரன் நடித்துள்ளார். கபடி வீரரின் வாழ்க்கையை தத்துரூபமாக வெளிப்படுத்தி உள்ள 'பைசன்' படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வசூலையும் குவித்தது.

இப்படத்தை பார்த்து பிரபலங்கள் பலரும் படக்குழுவினரை பாராட்டி வந்தனர். இந்த நிலையில், முன்னாள் கிரிக்கெட்டி வீரர் தினேஷ் கார்த்திக் 'பைசன்' படத்தை பாராட்டியுள்ளார். இதுதொடர்பாக தினேஷ் கார்த்திக் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

'பைசன்' எனக்கு மிகவும் பிடித்திருந்தது. என்ன ஒரு அருமையான திரைப்படம் மாரிசெல்வராஜ். உங்களின் படங்கள் அழுத்தமானதாகவும், பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் உள்ளன. இந்த எதார்த்தமான நடிப்பிற்காக துருவ் கடுமையாக உழைத்துள்ளார். மற்ற நடிகர்களும் சிறப்பாக நடித்திருந்தனர். படக்குவுக்கு என் வாழ்த்துகள் என கூறியுள்ளார்.




## ஆட்கள் தேவை

கோவை டவுன்ஹால் வைசியாள் வீதி போலீஸ் ஸ்டேசன் அருகில் இருக்கும் அரிசி மொத்த வியாபாரம் கடைக்கு கடையில் பணிபுரிய +2 முடித்த ஆண்கள் தேவை

வேலை நேரம்
காலை - 8.45 AM
மாலை - 8.15 PM
ஞாயிறு விடுமுறை

**90039 92134**

## GODOWN FOR RENT

NEW GRADE-A WAREHOUSE
**20,000 sqft**
Location: Salem
- 12th KM Salem - Chennai NH
- Ample Truck Parking
Dock Leveller

**72000 51508**

## Euro Kids

Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA™
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
1,600+ Pre-schools
TUV Nord Safety Certified
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081
a part of LIGHTHOUSE LEARNING GROUP

## WANTED

YELLOW FOREST FURNISHINGS
RS Puram, Coimbatore
ASST PROJECT CO-ORDINATOR
Training will be given
PROJECT MANAGER
Experience in Interior Field Preferred. Liasoning with Architects and Institutional Customers
Attractive Salary + Incentive + Bonus
Whats app Resume
**98424 09490**

## WANTED GENERAL MANAGER

For An Security Agency In Coimbatore
- Qualification : **Any Degree** with Minimum 5 years experience in the related field.
- Age: **Below 55 Years**
- Salary: **Rs.40,000/-** per Month

Send your Resume to:
**94889 44796**
**74484 64001**
snoufalrizwan2009@gmail.com

## கோவை பீளமேட்டில் உள்ள

லேடிஸ் ஹாஸ்டலில் பணிபுரிய
★ சமையல் மாஸ்டர்
★ CARE TAKER/ LADY SECURITY
வீட்டில் பணிபுரிய
★ சமையல்காரர்
★ தோட்ட பராமரிப்பு
மற்றும் செக்யூரிட்டி தேவை
தங்குமிடம், உணவு இலவசம்
**98947 73431**

## S.R Call Drivers Travels

S.R Call Drivers
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM



Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

## WANTED DELIVERY BOY

Two wheeler Licence must
Plenum Info Sys
Singanallur
**96887 48510**

## WANTED

For a Sheet Metal Fabrication Company in Malumichampatti
- Welders
- Welding Contractors

Experience in Sheet Metal Welding.
Contact :-
**99405 15121**

## ஆட்கள் தேவை

நாகர்கோவில் to திருநெல்வேலி வீட்டுமனைகள் விற்க ஆண் பெண் தேவை.
**6385434442**

## ரப்பர் வெட்டும் தொழிலாளர்கள் குடும்பத்துடன் தேவை

பாலக்காடு, கேரளா
தங்கும் வசதி உள்ளது
**94477 69114 | 044 - 6378118**

## WANTED

AAIFA BUILDERS
Job location: karungal and marthandam
1. CIVIL ENGINEERS Male and Female (experience and freshers. 20 nos)
2. 3D AND 2D DESIGNER Male and Female
3. OFFICE ADMIN (any Master Degree) Male and Female
4. MARKETING EXECUTIVE Male and Female

Gmail: agnesjerlin55@gmail.com Whatsapp: 99402 43322

## WANTED PERSONAL DRIVER

Automatic & Manual Gear
Experience Minimum 6 Years
Vacancy : 5 | Salary Above ₹ 25,000* | Male
Candidates must bring their resume with recent passport size Photo (Passbook, Pan Card & Aadar Card) Copy
Walk-in Interview Date 24-11-2025, Monday | Time : 10.30 am to 1.30 pm, 4.00 pm to 7.00 pm
VENUE : RAJAN & Co. 50 Court Road, Opp. S.L.B.School, NGL-1.
50, கோர்ட் ரோடு, எஸ்.எல்.பி. ஸ்கூல் எதிரில், நாகர்கோவில்-1.
Mob. 9487871915
ராஜன் & கோ

## DRIVERS WANTED

பள்ளி வாகனம் ஓட்ட டிரைவர்கள் தேவை
NEAR ANJUGRAMAM
Contact No:
**9840391231**

## சேல்ஸ்மேன்கள் தேவை

ஸ்நாக்ஸ் ஏஜென்ட்-ல் பணிபுரிய அனுபவம் உள்ள சேல்ஸ்மேன்கள் தேவை.
.......நேரில் வரவும்.......
வயது : 25 முதல் 40 வரை
சம்பளம் : 20,000 + இன்சன்டிவ்
Contact No :
**9952704949, 8903224949**
திரவியம் ஆஸ்பத்திரி பின்புறம், புரவசேரி

## SHEMFORD LITTLE STARS

Joshua Street,
Opposite to CSI Matriculation School,
Vettoornimadam, Nagercoil-3
WE ARE HIRING
OPEN POSITION
COMPUTER OPERATOR
Literacy skill-Tamil, English, Hindi
Contact: **9443049882**

## ஆட்கள் தேவை

ஏஜென்சியில் பணிபுரிய
- சேல்ஸ்மேன் சம்பளம்: ரூ.10,000 + ரூ.100 +Incentive
- ஹெல்ப்பர் சம்பளம்: ரூ.10,000 + ரூ.100

நேரில் வரவும். 9 am to 6 pm
தியான் ஸ்டோர்ஸ்
42/1, அசம்பு ரோடு, CBH எதிரில், வடசேரி, நாகர்கோவில்.
செல்: **8110081165**
**9488888898**

## ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்

ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE






## பலமா பலவீனமா

" கண்ணாடி கற்க்களை
காது தோட்டில் மூக்குத்தியில்
மோதிரத்தில் பதித்து
அணிகிறோம் கண்ணாடிப்
பாறையை அணிய
முடியுமா...?"

தங்கம் வெள்ளியில்
அணிகலன்கள் செய்து
அணிகிறோம் தங்க கட்டி
வெட்டிக் கட்டியை
அணிய முடியுமா ...?"

பூக்களை தனித்தோ
தொடுத்தோ தலையில்
சூடுகிறோம் பூ பந்தாக
தலையில் வைத்துக்
கொள்ள முடியுமா ...?"

ஊசியை தைக்க
பயன்படுத்துகிறோம்
மாறாக கடப்பாறையை
பயன்படுத்த முடியுமா...?"

இரவை உறக்கத்திற்கு
பயன்படுத்துகிறோம்
அதையே பகலாக மாற்றி
பயன்படுத்த முடியுமா ...?"

மனிதனை சவமான
பிறகு எரித்து புதைத்து
பார்க்கிறோம் கண்ணாடிப்
பேழையில் வைத்து அடை
காக்க முடியுமா ...?"

பலாச்சுளையை
சுவைத்து சாப்பிட முடியும்
பலாப்பழத்தை முழுமையாக
சாப்பிட முடியுமா ...?

தேனை ருசித்து சுவைத்து
சாப்பிடுகிறோம் தேனடையை
சாப்பிட முடியுமா ...?"


அரிசியை சமைத்து
உண்கின்றோம் பச்சையாக
சாப்பிட முடியுமா ...?"

வீரத்தை போரில் காட்டலாம்
குழந்தைகளிடம்
காட்ட முடியுமா .....?"



கோபத்தை
மனிதர்களிடம்
காட்டுகின்றோம்
இயற்கையிடம்
காட்ட முடியுமா ...?"

**ஆர் . சீதாராமன்**
சீர்காழி



## மூவரி துளிப்பா..

வெயில் சுடும்
சொல் சுடும்
துப்பாக்கிச் சுடும்.

(2) கண்ணாடி உடையும்
நீர்க்குமிழி உடையும்
மனசு உடையும்.

(3) புலி பாயும்
வெள்ளம் பாயும்
சட்டம் பாயும்.

(4) தென்றல் வீசும்
நாற்றம் வீசும் கை
வீசும்.

(5) மழை கொட்டும்
தேள் கொட்டும்
முரசு கொட்டும்.

(6) வானம் பெரிது
மானம் பெரிது
தானம் பெரிது

(7) கற்றல் நன்று ஆற்றல்
நன்று போற்றல் நன்று

(8) பழம் சுவை பேச்சு சுவை
மௌனம் சுவை

(9) பாகல் கசப்பு
மருந்து கசப்பு
நட்பு கசப்பு



(10) நம்பிக்கை அழகு
பூக்கள் அழகு
உழைப்பு அழகு.

**ஹரணி** தஞ்சாவூர்



## விழிகள்

ரசித்தபடியே கொஞ்சம்
கொஞ்சமாய்க்குழம்பியை
ருசிக்கிறாய் நீ!
உன்னை ரசிக்கும் என்
விழிகள் துளித் துளியாய்
விழுங்குகிறது கா த லை!

## மனசு

என்னென்னவோ
சொல்லிக் கெஞ்சுகிறாய்!
இந்த அழகிருக்கிறதே
அது நழுவி நழுவி
என்மனசில் விழுகிறது!

## மயில்

நீ தங்க மயில் என் மனதில்
தங்கும் மயில்!
ஆகவே நம் கா த லி ன்
அழகை வார்த்தைகளால்
(மட்டும்) சொல்லி விட
இயலுமா என்ன?!

## எப்பொழுது?!

அன்புடன் பண்புடன்
நேசமுடன் பாசமுடன்
என்றெல்லாம் எழுதி
எனக்காகக் கையெழுத்திடும்
நீ எப்பொழுது
கா த லு ட ன்
என்றெழுதப் போகிறாய்?!

## பொங்கும்

என்னை வரவேற்கும்
உன் கண் மையின் அழகு
உன்னை ஒருமையில்
அழைக்கத்தவிக்கிறது
துடிக்கிறது! எப்பொழுது
பொங்கும் இந்தக்கா த ல்?!

## இடம்

ஒவ்வொரு விநாடியும்
என்னைக்கா த லி ல்
நனைய வைப்பதில் நீயே
எப்பொழுதும் முதலிடத்தில்
இருக்கிறாய்!

## கா த ல்

பார்க்கும் பார்வையில் –
பேசும் பேச்சில் –
அணைக்கும் அணைப்பில் –
பரிமாறிக் கொள்ளும்
மு த் த ங் க ளில்–
அனைத்திலும்
ஒட்டிக்கொண்டு
உறவாடுவதில் ஒவ்வொரு
நொடியும் ஒட்டி உறவாடுகிறது
இந்தக்கா த ல்!

## கொஞ்சம்

உன் அழகைக்கொஞ்சம்
கிள்ளி எடுத்தாலும்
ஊரிலுள்ளஎல்லாப்
பெண்களுக்கும்



கொடுக்கலாம்!
இப்பொழுது
புரிகிறதா?
உன் மீது
எனக்குத்
தீ ரா க் கா த ல்
என்று!

**முத்து ஆனந்த்** வேலூர்



தோழி நீ அருகிருந்தும்
என் நிலை அறிந்திருந்தும்
மன்னவனைக்கானா
என் மன நிலை
அறிந்திருந்தும்
தோழி நீ துணையிருந்தும்
வாடுகிறேன் வழி அறியாமல்
வழியொன்றை சொல்லாமல்
வாடும் என்முகமும்
காணாமல்
சென்ற இடம் கூறாமல்
செல்லும் வழியொன்றையும்
கேட்காமலும் காணாமலும்
தவியாய் தவிக்கின்றேன்
கண்டும் காணாமல்
இருப்பாயோ?



வழி ஒன்றை
கூறாயோ ?
கூறமாட்டாயோ
என்னடி
என் சேடிப்பெண்ணே

**ஓம் குமார்**
**P N**
மதுரை 625001



## விறகு அடுப்பு..!

அந்தநாளில் வீடெங்கும்
விறகு அடுப்பு இருந்தது
அம்மா பாட்டி எரியவைத்த
விறகு அடுப்பு இருந்தது!

பசுஞ்சாணி பூசிவைத்து
மாக்கோலமிட்டு..
குளித்து முடித்து பூசித்தக்
காலம் ஒன்று இருந்தது!

அரிசிகளைஞ்சு
விறகு அடுப்பில்
வெந்து பொங்கி வடிந்தது!

இரும்பு போல உறுதி
கொண்ட உடம்பு நன்கு
வளர்ந்தது!

நோய் நொடிகள்
இல்லாமலே.. நம்
பரம்பரைகள் நிலைத்தது!

விறகு போயி.. கேஸ் அடுப்பு
தமிழர் வீட்டில் புகுந்தது!

வித வித மாகயிங்கு
துன்பம் வந்து சேர்ந்தது
விலைவாசி விண்ணிலேறி
நிலவைத் தொட்டு நின்றது!

தமிழர்களின் அடையாளம்



விறகு
அடுப்பாய்
தெரிந்தது!
தட்டுகெட்ட
நாகரீகம்
தமிழன் வீட்டில்
எரிந்தது!

**வே.கல்யாண்குமார்.**

## கண்ணோட்டம் !

பல குடும்பங்களில் கணவன்
தன் மனைவியை மனைவி
என்ற பெயரில் மட்டுமாகவும்,
பெற்றவர்கள்
மருமகள் என்ற ஒரு
கண்ணோட்டத்தில் மட்டுமே
உறவை தொடர..
பெரும்பாலும் மனைவியின்
பெற்றவர்கள்
மருமகனை
' மகன் ' என்ற ஸ்தானத்தில்
வைத்து பார்ப்பதும்
நிதர்சனமே !.

**எம்.பி.தினேஷ்.**
கோவை



## ஆசையே விலகிப்போ

அடுத்த வீட்டு வசதிகளைப் பார்த்து பார்த்தே
அதுபோல தான்வாழ வேண்டு மென்று
கடுகடுத்து மனைவியவள் தொல்லை தந்து
கணவனையே சொல்லம்பால் குத்துகின்றாள் !
அடுத்தவீட்டு ஆண்மகனோ நேர்மையின்றி
அதர்மத்தால் பெற்றதந்த வசதியென்றே
எடுத்துரைத்த கணவனையே எடுத்தெறிந்தே
ஏளனமாய்த் தீநாக்கால் ஏசுகின்றாள் !


உண்ணுகின்ற உணவுக்கு வறுமையில்லை
உடல்மறைக்கும் உடைகளுக்கும் பஞ்சமில்லை
கண்மறைய வாழ்வதற்குச் சொந்தமாகக்
கட்டியுள்ள சிறியவீடும் உள்ளதிங்கே
பண்பாக நடுத்தரத்துக் குடும்பமாகப்
பழியேதும் இல்லாமல் வாழுகின்றோம்
எண்ணத்தில் ஆசையினை வளர்த்துக்கொண்டால்
எண்ணற்ற இன்னல்தான் அறிவாய் என்றான் !

பகட்டாக நாம்வாழ வேண்டு மென்றால்
பகற்கொள்ளை குறுக்குவழி செல்ல வேண்டும்
அகந்தன்னில் இரக்கத்தை அன்பு தன்னை
அகற்றிநஞ்சாய் மனந்தன்னை மாற்ற வேண்டும்



முகம்பார்த்து பேசியவர் தூற்றி நம்மின்
முதுகின்பின் கைகொட்டிச் சிரிப்பர் என்றான்
தகவுடைய இவ்வாழ்வே போதும் ; ஆசை
தவறென்றாள் ! உணர்ந்தவளை அணைத்தான்
போற்றி !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## நிலவே...

எட்டாத உயரத்தில்
எல்லோரும்
மனதையும்
எட்டிப் பிடிக்கும்
பால் நிலவே...
குழந்தைகளுக்கு
விளையாட்டு பொம்மையாக
வலம் வரும் வெண்ணிலவே...
அன்றைய கவிஞர்களின்



காதல் நாயகியே...
இன்றைய கவிஞர்கள்
உன்னை
அழைக்கிறார்கள் என்று
மறந்தும் கூட
கீழே வந்து விடாதே
வருங்கால கவிஞர்களுக்காக
நீ அங்கேயே காத்திரு!

**பாரதிமுத்து**
வேலூர்



இப்போதெல்லாம்
வெயில் ரொம்பவும் பிடித்து
போகிறது உன் அருகாமையை
உணர்வதால்!

உன் கால்தொட்ட
சந்தோஷத்தில்
தலை கர்வம் கொள்கின்றன
அந்த கடலலைகள்!

புரியாமல் போனாலும்
கண்கள் பேசும் கவிதைகள்
பேரழகு தான்!

காதலோடு கெஞ்சி
கேட்கிறேன் –என்
கன்னங்களில்
ஆட்டோ கிராஃப் இடு
முத்தங்களால்!

உன் கண்கள் என்ன
தூண்டிலா?
இப்படி அடிக்கடி,அடிக்கடி
சிக்கிக் கொள்கிறேன்
மீன்களாய்!

இப்படியே சிரித்து கொண்டே
இருஇன்னும் சில காலம்
நிம்மதியோடு
வாழ்ந்து விட்டு போகிறேன்!

மை பூசும் கண்களை பார்த்து
பொய் பேச மனம் வரவில்லை
கர்வம் விட்டு
சொல்கிறேன்
நீ தான் என்
உயிரென்று!
எதையும் எதிர்பாராததே
யதார்த்த காதல் அதில்
உண்மை மட்டுமே
நிறைந்திருக்கும்.

தன்னை தானே தாழ்த்தி
கொள்பவன்–ஒரு போதும்
தாழ்ந்து போவதில்லை என
பைபிள் சொல்கிறது.
விட்டு கொடுப்பவன்
கெட்டுப் போவதில்லை
கெட்டு போகிறவன்
விட்டு கொடுப்பதில்லை என
நீதிநெறிக் கதைகள்
சொல்கிறது. எதை நீ
தொடர்ந்து நேசித்து
கொண்டிருக்கிறாயோ
நிச்சயம் ஒருநாள்
அதை வெறுப்பாய் என
பகவத் கீதை சொல்கிறது
எதை நீ வெறுத்து
கொண்டிருக்கிறாயோ
நிச்சயம் ஒரு நாள் அதை
நேசிப்பாய் என குர் ஆன்
சொல்கிறது. எல்லா
கடவுள்களும்–புனித
நூல்களும் சான்றோர்களும்–
ஆன்றோர்களும் நல்லதையே
அறிவுறுத்துகின்றனர்,
ஏனோ நம் செவிட்டு
காதுகளுக்கு நல்லவை
கேட்பதே இல்லை
குருட்டு கண்களுக்கு
நல்லவை தெரிவதே இல்லை
இதுவரை வாழ்ந்த
அர்த்தமற்றவைகள் எல்லாம்
போனது போனதாகவே



இருக்கட்டும்.
இனிமேலாவது
படித்து திருந்து
இல்லையெனில்
பட்டாவது திருந்து!

**லி.நௌஷாத் கான்**

# புத்தக விமர்சனம்

வரலாற்றுப் பக்கங்களில்
கயப்பாக்கம்.
ஆசிரியர் : இரா.இரமேசு
புத்தகத்தின் பெயர் :
வரலாற்றுப் பக்கங்களில்
கயப்பாக்கம்
பதிப்பகம்: இராமசரசு பதிப்பகம்
பக்கம்: 160 விலை: 160
கைபேசி எண்: 9585790709

வரலாற்றுப் பக்கங்களில் கயப்பாக்கம் என்ற நூல், ஆசிரியர் ரமேஷ் அவர்களின் மற்றுமொரு சிறந்த படைப்பாகும்.

வரலாற்றில் கயப்பாக்கம் எவ்வகையில் சிறப்புடையதாக இருக்கிறது என்பதை, வரலாற்று சான்றுகளின் அடிப்படையில் துள்ளியமாக எழுதி இருக்கிறார் ஆசிரியர்.

மூன்று வகையில் கயப்பாக்கம் வரலாற்றில் முக்கியத்துவம் பெருகிறது.

மூன்றில் முதன்மையானதாக, கயப்பாக்கத்தில் உள்ள சிவன் கோயில். சுமார் 800 ஆண்டுகளுக்குப் பழமையான கோயிலில் காணப்படும் கல்வெட்டு சான்றுகளின் அடிப்படையில் கோயில் என்று ஆணித்தரமாக வரலாற்றில் பதிவு செய்கிறார். மற்றும் அக்கோயில் பிற்கால சோழர்களின் கட்டிடக்கலை சார்ந்திருக்கிறது என்பதை துள்ளியமாக வரலாற்றில் பதிவு செய்கிறார்.

கயப்பாக்கத்தின் அடுத்த இரண்டாவது முக்கியத்துவம் சதாசிவம். கயப்பாக்கம் சதாசிவம் என்று இணையத்தில் இவரைப் பற்றியத் தரவுகள் தேடினால் கொட்டி கிடக்கிறது ஏராளம். தமிழை வளர்த்தவர் என்று குறிப்புகள் கிடைக்கும். சைவ சமயத்தின்மீது அதிக ஈடுபாடு கொண்டவர். சிவன் கோயில் இருக்கும் இடமெல்லாம் சென்று, அதன் முக்கியத்துவத்தை சமயப் பரப்புரையின் மூலமாக மக்களிடத்தில்கொண்டு சேர்த்தவர் என்று இவரைப் பற்றிப் பதிவு செய்கிறார்.

முத்துலிங்கா என்பவரைச் சமூக சீர்திருத்தவாதியாகவே, தமிழுக்கு அவர் ஆற்றிய தொண்டின் முக்கியத்துவத்தை இந்தப் புத்தகத்தில் விளக்கமாகவும் கொடுத்துள்ளார்.

கயப்பாக்கத்தை சுற்றி அமைந்துள்ள தரவுகளை ஆங்காங்கே சுவைபட தந்துள்ளார். அதனோடு கயப்பாக்கத்துக்கு அருகில் உள்ள புத்தூர் என்ற சிற்றூரில் அமைந்துள்ள பல்லவர்கள் கால கொற்றவையில் புடைப்புச் சிற்பம்பற்றிப்புதுமையான தகவல்களையும் இப்புத்தகத்தில் பதிவு செய்துள்ளார். சங்க காலம் தொடங்கி களப்பிரர் காலத்தில் பயணித்து, பல்லவர் காலத்தின் எச்சங்களைத் தொட்டுச் சோழர் காலத்தில் முக்கியத்துவத்தை கோடிட்டு, விஜயநகர ஆட்சி காலத்தில் முக்கிய பங்காற்றிய நாயக்கர் காலம் மன்னன் லிங்கம நாயக்கனைப் பற்றியச் செய்திகள் அதிகம் இடம் பெற்று இருப்பதோடு, கயப்பாக்கம் என்ற ஊர் இரைப்பாக்கம் என்ற 16 ஆம் நூற்றாண்டில் அழைக்கப்பட்டிருக்கின்றது என்ற சுவையான செய்தியைச் சொல்லியிருக்கிறார்.

நவீன காலத்தின் இரு முக்கியத்துவம் வாய்ந்த ஆளுமைகளான சைவத்தைப் போற்றி தமிழ் வளர்த்த கயப்பாக்கம் சதாசிவமும், இந்தி மொழி எதிர்ப்பு, தமிழ் சமூகத்தின் புரையோடிப் போன மூடப் பழக்க வழக்கங்களையும், அவ நம்பிக்கைகளையும் புரட்டிப் போட்டதில் பெரியாரின் துணையோடு முத்துலிங்கா செயல்பட்டிருக்கிறார் என்பதை இந்தப் புத்தகத்தில் அவர் பதிவு செய்திருக்கிறார்.

மூன்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளின் தொகுப்பாகவே இந்தப் புத்தகம் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது

R. சுந்தர் B.E., M.BA.,
SRM பொறியியல் கல்லூரி




## எச்சரிக்கை !

மது குடித்துவிட்டு வாகனம்
ஓட்டுகிறாயா ....
வழியில் சோதனைக்கு
நிற்கும் காவலர் உன் முக
பாவனையை வைத்தே
கண்டுபிடித்து விடுவார்
உன் ரத்தத்தில் ஆல்ஹகால்
கலந்திருப்பதை...

இரத்த பரிசோதனையில்
அது உறுதியாயிற்றின்...
நீ குடித்த இருநூறு ரூபாய்
சரக்கிற்கு அபராதம்
ஆறாயிரம் !

உன் வாகனம் பறிமுதல்
செய்யப்படும்....
வாகனத்தை திரும்ப
கைப்பற்ற நடையாய்
நடக்கவும் வேண்டும்....

மது... மானத்தை மட்டும்
அல்ல உன் வாகனத்தையும்



களவாடும்...

சிந்திக்க !

**எம்.பி.**
**தினேஷ்.**
கோவை






காதலோடு கெஞ்சி
கேட்கிறேன் –என்
கன்னங்களில் ஆட்டோ
கிராஃப் இடு முத்தங்களால்!

உன் கண்கள் என்ன
தூண்டிலா? இப்படி
அடிக்கடி, அடிக்கடி சிக்கிக்
கொள்கிறேன் மீன்களாய்!

இப்படியே சிரித்து கொண்டே
இரு இன்னும் சில காலம்
நிம்மதியோடு
வாழ்ந்து விட்டு போகிறேன்!

மை பூசும் கண்களை பார்த்து
பொய் பேச மனம் வரவில்லை
கர்வம் விட்டு சொல்கிறேன்
நீ தான் என் உயிரென்று!

எதையும் எதிர்பாராததே
யதார்த்த காதல் அதில்
உண்மை மட்டுமே
நிறைந்திருக்கும்.

தன்னை
தானே தாழ்த்தி
கொள்பவன்–ஒரு
போதும் தாழ்ந்து
போவதில்லை என
பைபிள் சொல்கிறது.
விட்டு கொடுப்பவன்
கெட்டுப் போவதில்லை
கெட்டு போகிறவன்
விட்டு கொடுப்பதில்லை என
நீதிநெறிக் கதைகள்
சொல்கிறது. எதை நீ
தொடர்ந்து நேசித்து
கொண்டிருக்கிறாயோ
நிச்சயம் ஒருநாள் அதை
வெறுப்பாய் என பகவத் கீதை
சொல்கிறது எதை நீ வெறுத்து
கொண்டிருக்கிறாயோ
நிச்சயம் ஒரு நாள் அதை
நேசிப்பாய் என குர் ஆன்
சொல்கிறது. எல்லா
கடவுள்களும்–புனித
நூல்களும் சான்றோர்களும்–
ஆன்றோர்களும் நல்லதையே
அறிவுறுத்துகின்றனர்,
ஏனோ நம் செவிட்டு
காதுகளுக்கு நல்லவை
கேட்பதே இல்லை
குருட்டு கண்களுக்கு
நல்லவை தெரிவதே இல்லை
இதுவரை வாழ்ந்த
அர்த்தமற்றவைகள் எல்லாம்
போனது போனதாகவே
இருக்கட்டும்.
இனிமேலாவது
படித்து திருந்து
இல்லையெனில்
பட்டாவது திருந்து!



**லி.நெளஷாத் கான்**

## இன்றே செய்

துயரத்தின் நினைவுகளில்
துதிபாடி துதிபாடி
வயிரத்தின் நெஞ்சுறுதி
வலிமையிளை இழக்காதே !

செழுக்கும் மாடுகளாய்
செறித்தவையை
அசைபோடும் பக்கத்தைப்
புரட்டாமல் படிப்பதினை
நிறுத்திவிடு !

நேற்றிரவு
கனவுகளின்
நெருடலினைப்
பகலெல்லாம்
ஊற்றாகிப்
புதுப்பிக்கும்
உணர்வுகளின்
நிலைமாற்று!

காலத்தின் ஓட்டத்தில்
கடுகிபுவி மாற்றுகின்ற
கோலத்தின் உறுப்பாகிக்
கொள்கைக்கு
வழிசமைப்பாய்!

நடந்திட்ட செயலெல்லாம்
மடிந்தவையே ! நாளையினி
நடக்கின்ற செயலெல்லாம்
நாமறியும் தெளிவில்லை!

வருந்தாமல்
உழைத்திடுவாய்
வளரறத்தை நெஞ்சேற்று
இருக்கின்ற இன்றேதான்
இன்பத்தை வரவேற்கும் !



**பாவலர்
கருமலைத்தமிழாழன்**



## நெய்தல் நாடனே.. நீடு வாழி.!

பொங்கு கடல்.. சங்கு முத்து..
பரவி நின்ற நாடு

எங்கும் தமிழ் நெய்தல் நாடு
நீடு வாழப் பாடு!

மீன்கள் துள்ளி மேவி யாடும்
கரையில் சிந்துப் பாடு!

மீனவர்கள் வாழ்வு நிலை
உணர்ந்து கவியாடு!

பரதவர்கள் வலை விரித்து
கெண்டை மீன்கள் பிடிப்பர்!
பாவையர்கள் கரையிருந்து
பொங்கல் வைத்து அழைப்பர்!

இரவுப்பகல் கடல்மாதா
காத்து நின்று அருள்வாள்!

இன்று யோய் நாளை வந்து
இனிய வாழ்க்கை வாழ்வர்!

வலைநிறைய கயல்கள்
துள்ளி மகிழ்ந்து
விளையாடும்!
கலை வளர படகுதுறையில்
கைகள் கொட்டி இசைப்பர்!

கச்சத் தீவு கரையில்ஒதுங்கும்
மீன்களென ஆனோம்..

காடையர்கள் சிங்களத்தார்
சிறைப் பிடிப்பார் பாரும்..

வீரம் எங்கே.? விடியல்
எங்கே?தேடும்எங்கள்வாழ்வே..

நெய்தல் நிலம தமிழர் இனம்
யாதும் எமது ஊரே..

ஒற்றுமையாய் கடலாடி
திரைக் கடலைக் கடந்து

வெற்றி மாலை சூடும் நாளை
நெய்தல் நாடே வாழி!

**வே.கல்யாண்குமார்.**



## வழக்கு !.

தன் மகன் வசிக்கும்
வெளிநாட்டில் சிறிதுகாலம்
இருந்து திரும்பியிருந்த
கோபாலன் & தம்பதி
அப்போது தான் அதைக்
கண்டார்கள்...
பக்கத்தில் புதிதாக வீடு
கட்டி இருந்தவர்கள் தன்
நிலத்தில் இரண்டடியை
ஆக்கிரமித்திருந்தார்கள்...

"நீங்க வந்ததும் பேசலாம்னு
இருந்தேன் , உங்க
போன் நம்பர் கிடைக்கலை
உங்களுக்கு அதுக்கான
தொகையை நான் கொடுத்து
விடுகிறேன் !"

என்று புதிய வீட்டுக்காரர்
எவ்வளவு சொல்லியும்
சம்மதிக்கவில்லை கோபால்...

"நோ நோ ...நீங்க
பண்ணியது,சட்டப்படி
தப்பு,நான் கோர்ட்டில்
பார்த்துக்கிறேன்... !"

கோபாலுக்கு
உண்மையில் தன் வீட்டைவிட
பெரிய வீடாய் புதிய
வயிற்றெரிச்சல் தான் .

கோர்ட்டில் நில அபகரிப்பு
வழக்கு 441 ஐ தொடர்ந்தார்
கோபால்...

வயதான தம்பதிகள்
தங்களுக்கு ஆதரவாய்
பக்கத்து வீட்டினர்
இருப்பார்கள் என்ற சிந்தனை
கூட அவர்களுக்கு இல்லை...

பதில் வழக்கு தொடர்ந்தார்
பக்கத்து வீட்டுக்காரர்...

வழக்கு தொடர்ந்தது வயது
மூப்பில் கோபால் மரணம்
அடைந்தார் ,வழக்கை அவர்
மகன் தொடர்ந்தார்....
அமெரிக்காவில் வாழும்
மகனிடம் வக்கீல் பீஸ் என்று
பலமுறை பணம் கறந்தார்
வக்கீல்....

இரண்டடி நிலத்தின்
விலையை விடவும் கோர்ட்
வழக்கு போக்குவரவு, என்று
செலவால் மனம் நொந்த
அமெரிக்க மகன் தானாகவே
ஒத்து தீர்ப்புக்கு இறங்கி
வந்தான்.

வழக்கு.... எளிதில் யார்
மீதும், எவர் மீதும் திணித்து
விடலாம்... தீர்ப்பு கேட்க
வழக்கு போட்ட
தலைமுறையே இருக்க
வாய்ப்பில்லாமல்
போய்விடும்
என்பதே உண்மை !



**எம்.பி.தினேஷ்.**
கோவை



## வெண் கோப்பை

காதலுக்கு சின்னமாய்
ஒற்றை ரோஜா,
கவர்ந்து இழுத்து கட்டி
வைத்த சிவப்பு ரோஜா
கல்யாண மேடைகளில்
கண்ணைப் பறிக்கும்
கட்டிலிலே தூவும் போது
மேலும் சிவக்கும்

தொட்டில் கட்டி ஆடுகையில்
குழந்தை போலே மெத்தென்று
இதமான இனிமை சேர்க்கும்

கோவில்களில் மாலையாகி
மோட்சம் அடையும், பன்னீராய்
உருவெடுத்து வாசம்
நீளும் சாலைகளில் விரல்
நீட்டும் சிலைகள் மேலே,
பிறந்ததிற்கும் இறந்ததிற்கும்
அஞ்சலியாகும்
கல்யாண நாளோ
கடைசி நாளோ,
மிதி பட்டு நோகின்ற
ரோஜாப் பூவே...
உனக்காக ஒரு நிமிஷம்
மௌன அஞ்சலி



**மீனா சேகர்**

நேரசைக் கட்டளைக்
கலித்துறை
தாய்மொழி போற்று!

தோற்றமே காணாத
தொன்மை மொழியே
தமிழ்மொழியே!

ஏற்றமே போற்றிடும்
எல்லோர் மொழியே
தமிழ்மொழியே!

தூற்றலே வந்தாலும்
தூய மொழியே
தமிழ்மொழியே!

ஆற்றலும்
அன்புடன்
ஆன்ற வகையே
தமிழ்மொழியே!



**முனைவர்
இராம.
வேதநாயகம்.**




## மீனவர் வாழ்வு

அலைகளோடும்
வலைகளோடும்
அலைமோதும் அன்றாட
வாழ்க்கை

கடலுக்குள் சென்று மீன்
பிடிக்கப் போனால்
கரை சேர்வது கனவேயாகும்

அண்டை நாட்டு மீனவர்கள்
நட்போடு இருப்பது அதிசயம்
என்றால்

அரசாங்கமும்
அவ்வப்போது
கைது செய்வதும்
விடுவிப்பதும்
பழிவாங்குதலும்
தாய்நாடே கைவிட்ட
வரலாறும் சுமந்ததொரு
அல்லாடல் தான்

நாற்றம் துர்நாற்றம் இரண்டும்
அறியாததொரு வாழ்வாதாரம்

நித்திய கண்டம் பூரண
ஆயுசு என்பார்களே அது
போலத்தான்

சுய நலமல்லாததொரு பொது
நல வாழ்க்கை என்பது
உண்மை

கொஞ்சம் சோறும் குடிசை
வீடும் துக்கமும் கஷ்டமும்
உடன் பிறந்தவையாம்



**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

குறள்வெண் செந்துறை!

## வயல்!

உழவு நிலமே வயலாகும்
ஊரின் மருதம் வயலாகும்
அழகாய் விளங்கும்
மருதந்தான் அளிக்கும்
உணவை மருதந்தான்!

வயலின் தோற்றம்
வண்ணமாகும் வளங்கள்
நிறைந்த மண்ணாகும்
வயலின் வனப்பே
உயர்வாகும்வண்ண
உணவின் களமாகும்!

**முனைவர்
இராம.வேதநாயகம்.**

## விட்டுக்கொடுத்து வாழ்

விட்டுக்கொடுத்து
வாழ்ந்து பார் மெட்டு
போட்ட இசை போல
வாழ்க்கை அமையுமே...
விவாதம் செய்வது வீண்
வேலை விட்டு விட்டால்
சமரசம் ஆகுமே, இதில்
யாரும் குறைந்தவர் இல்லை
என்று உணர்ந்து விடு
வேதனையில்
வார்த்தைகளை விட்டு
விட்டால் சோதனை மேல்
சோதனை என்று வேதனை
பட வைக்கும் விவாதத்தில்
அடுத்தவர் பேச்சை செவி
கொடுத்தால் அதுவே
விட்டுக் கொடுத்தல்
விவாதம் செய்து வெற்றி
பெற்றால் அதில் துன்பமே
வரும் அடுத்தவர் மனம்
வேதனையில் புழுங்க நாம்
வாதித்து வெற்றி பெறுவதில்
என்ன லாபம் ..
விட்டுக் கொடுப்போம்
சமரசமாக
உறவுகளுடனும்
நட்புடனும்
வாழ்வோம்...



**உஷா
முத்துராமன்**

வானத்தில் வெண்மேகம்
சூழக்காரணம் அவளின்
புன்னகைதான் அந்த
ஒருத்தியைப் பார்த்துதான்
பருத்திக்காடு சிரிக்கக்
கற்றுக் கொண்டது.

## பொங்கல்

பொங்கிவரக் கற்றுக்
கொண்டதுகூட அவளின்
புன்னகையை பார்த்துதான்
ஏன்? நான்சிரிக்கக் கற்றுக்
கொண்டதே அருப்புக்
கோட்டையில் இருக்கும்
அந்தப் பெண்ணைப்
பார்த்துதான்



**சந்திர
சேகரன்
அமுதா**
செஞ்சி
கோட்டை

## நகைச்சுவை

வாடி இருக்கும் தாமரை
முகங்கள் சூரியனைக்கண்டு
மலர்வதில்லை அடக்க
முடியாத சிரிப்பலைகளில்
சில்லென்றுபூக்கின்றன!

கவனம் சிதையாமல்
கருத்துகளைச்
சுகமாய்ச்சுமந்து
காந்தமாய் ஈர்த்து
நினைவுகளில் நிலை
நிறுத்தும் களிப்புமிகு
கடிவாளம்!

செவிக்கு நல்லவிருந்தாய்ச்
சோகத்தை மாய்க்கும்
மருந்தாய் ஆயுளை
அதிகரிக்கும் அமிழ்தாய்ச்
சொர்க்கத்தின் நிழலாய்
நிம்மதியை தருகின்றது!

வயிறு புடைக்க
உணவினை புசித்தால்
உறக்கம் உறவாடும்
வயிறு குலுங்க சிரித்து
விட்டால் உற்சாகம்
உறவாடும்!

இங்கே வான்மழை
பொய்த்துவிட்டால்
உலகுக்குப்பஞ்சம்
சிரிப்புமழை
பொய்த்துவிட்டால்
உணர்வுகளுக்குப்பஞ்சம் !
உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்
தோராவர்
சிந்தை மகிழ
சிரிப்புகள்
தந்தோர்
சிறகுகள்
தந்தோராவர்!



**கவிஞர்
த.அனந்தராமன்**
துறையூர்

## நான் ஒரு ஆண்டி.!

நான் ஊருக்கு ஊர் செல்லும் ஆண்டி!
சில உண்மைகள் சொல்வேண்டி! இது யாருக்கும் பயனுற
வேண்டி! பல பாட்டுகள் பாடுகிறேன்டி!

உடல் ஒரு அழகியத் தோண்டி! அது உயிர்ப்பறவை அமரும்
கிளை தாண்டி! அது இருக்கிற காலத்தைத் தாண்டி..
பறந்துவிட்டால் உடல் போண்டி!

கொடு என படைத்த கை தாண்டி! எடுத்திட பழகியதேன்டி?
நட என இரு கால்தந்தாண்டி! அது நரகலை மிதித்தது ஏன்டி?
ஒரு மையில் இதயம் படைத்தாண்டி..
அதை ஒளித்து ஏன் வைத்தான்டி?

மண் விளக்கிதிலே.. தாண்டி.. ஒளிவிளக்கேற்றேன்டி!
இருள்நிலை மாற்றிட வேண்டி.. அன்பெனும் நெய்யூற்றேன்டி!
உள்ளொளி பரவினால்தாண்டி..
உருபொருள் தெரியும் அறியேன்டி!

**வே.கல்யாண்குமார்**



## அழகுமரம் – ஊஞ்சல்

ஆற்றோரம் அழகுமரம்
அதிலாடும் ஊஞ்சல்
காற்றோடு அதுவாட
கன்னியோ அதன்மேலே
முகம்பார்க்கும் ஆடிபோல்
முழுவதுமாய் நிர்நிலை
யுகம்யுகமாய் அமர்ந்து
இரசிக்கும் சூழ்நிலை
பாதம் கிசுகிசுக்க பரவும்
வட்டங்கள்
சேதம்
இன்றியே
சிந்தனை
விரிக்கும்!!



**வைரமணி**
சென்னை

பஸ்ஸில்.. ரயிலில்..
பயணிக்கும் அப்பிராணி
போல அவ்வப்போது
வாழ்க்கை
இடம்பெயர்த்து
அமர வைக்கிறது.
'கொஞ்சம் சீட்
மாத்திக்கிறீங்களா..
ப்ளீஸ்'
கடைசியாக
கிடைத்த
இருக்கையில்
சுழல்கிறது
சக்கரம் !



**ரிஷபன்**

## முன் ஏர்

இரவுத் தூக்கம் முக்கியம்
சதா பகல் தூக்கம் மூதேவி
ஆக்கிரமிக்க வழி வகுக்கும்

ஆபத்து நேரத்தில் உதவுவாய்
ஏமாளியாய் இருக்கக்
கூடாது

பணம் குவிக்க சூதாட்டத்தில்
முதலீடு செய்வது அறிவீனம்

கவலையிலிருந்து
அகன்றிடபோதைக்கு அடிமை
ஆகாதே

சான்றோர்
வகுத்த
நீதியைத்தட்டாமல்
கடைப்பிடிப்பாய்



**பி. பழனி,**
சென்னை

## உடலைப் பேணும் உபாயம்

யாகாவாராயினும் யோகாவை மறக்க வேண்டாம்.....
அதிக நேரம் உட்கார்ந்து இருக்க வேண்டாம்...
வெளி உணவை வாங்கி நாமும் உண்ண வேண்டாம்....
புட்டிகளில் குளிர்பானம் பருக வேண்டாம்
பீஸா,பர்கர் உணவை எந்நாளும் தின்ன வேண்டாம்....
வெளி உணவை விரும்பி நாமும் வாங்க வேண்டாம்....
அதிக நேரம் கைப்பேசி பார்க்க வேண்டாம்...
காதுகளில் அதிக ஓசை கேட்க வேண்டாம்
காற்றை கெடுக்கும் பட்டாசுகளை வெடிக்க வேண்டாம்....
தொழிற்சாலை கழிவுகளை நீரில் சேர்க்க வேண்டாம்...
நெகிழியை எந்நாளும் பயன்படுத்த வேண்டாம்....
ஓசோன் மண்டலத்தை மேலும் அழிக்க வேண்டாம்...
போகி அன்று பழைய பொருளை எரிக்க வேண்டாம்.....
பஞ்ச பூதங்களை நாம் காத்து வந்தால்..
எஞ்சிய நாளை இயற்கை நம்மைக் காக்கும்!!!!

காலை மாலை இரு வேளையும் காலாற நடக்க வேண்டும்....
உடற்பயிற்சி தினம்தோறும் செய்ய வேண்டும்...
சிறுதானியங்களை மீண்டும் நாம் உண்ண வேண்டும்...
மூச்சுப் பயிற்சியும் தியானத்தையும் முனைப்போடு செய்து
வந்தால் முழு உடல் நலம் பெறலாம் மருத்துவமனை பக்கம்
செல்லாமல் மகிழ்வோடு வாழலாம் நூற்றாண்டைக் கடந்து...

பச்சைக்கு ஒரு காய்கறி.... வெள்ளைக்கு சிறிது
பாலும் மோரும்.... சிவப்பிற்கு கொஞ்சம்
பழமும்... தினந்தோறும் உண்டு வந்தால்...
தேசியக்கொடியில் உள்ள சக்கரம் போல்!
வாழ்க்கைச் சக்கரம் வளமோடு இயங்கும்!
மகிழ்வோடு வாழலாம்... உடலை வளர்ப்போம்,
உயிர் வளர்ப்போமே....



**ம. முத்துலெட்சுமி,** ஒசூர்

ஒரு திருடன் கதவை உடைத்து உள்ளே சென்று தூங்கிக்
கொண்டிருந்த ஒரு பெண்ணின் தாலிக்கொடியை கத்தி
இல்லாமலே அறுத்தான். பிறகு வெளியே வந்து தண்ணி
அடித்தான். ஆனால் போதை வந்தது.
தள்ளாடி நடந்து கொண்டிருந்தான். எதிரே வந்த காவலர்கள்
ஏண்டா தண்ணி அடிச்சாயா என்றனர்.
இல்லையென்றான் அவன். வாயை ஊது என்றனர் காவலர்கள்.
வாயை எப்படி ஐயா ஊத முடியும்.உங்கள் விசிலைக்
கொடுங்கள் ஊதுகிறேன் என்றான் அவன். நட ஸ்டேஷனுக்கு
என்றனர். எந்த ஸ்டேஷனுக்கு என்றான் அவன்.
கோபமடைந்த காவலர்கள், வா காண்பிக்கிறோம் என்று
லத்தியால் அவனை அடித்து கைகளில் விலங்கை மாட்டி
இழுத்துச் சென்றனர். காவல் நிலையத்திற்குள் அவனை
இழுத்துச் சென்றதும், உள்ளே இருந்த காவல்துறை துணை
ஆய்வாளர் என்னய்யா கேஸ் என்றார்.
தண்ணி என்றார் ஒரு காவலர்.
உனக்கு என்ன திமிர் என்னையே தண்ணி
கேட்கிறாயா என்றார் கடும் கோபமடைந்த அந்த
உதவி ஆய்வாளர்.
வழக்குச் சொற்களுக்கும் இலக்கண தமிழ்
சொற்களுக்கும் எவ்வளவு வேறுபாடு ......?



**உ.மு.ந.ராசன்கலாமணி,** கோவை.

# வாசகர் கடிதம்

டித்துவா புயல் வருகை. புயலுக்கு புது புது பெயர்களை வைத்து ரொம்ப பயமுறுத்துகிறார்கள். செங்கோட்டையன் விஜய் கட்சியில் ஐக்கியமானார். உள்ளூர் செய்திகள் அனைத்தும் தரமாக உள்ளது. கிராம்பின் மருத்துவ பயன்கள் பற்றிய கட்டுரை மிக்க பயனுள்ளதாக அமைந்தது. தமிழ்நாடு முழுவதும் 702 ரயில் ஓட்டுநர்கள் பற்றாக்குறை. பழமை கால கல்யாணம் பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது. பைரவருக்கு ஏன் மிளகாய் பொடி அபிஷேகம் செய்யப்படுகிறது என்ற கட்டுரை பல உண்மைகளை அறிய முடிந்தது. டியூட் படத்தில் இளையராஜா பாடல்களை நீக்க கோரி மனு. ஊட்டி தாவரவியல் பூங்கா சீரமைக்கப்பட்டது. பெண்களுக்கு பத்து லட்சம் வரை கடன் வழங்கப்படும் எல்லாம் தேர்தல் படுத்தும் பாடு. டிசம்பர் முதல் செம்மொழி பூங்காவிற்கு கட்டணம் வசூலிக்கப்படும். அசாமில் இரண்டாம் திருமணம் செய்தால் சிறை தண்டனை வழங்கப்படும். தரமான செய்தி. இலங்கை கனமழையில் 4000 பேர் பாதிப்பு. இந்தோனேசியாவில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது இதுவரை 49 பேர் பலியானார்கள் இன்றைய தினம் உள்ள அனைத்து செய்திகளும் கவிதைகளும் கட்டுரைகளும் அனைத்தும் சிறப்பாக அமைந்துள்ளது பாராட்டத்தக்கது. காதல் சாம்ராஜ்யத்தின் தலைவர் முத்து ஆனந்த் அவர்கள் கவிதை போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளது. கவிதைகள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாகும் வாழ்த்துக்கள் சார் தமிழ்நாடு இ பேப்பர் வழங்கும் தெய்வம் இதழுக்கு நாம் அனைவரும் சந்தா கட்டி ஆதரவு அளிக்க வேண்டும் ஆன்மீகத்தை சிறப்பாக வெளிக்கொண்டுவரும் தெய்வம் இதழுக்கு நாம் ஆதரவு அளிக்க வேண்டும் மீண்டும் நாளை சந்திப்போம்



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

தமிழ் நாட்டில் டித்வா புயல் உருவானது #ஆறு மாவட்டங்களுக்கும் ரெட் அலெர்ட்
விஜய் முன்னிலையில் தவெகவில் இணைந்தார் செங்கோட்டையன் #அவருக்குப் பதவியை அறிவித்தார் விஜய்
தமிழ்நாடு முழுவதும் 702 ரயில் ஓட்டுநர்கள் பற்றாக்குறை#ஆர்டிஐ தகவலில் அதிர்ச்சி
ஆண்டுக்கு 50 செயற்கைக் கோள்கள் வீதம் மூன்றாண்டுகளில் 150 செயற்கைக் கோள்கள் விண்ணில் ஏவ திட்டம்#இஸ்ரோ தலைவர்
புதுக் கவிதைகள் வெகு நேர்த்தி
நூல் விமர்சனம் அருமை

வாசகர் கடிதங்கள் அபாரம்
கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்#குடும்பத்தினர் சிபிஐ முன் ஆஜர்
தேர்வு, நேர் காணல் கிடையாது#விண்ணப்பித்தால் போதும் அரசு துறைகளில் வேலை உறுதி
முன்னாள் முதல்வர் ரப்ரிதேவி அரசு பங்களாவை காலி செய்ய உத்தரவு#மாநில அரசு நோட்டீஸ்

போக்குவரத்து ஊழியர்களுக்கு ரூ.860 கோடி பணப்பலன்கள்#அரசாணை வெளியீடு

ராமநாதபுரம்: தடையை மீறி பிடித்த மீன்கள் பறிமுதல்#மீனவர்களுக்கு எச்சரிக்கை

டியூட் படத்தில் பாடல்களை நீக்கக் கோரி இளையராஜா தாக்கல் செய்த் மனு#சென்னை ஐகோர்ட் ஒத்தி வைப்பு

இரண்டாம் திருமணம் செய்தால் பத்தாண்டு சிறை#அசாம் பேரவையில் மசோதா நிறைவேற்றம்

உலகக் கோப்பை செஸ் போட்டி#ஜாவோகிர் சாம்பியன் ஆனார்
மராட்டிய மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ரூ.9800 கோடி #மத்திய மந்திரிசபை ஒப்புதல்
ஜல்ஜீவன் திட்டத்தில் முறைகேடு#தமிழ்நாடு உட்பட 7மாநிலங்களுக்கு 129 கோடி அபராதம்
எஸ் ஐ ஆருக்கு எதிரான மனுக்கள்#டிசம்பர் 4ல் விசாரணை

ஆபரேஷன் சிந்தூரின்போது உரி நீர்மின் திட்டத்தை தகர்க்க திட்டமிட்ட பாகிஸ்தான்#சதியை முறியடித்த வீரர்களுக்குப் பரிசு
2030ல் அகமதாபாத்தில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி #அதிகாரப் பூர்வ அறிவிப்பு

வெள்ளை மாளிகை அருகே துப்பாக்கிச் சூடு#ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர் கைது
இந்தோனேஷியாவில் கடும் வெள்ளப் பெருக்கு#நிலச் சரிவில் சிக்கி 49 பேர் உயிரிழப்பு
தொடர் மழை சீற்றம்#இலங்கையில் மோசமடையும் நிலைமை
நைஜீரியாவில் அதிகரிக்கும் ஆள் கடத்தல்#அவசர நிலை அறிவித்த ஜனாதிபதி



-பி.சுரேகா
சென்னை

இன்றைய தமிழ்நாடு இ பேப்பரில் நலம் தரும் மருத்துவம் பகுதியில் சமையலுக்கு சுவையூட்ட பயன்படுத்தப்படும் கிராம்பு மருத்துவ குணம் நிறைந்து ஒரு பொருள் என்பதை படித்த போது ஆச்சரியப்பட்டு போனேன். தினமும் இந்த பகுதியில் மருத்துவ குணம் கொண்ட பழங்கள் மற்றும் பொருள்களைப் பற்றி மிக தெளிவான கட்டுரைகள் வாசகர்களுக்கு நல்ல பயனுள்ள பகுதியாக இருந்து வருகிறது. .அதற்காக ஆசிரியர் குழுவையே எவ்வளவு பாராட்டினாலும் தகும். சிறுகதை பகுதியில் ராஜநடை சிறுகதை எழுதிய முகில் தினகரன் தமிழ்நாடு இ பேப்பரில் 200 சிறுகதைகளையும் தாண்டி சாதனை படைத்து வரும் அவரது சிறுகதைகள் ஒவ்வொன்றும் மிகச் சிறப்பாக உள்ளன. ஆன்மீகக் களஞ்சியம் பகுதியில் புகழ் சோழ நாயனார் கதை படித்தேன். புகழ் சோழ நாயனார் புனித சாம்பலை உடலில் தடவிக்கொண்டு நெருப்பில் நுழைந்த யாகம் அவரது சிவத்தொண்டை சொல்லும் வகையில் அமைந்திருந்தது. ஒவ்வொரு வாரமும் ஒரு நாயனாரின் வரலாற்றை படிக்கின்ற பொழுது ஆன்மீக சிந்தனை மனதில் பதிய வைக்கின்றது.



-கவி-வெண்ணிலவன்
மணமேல்குடி




வணக்கம். 28. 11.25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பர். காம் முதல் பக்கத்தில் த.வெ.க. கட்சியில் செங்கோட்டையன் அவர்கள் இணைந்தார் என்ற செய்தி அரசியலை நன்கு படிக்க முடிந்தது. இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக எனக்கு நல்ல தகவல்களை சொன்னது. திருவண்ணாமலையில் நடந்த தீபத் திருவிழா என்ற படமும் காட்சியும் மிகவும் அற்புதம் அங்கு சென்று பார்க்க முடியாத குறையை தீர்த்த அந்த பக்கத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள். கிராம்பு ஒரு அற்புதமான நறுமணப் பொருள் மட்டுமல்ல அதில் பல மருத்துவ பயன்கள் உள்ளன என்று நலம் தரும் மருத்துவம் பகுதியில் மிக அற்புதமாக சொன்னது தினமும் கிராம்பு சாப்பிட்டு ஆரோக்கியமாக வாழ உதவும் ஒரு பகுதி. ஆண்டுக்கு 50 செயற்குழு செயற்கை கோள்கள் விதம் 3 ஆண்டுகளில் 150 செயற்கைக்கோள்கள் திட்டம் என்று இஸ்ரோ தலைவர் சொன்னது மிகவும் அற்புதமான தகவல். திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா பூத வாகனத்தில் சந்திரசேகர் வீதி உலா வந்தது அற்புதமான காட்சி. தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் துரைசாமி அவர்களின் வரலாறும் அவருடைய வண்ணப் படமும் நல்ல பல தகவல்களை படிக்க உதவியது. பல்சுவை களஞ்சியம் பக்கத்தில் வந்த பழமை கால கல்யாணம் நல்லா அற்புதமான தகவல் மீம்ஸ் மிகவும் அருமையாக இருந்ததால் பலமுறை பார்த்து ரசித்து சிரிக்க வைத்தது. தெய்வீக அருள் தரும் ஆன்மிகம் என்ற பக்கத்தில் வந்த பைரவருக்கு மிளகாய் பொடி அபிஷேகம் காரணம் இதுதான் என்று புதிய தகவலை படித்து ஆன்மிக தகவலாக தெரிந்து கொண்டேன். கரூரில் நடந்த கூட்ட நெரிசல் சம்பவம் பற்றியும் அந்த குடும்பத்தினரை சிபிஐ முன்பு ஆசைப்படுத்திய செய்தியும் அங்கு நடந்த அந்த நிகழ்வை மனதுக்குள் கொண்டு வந்து வேதனையில் ஆழ்த்தியது. சுற்றுலா பக்கத்தில் வந்த இயற்கையின் சொர்க்கம் தேனி மாவட்ட சுற்றுலா தளங்கள் என்று தேனி மாவட்டத்தில் உள்ள கும்பக்கரை அருவி போன்ற நல்ல அருமையான இடங்களை பற்றி சொன்னது பாராட்டுக்குரியது. மருதமலை முருகன் கோவிலில் ரூபாய் 57 கோடியில் திருப்பணிகள் மும்முரம் என்று அலுவலர்களுடன் சேகர்பாபு அவர்கள் ஆய்வு செய்த தகவல் நல்ல தகவல். ஊட்டி தாவரவியல் பூங்கா குளங்களில் சீரமைப்பு பணி முமரமாக செய்வது மிக அருமையான தகவல் பாராட்டுக்கள். ஆப்ரேஷன் சிந்துர் என்பது உரி நீர்மின் திட்டத்தை தகர்க்க திட்டமிட்ட பாகிஸ்தான் என்று பாகிஸ்தான் அப்போது செய்த அந்த சதியை பற்றி படித்ததும் அதிர்ச்சியாக இருந்தது. இலங்கையிலும் கனமழை நிலச்சரிவு இதனால் 31 பேர் பலி என்றும் 4000 பேர் பாதிப்பு என்ற தகவலும் அதிர்ச்சியுடன் படிக்க வைத்தது ஹாங்காய் தீ விபத்தில் 55 பேர் பலியாக அதிகரிப்பு என்றும் பலருக்கு தீக்காயம் என்று அயல்நாட்டில் நடப்பதையும் மிக தெளிவாக சொன்ன கடைசி பக்கத்திற்கு பாராட்டுக்கள். தினமும் நல்ல நல்ல தகவல்களை மிக அற்புதமாக கொடுத்து ஒவ்வொரு விடியலையும் சந்தோஷ விடியலாக மாற்றும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்




-உஷா முத்துராமன்


PRODUCT
PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
2026
வழங்கும்
மாத காலண்டர்
தெய்வீகப் படங்களுடன்
3 காலண்டர்
100 ரூபாய்
அனைத்து
இல்லங்களிலும்
இருக்கவேண்டிய
அற்புத காலண்டர்
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்
Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081
தொடர்பு கொள்ளவும்
9337501889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை /
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
7871617005


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


MLM PERFECT
LIMITED OFFER
HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call Us
9853719337,7436914247


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756



WANTED
STORE
HELPER
Boys only
Fresher / Experience
SAA
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@vvhitechhoses.in


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


PADMA
MEDIA HOUSE
Best Newspaper
Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009


PADMA
MEDIA HOUSE
BOOK
NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!


WORK FROM
HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009




நாங்குநேரியில் 40 சென்ட் (பைபாஸ் ரோட்டில் இருந்து 150அடி) வீட்டுமனை இடம் விற்பனைக்கு (இளந்தோப்பு)
9884431675
9176691675

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

OFFICE/RESIDENCE FOR SALE
7500 Sq.ft OFFICE/ RESIDENCE SPACE FOR SALE. COMPOUND AREA 39.5 CENTS IN NAGERCOIL. Parking for 2 cars and 20 Motor Cycles
Contact:
98410 62644

இடம் விற்பனைக்கு
இராமன்புதூர் மீன் சந்தை அருகே 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புக்கு:
8300134494

Make Money Without Investment Through Mobile
Call : 9337501889




வாடகைக்கு இடம் தேவை
Institute மற்றும் பல் மருத்துவமனை நடத்துவதற்கு நாகர்கோவில் சுற்றுவட்டாரத்தில் மெயின் ரோட்டின் அருகில் Car Parking வசதியுடன் வாடகைக்கு இடம் தேவை.
தொடர்புக்கு: Dr.ROBINSON
Door No: 1/82, Water Tank Road, Nagercoil. Mob: 9487665511

இடம் விற்பனைக்கு
காரவிளை முதல் ராஜாக்கமங்கலம் மெயின் ரோட்டில் 57 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
Contact: 08220426606

வீடுகள் விற்பனைக்கு
(UNDER CONSTRUCTION) நாகர்கோவில் அருகில் DTCP Approved 1850 & 2150 சதுரஅடி தார் ரோடு வசதியுடன்.
94898 01826

வீட்டுமனை விற்பனைக்கு
நாகர்கோவில் கோர்ட் ரோடு எதிர்புறம் தெருவில் 2½ சென்ட்
தொடர்பு:
செல்: 9489133858
வீட்டு போன்: 04652-233051
(காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை)

திருவனந்தபுரத்தில் நிலம் வாங்க, விற்க தொடர்பு கொள்ளவும்.
9447798891
8547194967

COMMERCIAL SPACE FOR RENT
5000 Sqft, 2500 Sqft in Ramanathapuram, Coimbatore- 45
Brokers Contact :
98422 65900
SAA

DTCP Sites For Sale
@ KALAPATTY
East Facing Site
6 Cents
Direct Sale !!!
90471 87197
SAA

இடம் விற்பனைக்கு
சிவகங்கை மாவட்டம், சிவகங்கை to இளையான்குடி மெயின் ரோட்டில் 250 ஏக்கர் மொத்த இடம் விற்பனைக்கு தயாராக உள்ளது.
தொடர்புக்கு :
98434 88428 / 94420 78428

WORKSHOP FOR RENT
AT THANEERPANDAL ROAD WITH 5HP POWER SUPPLY 1200 SQFT BEHIND NOYYAL SUPER MARKET
CT: 96559 91887

உங்கள் இடம் கண்டுபிடித்து விற்க
கோவையில் நீங்க வாங்கிய இடம் எப்பகுதியில் இருந்தாலும் விற்பனை செய்ய
அரசு அங்கீகாரம் பெற்ற முகவர்
SIVAKUMAR
TN-RERA/ AGENT/0017/2021
9362655159

ADVERTISE WITH US



CONTACT US
9438610756

குடோன் வாடகைக்கு விடப்படும்
கோவை வடவள்ளி IOB காலனியில் 3614 sq.ft with EB Service 150HP
CT: 88708 68595

DTCP APPROVAL
அங்கீகரிக்கப்படாத வீட்டு மனை அங்கீகாரம் பெற & பில்டிங் பிளான் APPROVAL லே அவுட் APPROVAL
84381 83848

COMMERCIAL COMPLEX FOR RENT




3 FLOORS with Lift
EACH Floor AREA, 3000 sqft, 1st, 2nd, 3rd Floor Available
Corner Side 2 way Entrance
KKR GARDEN 3rd Main Road, Madhavaram, Chennai - 60
Nr. Metro Rly Stn & Anthony Hospital.
Cell: 98846 25240 / 98843 38911

CREST THE BEST
@ ANAKAPUTHUR
SPOT BOOKING OFFERS



1 BHK FLAT ₹.22.99 L*
2 BHK FLAT ₹.38.50 L*
3 BHK FLAT ₹.56.99 L*
Onwards
visit our site www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
89399 65050

# பல்சுவை களஞ்சியம்




## துன்பத்தின் வலி !



சோழ நாட்டின் அரசவைக்கு ஒரு ஏழை ஓடி வந்தான். அரசன்! அவன் அரசவையை நாடி வந்ததற்கான காரணத்தைக் கேட்டார். அவன், அரசே! நம் நாட்டில் திருட்டு அதிகரித்துவிட்டது. நேற்று, என் வீட்டில் நான் சேமித்து வைத்திருந்த பொருள்களெல்லாம் திருட்டுப் போய்விட்டது என்றான்.

அரசன்! மந்திரி ஒருவரை அழைத்து, இவன் கூறுவது உண்மையா? என்று கேட்டார். அதற்கு அரசவையில் இருந்த இளைய அமைச்சர் ஒருவர் குறுக்கிட்டு, இவன் கூறுவது பொய் அரசே. ஒவ்வொருவரின் வீட்டிலும் நெல்லிக்காய் அளவு தங்கத்தையாவது மறைத்து வைத்திருப்பார்கள் என்றார்.

அரசருக்கு ஒன்றுமே புரியவில்லை. வயதில் மூத்த அமைச்சரை கேள்வியோடு நோக்கினார். அவரும், அரசே... விசாரித்துவிட்டு நாளை பதில் சொல்கிறேன் என்றார். அரசவை கலைந்தது. மறுநாள் சபை கூடியதும், இளைய அமைச்சர் ஓடிவந்து, அரசே.... நாட்டில் திருட்டுப் போவது உண்மை தான். நேற்று அந்த ஏழை கூறியதும் உண்மை தான் என்றார்.

அரசருக்கு ஒரே வியப்பு. நேற்று இந்த அமைச்சர் பேசியதற்கும், இன்று இவர் பேசுவதற்கும் முரணாக இருக்கிறதே என்று எண்ணி, மூத்த அமைச்சரைக் கேட்டார். அவர் அரசரைப் பார்த்து, நம் நாட்டில் திருட்டுப் போவது உண்மை தான் அரசே. அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அமைச்சர் கூறியதைக் கேட்ட அரசர், என்னுடைய ஆட்சியில் திருட்டுப் போவது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது என்றார். மேலும் அரசர், அமைச்சரைப் பார்த்து, இளைய அமைச்சரின் முரண்பாடான கருத்துக்கு என்ன காரணம் என்று கேட்டார். அதற்கு மூத்த அமைச்சர், அரசே! அந்த அமைச்சரின் வீட்டில் நெல்லிக்காய் அளவு தங்கத்தை பாதுகாப்பாக வைத்து இருந்தார். அதை நான் நேற்று அவருடைய வீட்டிலிருந்து எடுத்து வந்து விட்டேன். அதனால்தான் அவர் இப்படிக் கூறினார்.

தத்துவம் :
அடக்கத்தில் சிறந்தவர்கள் தன்னிடம் உள்ள பலம், பலவீனம் பற்றி தெரிந்து வைத்திருப்பார்கள். அவர்களின் பலத்தை எந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதையும் தெரிந்து வைத்து இருப்பார்கள்.

-A.s.Govinda rajan
Kodambakkam Chenna

## ஆடிப்பட்டம் தேடி விதை



ஆடியில் விதைத்து ’தையில்’ தங்கச்செம்பா நெல்மணிகளை பெற்று மனம் குளிர்ந்து நெல்மணிகளை கையிலெடுத்து கண்ணீர் மல்க நிற்கும் விவசாயிகள்! மனிதன் வாழ்வதற்கு முதல் ஆதாரம் உணவு. எத்தனை தொழில்நுட்பம் வளர்ந்தாலும் அடிப்படை விஷயங்கள் மாறாதது. கிராமங்களும் விவசாயமும் ஒவ்வொரு நாட்டிற்கும் மக்களுக்கும் வாழ்க்கைக்கு வேர் போன்றது. ஆடிமாதம் வானம் பார்த்து, ஆண்டவனை வேண்டி பயிர் செய்வதென்பது ஒரு வரம்.

ஆடிமாதம் தட்ப வெப்ப நிலையைப் பொறுத்து விவசாயிகள் விதைப்பதற்கு ஏற்ற காலமாக கருதப்படுகிறது. பருவமழை துவங்கும் காலமே ஆங்கிலத்தில் ஜூலை மாதமாகவும், தமிழில் ஆடி மாதமாகவும் அழைக்கப்படுகின்றது. ஆடிப்பட்டம் என்பது இந்த மாதத்தில் பெய்யும் மழையை பயன்படுத்தி விதைக்க வேண்டும் என்பதாகும்.

’தேடி விதை’ என்பது கவனமாக, தேடிப்பிடித்து, விதைப்பது என்பதாகும். ஆடி மாதம் விதைக்க ஏற்ற பருவநிலை கொண்ட மாதமாகும் என்பது அனைவரும் அறிந்ததே. பயிர்கள் செழித்து வளரும், நல்ல விளைச்சல் தரும் என்பது ஆண்டாண்டு காலமாய் இருக்கும் நம்பிக்கையாகும். விவசாய நிலங்களுக்கு முதலில் கிடைக்கும் மழையாகும். ஆறுகளில் புது வெள்ளம் வரும். விவசாயிகள் ஆற்றுப்பாசனத்தை வரவேற்கும் விதமாக புதுவெள்ள நீரை வணங்கி விதைக்க ஆரம்பிப்பார்கள். கடுமையான கோடையில் இறுகிப்போன பூமி ஆடிமாதத்தின் மிதமான மழையில் மெல்ல இலகும். மண்ணில் சிறு சிறு உயிர்கள், மண்புழுக்கள், நத்தை முதலான உருவாகி மண் செழிப்பைப் பெறும்.

ஆடியில் விதைத்து, புரட்டாசி ஐப்பசியில் வரும் பெருமழை பயிர்கள் செழித்து வளர போதுமானதாகவும் இருக்கும்.
"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயர்வான்
குடி உயர கோன்
உயர்வான்"
என்பது ஔவைப் பாட்டியின் வாக்கு.
இயற்கை உரமான வேப்பெண்ணெய், வேப்பம் புண்ணாக்கு என்று ஆரம்பத்திலேயே பயன்படுத்துவதால் பயிர்களும் காக்கப்படுகின்றன. ஆடி 18 விதைக்க பெரும் நன்மைகள் கிடைக்கும் என்பதும் நம்பிக்கையாகும். என்னதான் புயல், வெள்ளம் பயிர் அழியும் நிலை வந்தாலும் விவசாயிகளின் நம்பிக்கை மட்டும் குறையவில்லை.

வருணபகவான் தேவைக்கேற்ப பெய்து விவசாயிகளின் கனவுகளை நனவாக்க வேண்டும் என்று வேண்டுவோம். விவசாயிகள் நலன் காப்போம். விவசாயம் காப்போம். விளைச்சல் நிலங்களை பேணுவோம். விளைந்த பயிர்களை பக்தியோடு வணங்குவோம்.

தினம் உண்ணும் உணவை மதித்து சில நொடிகள் பிரார்த்திப்போம்.

வி.பிரபாவதி
மடிப்பாக்கம்

## மீம்ஸ்







## விடுகதை



| | |
|---|---|
| இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன? | இதயம் |
| அலையலையாய் ஆடிவரும் கடலும் அல்ல, நிலையாக இருக்காது நிலவும் அல்ல, அது என்ன? | மேகம் |
| ஆணை ஏறாத மலையில், ஆடு ஏறாத மலையடி, ஆயிரம் பூ பூத்திருக்கு, அது என்ன? | விண்மீன் |
| உருவம் இல்லாத மனிதன் உலகமெல்லாம் சுற்றுகிறான். அது என்ன? | காற்று |
| பொழுது போனால் பூந்தோட்டம், விடிந்து பார்த்தால் வெறும் தோட்டம். அது என்ன? | வானம் |

## ஜோக்ஸ்


“டாக்டர் இவ்வளவு மருந்தையும் ரெண்டே நாள்ல சாப்பிட்டு முடிக்கணும்னு சொல்றீங்களே, ஏன்?”

“ரெண்டு நாளைக்கு அப்புறம் எக்ஸ்ப்ரி டேட் முடிஞ்சுடும்.”

========================================

“தலைவரால சட்டசபையே அதிர்ந்திடுச்சாம்...”

“அடேங்கப்பா ... அப்படி என்ன



பேசினாரு?”
“பேசலைய்யா... குறட்டை விட்டாரு!”

“பாட வந்தவங்க, எதுக்கு கையில கிளவுஸ் எடுத்து மாட்டிக்கறாங்க...?”

“குத்துப்பாட்டு பாடப் போறாங்களாம்!”

========================================



“அவர் சீலிங் ஃபேன் ரிப்பேர் பண்றவர்னு எப்படிச் சொல்றே..?”

“எப்போ கேட்டாலும், “தலைக்கு மேல வேலை இருக்கு”ன்னு சொல்றாரே!”

========================================

“என்னப்பா காபியில ‘ஈ’ செத்துக்கிடக்குது...?”

“ஸ்பெஷல் காபியிலதான் சார் ‘ஈ’ உயிரோட இருக்கும்”

========================================

“ஏன்டா நாய் படம் வரைஞ்சுட்டு வாய் மட்டும் வரையாம வச்சு இருக்க?”

“ஏன்னா.. அது வாயில்லா பிராணி சார்!”

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## மருத்துவ மகத்துவம்
## இதயத்தை இரும்பாக்கும் மீன்!



காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றில் இல்லாத சத்துக்களே இல்லை தானே. ஆனாலும், அசைவ உணவை எடுத்துக் கொண்டால், மீன் உணவில் இருக்கும் “ஒமேகா 3 பேட் ஆசிட்என்பது அரிய மருத்துவ குணம் வாய்ந்தது.

உலகம் முழுக்க உள்ள மருத்துவ நிபுணர்கள், இதை சொல்லி வருகின்றனர். வாரத்துக்கு ஒரு முறையோ, இரு முறையோ சாப்பிட்டால் கூட போதும், இருதயம் இரும்பாகத்தான் இருக்கும். இருதய பாதிப்பு கூட பயந்து ஓடிவிடும். சிறிய வயதில் ஆஸ்துமா உள்ளவர்கள், மீன் சாப்பிட்டால், ஆஸ்துமா பறந்துவிடும். மீன் உணவுகளை எப்படி சாப்பிட்டாலும், அதன் மருத்துவ குணம் போய் விடுவதில்லை. ரத்த அடைப்பு, ரத்த ஓட்டம் பாதிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. மூளை, கண்களுக்கு மிக நல்லது.

வயதானவர்களுக்கு அல்சீமர்ஸ் உட்பட மறதி நோய் வரக்கூடும். அதை தடுக்க மீன் உணவு தான் நல்லது. சர்க்கரை நோய், டிப்ரஷன் உள்ளவர்களுக்கும் மீன் உணவு தான் நல்லது.

எந்த வகை மீனிலும், 500 மில்லி கிராம் முதல் 1500 மில்லி கிராம் வரை ஒமேகா 3பேட் ஆசிட் உள்ளது. ஆனால், நம் உடலுக்கு தேவை, 200 முதல் 600 மில்லிகிராம் வரை தான். அதனால் வாரம் ஒரு முறை மீன் உணவு சாப்பிட்டால் கூட நல்லது தான். மீன் எண்ணெய் தேய்த்து இரண்டு பிரெட் துண்டில் 27 மில்லி கிராம், மீன் எண்ணெய் தேய்த்த முட்டையில் 200 மில்லி கிராம், தினமும் ஒரு முட்டை சாப்பிட்டால், அதில் 40 மில்லி கிராம் என்ற அளவில் ஒமேகா ஆசிட் உள்ளது.

இப்போதெல்லாம் எதற்கும் மாத்திரையை விழுங்குவது தான் பேஷனாகி விட்டது. மீன் என்றாலே, ஙே...என்று விழிக்கும் சைவ உணவினர் பலரும், இருதய பலத்துக்காக, ஒமேகா 3 பேட் ஆசிட் உள்ள கேப்சூல் மாத்திரைகளை வாங்கி சாப்பிடுகின்றனர். ஆனால், இதில் ஒமேகா ஆசிட் சத்துக்கள் இருக்கிறது என்றாலும், இதை விட மீன் உணவில் தான் பல மடங்கு ஒமேகா ஆசிட் உள்ளது. அதனால், மீன் உணவு சாப்பிடுவது தான் நல்லது.

## மருத்துவ குணங்கள் நிறைந்த செங்காந்தள் மலர்



செங்காந்தள் செடியின் கிழங்கு ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருந்துகளில் பல்வேறு விதமாக பயன்படுத்தப்படுகிறது. செங்காந்தள் பாம்புக்கடி, தேள்கடி போன்றவற்றுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. பாம்பு கடித்தவர்கள் இந்தச் செடியின் வேருடன் குப்பைமேனி வேர், நீலி வேர் சேர்த்து அரைத்து, அரை நெல்லிக்காய் அளவு தினமும் காலை, மாலை என 3 நாள்கள் சாப்பிட்டு வந்தால், விஷம் இறங்கும். உப்பில்லா பத்தியம் அவசியம். சிறிய பாம்புகள் கடித்தாலோ, வண்டு கடித்தாலோ இதன் இலையை அரைத்துப் பூசி சீயக்காய் தேய்த்துக் குளித்தால் விஷம் இறங்கிவிடும்.

செங்காந்தள் வேரில் செய்யப்பட்ட தைலத்தை வாரம் ஒருநாள் தலையில் தேய்த்து குளித்துவந்தால் எலி, வண்டு, பூரான், சாரைப்பாம்பு கடிபட்டவர்களுக்கு விஷத்தன்மை குறைந்துவிடும். பிரசவத்தின்போது நஞ்சுக்கொடி இறங்காமல் அவதிப்படும் பெண்களுக்கு பச்சை செங்காந்தள் வேர்க்கிழங்கை அரைத்து தொப்புள், அடிவயிறு, உள்ளங்கை, உள்ளங்கால் போன்ற இடங்களில் தடவுவார்கள். உடனடியாக நஞ்சுக்கொடி இறங்கிவிடும்.

## மூளையை உண்ணும் அமீபா... தற்காத்துக் கொள்ள சில வழிமுறைகள்



மூளையை உண்ணும் அமீபா என்று அழைக்கப்படும் நெய்க்லீரியா போலெரி, ஒரு செல் உயிரி ஆகும். இவை பொதுவாக ஆறு, ஏரி, குளங்கள் மற்றும் பராமரிக்கப்படாத நீச்சல் குளம் போன்ற இடங்களில் வாழும். அங்கு மூழ்கி குளிக்கும்போது, அரிதாக சிலருக்கு மூக்கு வழியாக இந்த அமீபா உடலுக்குள் நுழைந்து விடும். அதாவது மூக்கிலிருந்து மூளைக்கு பயணித்து, மூளை திசுக்களை அழித்து வீக்கத்தை ஏற்படுத்தும். மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில், போதுமான குளோரின் கலக்கப்படாத பொழுதுபோக்கு பூங்காக்களிலும் இந்த அமீபா தொற்று காணப்படுகிறது.

அறிகுறிகள் என்ன?

மூளையைத் தின்னும் அமீபாவின் ஆரம்ப அறிகுறிகளில் தலைவலி, காய்ச்சல், குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை முக்கியமானவை. அமீபா வேகமாக வளரக்கூடியது என்பதால், இந்த அறிகுறி தொடங்கிய ஒன்று முதல் 18 நாட்களுக்குள் கடும் பாதிப்பை ஏற்படுத்தி மரணத்துக்கும் வழிவகுக்கும் அபாயம் கொண்டது. உடலில் இந்த அமீபா வளரும்போது, கழுத்து இறுக்கமாவது, கவனமின்மை, சமநிலை இழப்பு மற்றும் மாயத்தோற்றங்கள் ஆகியவையும் ஏற்படக்கூடும். தொற்று மிகவும் அரிதானது என்பதால், சோதனை மூலம் இதனைக் கண்டறிவது கடினமான ஒன்றாக உள்ளது.

தற்காத்துக் கொள்ள சில வழிமுறைகள்:

* நன்கு பராமரிக்கப்படாத, தண்ணீர் குறைவாக உள்ள நீச்சல் குளங்களுக்குச் செல்லக்கூடாது.

* குளோரின் எனும் கிருமி நாசினி மூலம் நீச்சல் குளங்கள் முறையாகச் சுத்தப்படுத்தப்படுகிறதா என்பதை சரிபார்த்து செல்ல வேண்டும்.

* மாசடைந்த குளம் மற்றும் ஏரிகளில் குளிப்பதை தவிர்க்க வேண்டும்.

* இந்த அமீபா மூக்கு மூலமே உடலுக்கு செல்கிறது என்பதால் குதித்து மூழ்குவது, டைவ் அடிப்பது போன்ற செயல்களை தவிர்க்கலாம். தலையை மேலே வைத்த நிலையில் குளிப்பதன் மூலம் இந்த தொற்றில் இருந்து பாதுகாக்க முடியும்.

## கொழுப்பை குறைக்கும் குடம் புளி



உணவில் புளிப்பு சுவைக்காக சேர்க்கப்படும் புளி வகைகளுள் பழமையான ஒன்று குடம் புளி. மலையாளத்தில் மலபார் புளி என்றும், கன்னடத்தில் உப்பேஜ் என்றும் அழைக்கப்படும் இது, தென்னிந்திய சமையலில் பரவலாக இடம் பெறுகிறது.

இந்த புளியில் ஹைட்ராக்ஸி சிட்ரிக் அமிலம் (எச்.சி.ஏ.) என்னும் பைட்டோ கெமிக்கல்கள் உள்ளன. அவை கொழுப்பை எரிக்கும் திறன் கொண்டவை. குறிப்பாக உடலானது கொழுப்பை உருவாக்க பயன்படுத்தும் சிட்ரேட் லைஸ் என்ற நொதியின் செயல்பாட்டை தடுக்கக்கூடியவை.

பசி உணர்வையும் கட்டுப்படுத்தக்கூடியவை. அதனால் உடல் எடையை குறைப்பதற்கு இந்த புளி முக்கிய பங்கு வகிக்கிறது.

அத்துடன் குடம் புளியை உணவில் சேர்ப்பது வயிறு வீக்கத்தையும், இன்சுலின் அளவையும் குறைக்க உதவும். ரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்தவும், செரிமான செயல்முறையை தூண்டவும், மகிழ்ச்சிக்கான ஹார்மோனை வெளியிடவும் வழிவகை செய்யும். வயிற்று புண் ஏற்படாமல் தடுக்கும். இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், கொழுப்பை கட்டுப்படுத்தவும் உடலில் இருக்கும் நச்சுக்களை நீக்கவும், எலும்புகளை வலுப்படுத்தவும் துணைபுரியும்.

## மருத்துவ குறிப்புகள்



விரலி மஞ்சளை சுட்டு பொடி செய்து தேங்காய் எண்ணெய்யில் குழப்பி காலையிலும் இரவிலும் ஆறாத புண்களுக்கு மேல் போட்டால் சீக்கிரம் குணமாகிவிடும்.

சாம்பிராணி, மஞ்சள், சீனி போட்டு கஷாயமாக்கி பாலும் வெல்லமும் சேர்த்து பருகினால் உடம்பு வலி தீரும்.

நெருப்பு அல்லது சுடுநீர் பட்ட இடத்தில் பெருங்காயத்தை அரைத்துப் பூசினால் எரிச்சல் குறையும் கொப்பளமும் ஏற்படாது.


கேரட் சாறும் சிறிது தேனும் கலந்து பருகி வர கர்ப்பிணி பெண்கள் வாந்தி நிற்கும் உடல் வலுவாகும். பித்த நோய்கள் தீரும்.

பீட்ருட் கிழங்கின் சாற்றுடன் சிறிது தேனும் கலந்து அருந்தி வந்தால் வயிற்றுப்புண் குணமாகும்.

முட்டைக் கோசுடன் பசுவின் வெண்ணெய் கலந்து சாப்பிட்டால் உடல் தளர்ச்சி விலகும்.

பாலில் பூண்டைப் போட்டு காய்ச்சிக் குடித்தால் இருமல், ஜலதோஷம், தொண்டைக் கரகரப்பு போகும்.

## இயற்கையான மண் குளியல்



இயற்கை மருத்துவத்தில் மண் சிகிச்சை முறை மிகவும் எளிமையானது. நிலத்தில் 3 முதல் 4 அடி ஆழத்தில் தோண்டி மண் எடுத்துக்கொள்ளவேண்டும். இதில் கற்கள், துண்டுகள், ரசாயன கலவைகள் கண்டிப்பாக இருக்கக்கூடாது. இயற்கையின் பஞ்ச பூத சக்திகளில் மண் ஒன்று ஆகும். இது உடல் ஆரோக்கியத்திற்கும், நோய்களை குணப்படுத்தவும் துணைசெய்யும்.

மண் சூரிய ஒளியில் உள்ள சக்திகளை உடலுக்கு பெறச்செய்கிறது. குளிர்ந்த மண்ணை உடலில் தடவி வெகு நேரம் உலராமல் இருப்பதன் மூலம் உடலின் வெப்பம் தணிந்து உடல் சம் நிலை அடைகிறது.

உடலில் பூசிய மண்ணுடன் நீரையும் சேர்ப்பதால் தேவையான அடர்த்தியும் , உருவமும் எளிதாக கிடைக்கிறது.

மண் சிகிச்சைக்கு தயார் செய்யும் முன்பே மண்ணை உலர வைத்து, கற்கள், மண்ணில் கலந்துள்ள இதர பொருட்களை பிரித்து விட்டு பயன்படுத்த வேண்டும்.

சலித்த, மெல்லிய மண்ணை ஈரமான துணியில் நோயாளியின் வயிற்று அளவுக்கு ஏற்றவாறு கட்டி, செங்கல் வடிவ அளவில் நோயாளியின் வயிற்றின் மேல் வைக்க வேண்டும். குளிர்ந்த காற்று வீசினால் குளிர்ந்த காற்று படாதவாறு மேலே போர்த்த வேண்டும். மண்கட்டியினை அடிவயிற்றில் பயன்படுத்தும் பொழுது ஜீரணகோளாறுகளை போக்குகிறது. உடல் சூட்டை குறைக்கிறது.

மொத்தமாக தயாரிக்கப்பட்ட மண்கட்டிகளை தலையில் வைத்து பயன்படுத்தும்பொழுது அதிகப்படியான தலைவலியும் உடனடியாக சரிசெய்கிறது. இதை கண்கள் மீது பயன்படுத்தும் பொழுது கண் மற்றும் பார்வை பிரச்சினைகளான இமைப்படல அழற்சி, கண்விழி அரிப்பு, ஒவ்வாமை, கண்விழி அழுத்தம், கிட்டப்பார்வை மற்றும் தூரப்பார்வை முதலிய பிரச்சினைகளை சரிசெய்கிறது.

சுத்தம் செய்யப்பட்ட மண் 30 நிமிடத்திற்கு வைத்திருப்பதனால் தோல்நிறம் அதிகரிக்கின்றது. கடும்புள்ளிகள், சிறுசிறு பொத்தல்கள் ஆகியவை சரிசெய்யப்படுகின்றது. மேலும் இது கண்களுக்கு கீழ் உள்ள கருவளையங்களை சரிசெய்வதற்கும் பயன்படுகிறது. 30 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரால் முகத்தை சுத்தமாக கழுவ வேண்டும்.

மண் குளியல் என்பது நோயாளி அமர்ந்த நிலையிலோ அல்லது படுத்திருக்கும் நிலையிலோ மண்ணை பூச வேண்டும். இது தோலில் ரத்த சுழற்ச்சியையும் வலிமையையும் அளிக்கின்றது. மண் குளியலின் போது நோயாளிக்கு சளிபிடிக்காதவாறு கவனமாக கடைபிடிக்கவேண்டும். குளிர்ந்த நீரால் நோயாளியின் உடல் முழுதும் தெளிக்க வேண்டும். நோயாளி மிகவும் குளிர்ச்சியாக உணர்ந்தால் சுடுநீர் பயன்படுத்தலாம், உடனடியாக நோயாளியின் உடலினை துவட்டி உஷ்ணப்படுத்திக் கொள்ள வேண்டும். 45 முதல் 60 நிமிடங்கள் வரை மண் குளியல் செய்யலாம்.

மண் குளியலின் பயன்கள்

உடல் மற்றும் தோல் காயங்களை சரிசெய்வதில் மண்குளியல் சிறந்தபலனை தருகிறது.

உடலிற்கு குளிர்ச்சியூட்ட பயன்படுகிறது.

உடலில் உள்ள விஷத்தன்மையை நீர்க்கச்செய்து, உறிஞ்சி வெளியே எடுத்து விடுகிறது.

பசியின்மை, மனஉளைச்சலினால் ஏற்படும் தலைவலி, அதிக ரத்த அழுத்தம், தோல் நோய்கள் முதலியவற்றிற்கு சிறந்தமுறையில் சிகிச்சை பயன்படுகிறது.

மலச்சிக்கலில் இருந்து விடுபடுவதற்கு காந்தி மண்குளியலையே பயன்படுத்தினார்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி



கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சியை கனிமொழி எம்.பி. தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் அமைச்சர் பி.கீதாஜீவன்

## அதிமுக பூத் கமிட்டி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்




ஊட்டியில் நடந்த அதிமுக பூத் கமிட்டி முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி ஆலோசனை வழங்கினார்.

## குழந்தைக்கு அமைச்சர் ரகுபதி தங்க மோதிரம் அணிவித்தார்




புதுக்கோட்டை ராணியார் அரசு மகப்பேறு மருத்துவ மனையில்,துணை முதல்வர் உதயநிதி பிறந்த நாளில் பிறந்த குழந்தைக்கு அமைச்சர் ரகுபதி தங்க மோதிரம் அணிவித்தார்.

## திமுக நிர்வாகிகள் தங்கத் தேர் இழுத்து வழிபட்டனர்



ஆனைமலை மாசாணியம்மன் கோவிலில் துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாளையொட்டி திமுக நிர்வாகிகள் தங்கத் தேர் இழுத்து வழிபட்டனர்.

## கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை



துணை முதலமைச்சர் உதயநிதி பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை, பாரிமுனை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் அமைச்சர் சேகர்பாபு தலைமையில், மேயர் பிரியா ராஜன் முன்னிலையில் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் எம்.பி., கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் உபகரணங்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பேறுகால உதவிகள் மற்றும் திருநங்கைகளுக்கு உதவித்தொகையை வழங்கினார்.

## 15-ஆவது வார திருக்குறள் திருப்பணிகள் திட்ட பயிற்சி



28.11.2025-அன்று பாளையங்கோட்டை தூய இஞ்ஞாசியார் கல்வியியல் கல்லூரியில் கவிஞர் பேரா தலைமையில் நடந்த 15-ஆவது வார திருக்குறள் திருப்பணிகள் திட்ட பயிற்சி வகுப்பில் மாணவிகள் சுகுணா,இராமலட்சுமி,ரோகிணி பிரவீனா,பவுலின் பாக்கியராணி ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டபோது எடுத்த படம்.

## அன்புகரங்கள் இல்லத்தில் மாவட்ட திமுக சார்பில் காலை உணவு



துணை முதலமைச்சர் உதயநிதி பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் வெண்ணமலை அன்புகரங்கள் இல்லத்தில், மாவட்ட திமுக சார்பில் காலை உணவு வழங்கப்பட்டது.

## வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு சான்றிதழ்கள்



ராமநாதபுரம் மாவட்டத்தில் வாக்காளர் கணக்கிட்டு படிவங்கள் பணியை சிறப்பாக செய்து 100% முழுமையாக நிறைவு செய்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு கலெக்டர் ரஞ்சித்சிங் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.

## புதிய நகர பேருந்து இயக்கம்



கும்பகோணம்-எரவாஞ்சேரிக்கு புதிய நகர பேருந்து இயக்கத்தை கும்பகோணம் எம்எல்ஏ சாக்கோட்டை க.அன்பழகன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## புதிதாக திறக்கப்பட்ட நீச்சல் குளம்



கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் புதிதாக திறக்கப்பட்ட சிறு விளையாட்டரங்கில் நீச்சல் குளம், இறகு பந்து ஆடுகளங்கள், உடற்பயிற்சி கூடங்களை துணை முதல்வர் உதயநிதி நேற்று ஆய்வு செய்தார்.

## வாரிசுதாரர்களுக்கு வைப்புத் தொகை



தென்காசி மாவட்டத்தில் முன்னோடி வங்கி சார்பில் நீண்ட நாட்களாக உரிமை கோரப்படாத வைப்புத் தொகையினை வாரிசுதாரர்களுக்கு கலெக்டர் கமல் கிஷோர் திருப்பி வழங்கினார்.

## படிவங்கள் பதிவேற்றம் செய்யும் பணி



கூடலூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பூர்த்தி செய்த கணக்கீட்டு படிவங்கள் பதிவேற்றம் செய்யும் பணிகளை கலெக்டர் லட்சுமி பவ்யா நேரில் ஆய்வு செய்தார்.

## SIR சிறப்பு தீவிர திருத்தம் குறித்த விழிப்புணர்வு பணிகள்



ஆர்.எஸ். மங்கலம், திருவாடானை, மண்டபம், ராமநாதபுரம் மற்றும் முதுகுளத்தூர் வட்டாரங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் SIR சிறப்பு தீவிர திருத்தம் குறித்த விழிப்புணர்வு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டன.

## வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு கலெக்டர் கந்தசாமி, பொன்னாடை



ஈரோடு மாவட்டத்தில் எஸ்ஐஆர் பணிகளை 100 சதவீதம் திறம்பட முடித்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு கலெக்டர் கந்தசாமி, பொன்னாடை அணிவித்து, பரிசுப்பொருட்க்ள் வழங்கி வாழ்த்தினார்.

## செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்



மதுரை மாநகர் மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்தின் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் மூர்த்தி பேசினார். அமைச்சர்கள் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், தங்கம் தென்னரசு உள்பட திமுக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

## மாற்றுத்திறனாளி புஷ்பராஜ் நியமன உறுப்பினராக பதவியை ஏற்பு



மானாமதுரை நகராட்சியில் மாற்றுத்திறனாளி புஷ்பராஜ் நியமன உறுப்பினராக பதவியை ஏற்று கொண்டார். அவருக்கு தமிழரசி எம்எல்ஏ நேரில் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## அடி அண்ணாமலை வருவாய் ஆய்வாளர் கட்டிடம், கிராம நிர்வாக அலுவலக கட்டிடம் திறப்பு விழா





**திருவண்ணாமலை, நவ.29:**

திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் அடி அண்ணாமலை ஊராட்சியில் வருவாய் ஆய்வாளர் கட்டிடம், கிராம நிர்வாக அலுவலக கட்டிடத்தினை பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை மாண்புமிகு அமைச்சர் எ. வ. வேலு அவர்கள் கட்டிடத்தினை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள், அரசு அதிகாரிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கட்டிட திறப்பு விழாவில் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## பயிற்சியை முடித்த இளைஞர்களுக்கு சான்றிதழ்



தூத்துக்குடி வஉசி துறைமுகத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி நிறைவு விழாவில் பயிற்சியை முடித்த இளைஞர்களுக்கு சான்றிதழ்களை துறைமுக ஆணையத் தலைவர் சுசாந்த குமார் புரோஹித் வழங்கினார்.

## வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு கலெக்டர் கலைசெல்வி சான்றிதழ்



காஞ்சிபுரம் மாவட்டத்தில் எஸ்ஐஆர் பணிகளை 100 சதவீதம் நிறைவேற்றிய வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு கலெக்டர் கலைசெல்வி பொன்னாடை போர்த்தி பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்.

## குலவணிகர் கிராமத்தில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் பணி



திருநெல்வேலி குலவணிகர் கிராமத்தில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் பணிகளை அமைச்சர் நேரு, கலெக்டர் சுகுமார் ஆய்வு செய்தனர். உடன் அப்துல்வகாப் எம்எல்ஏ, மேயர் ராமகிருஷ்ணன் , ஆணையாளர் மோனிகா ராணா, துணை மேயர் ராஜூ , முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன் உடன் இருந்தனர்

## மாற்றுத்திறனாளி கவுன்சிலர் ஆறுமுகத்துக்கு கனிமொழி எம்.பி, வாழ்த்து



தூத்துக்குடி மாநகராட்சியில் மாற்றுத்திறனாளி நியமன கவுன்சிலராக நியமிக்கப்பட்டுள்ள ஆறுமுகத்துக்கு கனிமொழி எம்.பி, அமைச்சர் கீதா ஜீவன் வாழ்த்து தெரிவித்தனர்.

## வழக்கறிஞர்கள் மனித சங்கிலி போராட்டம்



ஸ்ரீவில்லிபுத்தூரில் நீதிமன்றம் முன் வழக்கறிஞர்கள் மனித சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## ரவுசு மணி



வார்த்தைகள்
சாவி போன்றது.....
அதை வைத்து ....
எந்த இதயத்தை
வேண்டுமானாலும்
திறக்கலாம்...
எந்த வாயை
வேண்டுமானாலும்
பூட்டலாம்.

V.முத்து ராமகிருஷ்ணன்

## அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் திறன்பயிற்சி கட்டடம் திறப்பு



நாகர்கோவில் கோணம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் திறன்பயிற்சி கட்டடத்தை காணொலி காட்சி வாயிலாக முதல்வர் திறந்து வைத்தார்.அங்கு கலெக்டர் அழகுமீனா, குத்துவிளக்கேற்றினார்.

## மாணவிகளுக்கு அரசின் விலையில்லா சைக்கிள்



சென்னை எம்ஜிஆர் நகர் மேல்நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு அரசின் விலையில்லா சைக்கிள்களை பிரபாகர்ராஜா எம்எல்ஏ வழங்கினார்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## ரயில்வேதுறையில் பணியிடங்கள்

இந்திய ரயில்வே துறையில் பணி செய்ய விரும்பும் நபர்களுக்கு சிறந்த வாய்ப்பு அமைந்துள்ளது. ரயில்வே கீழ் இயங்கும் ரைட்ஸ் நிறுவனத்தில் (RITES) ஒப்பந்த அடிப்படையில் பொறியியல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. உதவி மேனேஜர் பதவியில் 400 காலிப்பணியிடங்கள் நிரப்ப விண்ணப்பம் தொடங்கியுள்ளது. சிவில், எலெக்ட்ரிக்கல், சிக்னல் மற்றும் கம்யூனிகேஷன், மெக்கானிக்கல், உலோகவியல், கெமிக்கல், தகவல் தொழில்நுட்பம், உணவு தொழில்நுட்பம், பார்மா ஆகிய பிரிவுகளில் பணியிடங்கள் நிரப்பப்படுகிறது.

மொத்தம் 400

வயது வரம்பு

உதவி மேனேஜர் பதவிக்கு அதிகபடியாக 25.12.2025 தேதியின்படி 40 வயது வரை இருக்கலாம்.

தேர்வு செய்யப்படும் முறை

இப்பணியிடங்களுக்கு எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். எழுத்துத் தேர்வு 125 கேள்விகளுடன் 2.5 மணி நேரம் நடைபெறும். இதில் நெகட்டிங் மதிப்பெண்கள் கிடையாது. இதில் தேர்வாகும் நாபர்களுக்கு நேர்காணல் நடத்தப்படும். எழுத்துத் தேர்வு 60 சதவீதம் மற்றும் நேர்காணல் 40 சதவீதம் என கணக்கிடப்படும். இறுதியான தேர்வாகும் நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

சம்பளம் எவ்வளவு?

உதவி மேனேஜர் பதவிக்கு அடிப்படை சம்பளம் ரூ.23,340 ஆகும். மாத சிடிசி ரூ.42,478 ஆகும். ஒரு வருடத்திற்கு ரூ.5,09,741 வழங்கப்படும்.

விண்ணப்பிப்பது எப்படி?

ரைட்ஸ் நிறுவனத்தில் உள்ள இப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க ஆர்வமாக உள்ளவர்கள் https://www.rites.com/Career என்ற இணையதளத்தில் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்கலாம். இப்பணியிடங்களுக்கு ரூ.600 கட்டணமாக செலுத்த வேண்டும். எஸ்சி/ எஸ்டி/ பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ரூ.300 கட்டணமாக செலுத்தினால் போதுமானது. இதற்கான எழுத்துத் தேர்வு ஜனவரி 11-ம் தேதி நடைபெறும். அறிவிப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்.

முக்கிய நாட்கள்

விண்ணப்பிக்க கடைசி நாள் 25.12.2025

எழுத்துத் தேர்வு 11.01.2026

# சுற்றுலா: தமிழக எல்லையில் ஒரு சொர்க்கம்: தாளவாடியின் தனித்துவமான அம்சங்கள்!



குட்டி ஊட்டி அல்லது ஈரோட்டின் காஷ்மீர் என்று அழைக்கப்படும் தாளவாடி, ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் அழகிய, தனித்துவமான மலைப் பிரதேசமாகும். இதன் சிறப்புகள் பற்றி இந்தப் பதிவில் விரிவாகக் காணலாம்.

புவியியல் அமைப்பு மற்றும் சீதோஷ்ண நிலைகிழக்குத் தொடர்ச்சி மலைகளும் மேற்குத் தொடர்ச்சி மலைகளும் சந்திக்கும் பீடபூமியில் தாளவாடி அமைந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தின் மற்ற பகுதிகள் பொதுவாக வெப்பமாக இருந்தாலும், தாளவாடி கடல் மட்டத்திலிருந்து சுமார் 823 மீட்டர் உயரத்தில் அமைந்திருப்பதால், வருடம் முழுவதும் இதமான காலநிலையைக் கொண்டுள்ளது.

இது தமிழ்நாடு மற்றும் கர்நாடக எல்லையில் அமைந்துள்ள மைசூர் பீடபூமியின் தொடர்ச்சியாகும். இங்கு வெப்பநிலை பொதுவாக 20 டிகிரி செல்சியத்திலிருந்து 30 டிகிரிக்குள் இருக்கும். குளிர்காலத்தில் இது இன்னும் குறையும். கோடைகால மாலை நேரங்களில் கூட ஸ்வெட்டர் தேவைப்படும் இடமாக இது உள்ளது.

**திம்பம் மலைப்பாதை (நுழைவாயில்):** தாளவாடிக்குச் செல்லும் பயணம் மிகவும் சுவாரசியமானது. சத்தியமங்கலத்தில் இருந்து தாளவாடிக்குச் செல்ல, 27 செங்குத்தான கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட திம்பம் மலைப்பாதையைக் கடக்க வேண்டும். இந்த மலைப்பாதை, சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் (STR) அடர்ந்த காடுகள் வழியாகச் செல்கிறது. யானைகள், சிறுத்தைகள் மற்றும் காட்டெருமைகள் சாலையைக் கடப்பதை இங்கு அடிக்கடி காணலாம்.

**தனித்துவமான விவசாயம்:**

சமவெளியில் விளையாத பல பயிர்களும் காய்கறிகளும் இங்குள்ள குளிர்ந்த காலநிலையில் செழித்து வளர்கின்றன.

விவசாயிகள் உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், காலிஃப்ளவர், பீன்ஸ் மற்றும் பீட்ரூட் போன்ற மலைப்பிரதேசப் பயிர்களைப் பயிரிடுகின்றனர். இந்தப் பகுதி சாமந்திப் பூ சாகுபடிக்கும் பெயர் பெற்றது. இது நிலப்பரப்பை ஆரஞ்சு மற்றும் மஞ்சள் நிறங்களில் அழகாகக் காட்சிப்படுத்துகிறது. சமீப காலமாக, இயற்கை விவசாய முறைகள் அதிகரித்து வருகின்றன. இங்கிருந்து பெங்களூரு மற்றும் சென்னை போன்ற பெருநகரங்களுக்குக் காய்கறிகள் அனுப்பப்படுகின்றன.

**கலாச்சார சங்கமம்:** கர்நாடக மாநில எல்லையில் (சாமராஜநகர் மாவட்டம் அருகில்) அமைந்திருப்பதால், தாளவாடி ஒரு கலப்புக் கலாச்சாரத்தின் இருப்பிடமாகத் திகழ்கிறது. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் இருமொழி பேசுபவர்கள். பெரும்பாலான உள்ளூர்வாசிகளுக்குத் தமிழ் மற்றும் கன்னடம் ஆகிய இரண்டு மொழிகளும் சரளமாகப் பேசத் தெரியும்.

**வனவிலங்குகள் மற்றும் சூழலியல்:** தாளவாடி, சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தால் சூழப்பட்டுள்ளது. இங்கு யானைகளின் எண்ணிக்கை அதிகம். விவசாயிகள் பெரும்பாலும் தங்கள் நிலங்களை யானைகளிடமிருந்து பாதுகாக்க அகழிகளைத் தோண்டி வைத்துள்ளனர். இப்பகுதி புலிகள், சிறுத்தைகள் மற்றும் மான்களுக்குப் புகலிடமாக உள்ளது. இது கர்நாடகாவின் பி.ஆர். ஹில்ஸை நீலகிரியுடன் இணைக்கும் முக்கியப் புலிகள் வழித்தடமாகும்.

**சுற்றிப் பார்க்க வேண்டிய இடங்கள்**

இது ஊட்டி போன்ற வணிகமயமான சுற்றுலாத்தலம் இல்லை என்றாலும், சில குறிப்பிடத்தக்க இடங்கள் உள்ளன.

தாளமலை: காட்டின் நடுவே அமைந்துள்ள தாளமலை பெருமாள் கோவில் பிரசித்தி பெற்றது.

திம்பம் காட்சி முனையம் (வ்யூ பாய்ன்ட்) : இங்கிருந்து பவானிசாகர் அணை மற்றும் கீழே உள்ள சமவெளியின் அழகை ரசிக்கலாம்.

**தொட்டசம்பிகே மரம்:** இது கர்நாடக எல்லைக்குள் இருந்தாலும், தாளவாடிக்கு மிக அருகில் உள்ளது.

இங்குள்ள மிகப்பழமையான சம்பக மரம் (சுமார் 600 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது என்று நம்பப்படுகிறது) சோளகர் பழங்குடியினரின் வழிபாட்டுத் தலமாகும். ஈரோடு வருபவர்கள் அவசியம் பார்க்க வேண்டிய இடம் தாளவாடி.

## மிஸ் மெஜஸ்டிக் உலக அழகி போட்டியில் நாகூர் திருநங்கைக்கு 3-வது இடம்!

**நாகப்பட்டினம், நவ.29:**

கம்போடியாவில் நடைபெற்ற திருநங்கைகளுக்கான மிஸ் மெஜஸ்டிக் உலக அழகிப் போட்டியில் 3-ம் இடம் பிடித்த நாகூரை சேர்ந்த திருநங்கைக்கு பாராட்டு குவிகிறது. நாகை மாவட்டம் நாகூரைச் சேர்ந்த விவசாயி முத்துக் கிருஷ்ணன்- தமிழரசி தம்பதிக்கு பிறந்தவர் ரஃபியா(30).

ஆணாக பிறந்த இவர் 9-ம் வகுப்பு பயின்றபோது உடலில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக தன்னை திருநங்கையாக மாற்றிக் கொண்டு கோவையில் உள்ள தனது உறவினர் வீட்டில் வளர்ந்தார். அப்போது அழகுக் கலையில் ஆர்வம் எழவே, பெங்களூருவில் பியூட்டிஷியன் படித்து, அங்கு 2 ஆண்டுகள் பணி செய்து இந்தி, கன்னடம், ஆங்கில மொழிகளை கற்றுக் கொண்டார்.

அதன்பின், பாக்சர், ராமாச்சார்ய ஆகிய கன்னட திரைப்படங்களில் திருநங்கையாக நடித்த ரஃபியாவுக்கு மாடலிங் மேல் கவனம் திரும்பியது. இதனிடையே இம்மாதம் 13-ம் தேதி கம்போடியாவில் நடைபெற்ற திருநங்கைகளுக்கான மிஸ் மெஜஸ்டிக் உலக அழகிப் போட்டியில் மொத்தம் 10 சுற்றுகளாக நடைபெற்ற போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்ற ரஃபியா கடும் தேர்வுக்கு பின்னர் முதல் 10 இடங்களுக்குள் இடம் பிடித்தார்.

## உரிமை கோரப்படாத முதலீடுகளை மீட்க விரைவில் ஒருங்கிணைந்த இணையதளம்

**புதுடெல்லி, நவ.29:**

நாடு முழுவதும் உரிமை கோரப்படாமல் உள்ள நிதி சொத்துகளை மீட்க விரைவில் ஒருங்கிணைந்த இணையதளம் தொடங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், பரஸ்பர நிதி உள்ளிட்ட நிறுவனங்களில் பொது மக்களின் உரிமை கோரப்படாத நிதி சொத்துகள் ஏராளமாக உள்ளன.

இந்த நிதி சொத்துகளை பொதுமக்கள் மீட்பதற்கு, டெப்பாசிட்டர் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிதி என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் இதுவரை உரிமை கோரப்படாமல் இருந்த ரூ.1,887 கோடி உரியவர்களிடம் திருப்பித்தரப்பட்டுள்ளது.

அதேநேரம் இன்னமும் ரூ.3,201 கோடி உரிமை கோரப்படாமல் உள்ளது.

இந்நிலையில், மத்திய நிதியமைச்சகத்தின் கீழ் இயங்கும், நிதி சேவைகள் துறை ரிசர்வ் வங்கியுடன் இணைந்து உரிமை கோரப்படாத தொகையை உரியவர்களிடம் ஒப்படைப்பதை விரைவுபடுத்துவதற்காக, ஒருங்கிணைந்த இணையதளம் தொடங்க திட்டமிட்டுள்ளது.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் சார்பில் நேற்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், மத்திய நிதி சேவைகள் துறை செயலாளர் நாகராஜு பேசும்போது,

"நாடு முழுவதும் உள்ள வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், பரஸ்பர நிதி உள்ளிட்ட நிறுவனங்களில் உரிமை கோரப்படாமல் உள்ள நிதி சொத்துகளை தேடி கண்டுபிடித்து மீட்பதற்காக, ஒருங்கிணைந்த இணையதளம் விரைவில் தொடங்கப்படும்.

உரிமை கோரப்படாமல் உள்ள பல்வேறு நிதி சொத்துகளை ஒரே தளத்தின் மூலம் (ஒற்றைச் சாளரம்) எளிதாக மீட்க இது உறுதுணையாக இருக்கும்"என்றார்.

## வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சாமானிய பக்தர்களுக்கு முன்னுரிமை

**திருப்பதி, நவ.29:**

தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பிஆர் நாயுடு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஏழுமலையான் கோயிலில் வைகுண்ட ஏகாதசியான டிசம்பர் 30-ம் தேதி சொர்க்க வாசல் திறக்கப்படுகிறது. தொடர்ந்து 10 நாட்கள் வரை, அதாவது ஜனவரி மாதம் 8-ம் தேதி வரை சொர்க்க வாசல் தரிசனத்திற்கு பக்தர்கள் அனுமதிக்கப்படுவர். முதல் 3 நாட்கள், அதாவது டிசம்பர் 30, 31 மற்றும் ஜனவரி 1-ம் தேதி ஆன்லைன் மூலம் முன் பதிவு செய்து கொண்ட பக்தர்களுக்கு மட்டுமே தரிசன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன் பின்னர், ஜனவரி 2-ம் தேதி முதல் 8-ம் தேதி வரை 7 நாட்களுக்கு சாமானிய பக்தர்களுக்கு முன்னுரிமை வழங்கும் விதத்தில் டோக்கன்கள் இல்லாமல் கூட தரிசனம் செய்யலாம். மேலும் இந்த நாட்களில் தினமும் 15000 ரூ.300 சிறப்பு தரிசனமும், 1000 வாணி அறக்கட்டளை மூலம் டிக்கெட் பெற்றவர்களுக்குக்கான தரிசன ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்த 10 நாட்களும் விஐபி தரிசனம், முதியோர், மாற்று திறனாளிகளுக்கான சிறப்பு தரிசனங்கள் முற்றிலுமாக ரத்து செய்யப்படுகின்றன. டிசம்பர் 10-ம் தேதி ஆன்லைன் மூலம் உள்ளூர் பக்தர்களுக்கு தினமும் 5 ஆயிரம் டிக்கெட் வழங்கப்படும். டிசம்பர் 5-ம் தேதி காலை 10 மணிக்கு வாணி அறக்கட்டளை டிக்கெட்டுகள் ஆன்லைன் மூலம் வழங்கப்படும். அதே நாள் மதியம் 3 மணிக்கு ரூ.300 சிறப்பு தரிசன டிக்கெட்டுகளும் ஆன்லைனில் வெளியிடப்படும். இதனை பெற்றுக்கொண்ட பக்தர்கள் சொர்க்க வாசல் தரிசனம் செய்யலாம். இவ்வாறு பிஆர் நாயுடு கூறினார்.

## 'ஒரு ரூபாய் கூட இல்லை... எதற்கு சிசிடிவி கேமரா?' - வீட்டில் கிடைத்த கடிதம்

**திருநெல்வேலி, நவ.29:**

திருநெல்வேலி பழையபேட்டை காந்திநகரை சேர்ந்தவர் ஜேம்ஸ்பால் (57). கிறிஸ்தவ ஊழியம் செய்து வருகிறார். இவரது மனைவி பீட்டா. இவர்களது மகள் மதுரையிலுள்ள வங்கியில் பணிபுரிந்து வருகிறார். கடந்த 2 நாட்களுக்குமுன் ஜேம்ஸ்பால் தனது மனைவியுடன் மதுரைக்கு சென்றார்.

அங்கிருந்து தனது செல்போன் மூலம் வீட்டில் சிசிடிவி கேமராக்கள் செயல்படுவதை கண்காணித்தார். அப்போது கேமராக்கள் செயல்பட்டன. ஆனால் நேற்று முன்தினம் காலையில் பார்த்தபோது அந்த கேமராக்கள் செயல்படவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த ஜேம்ஸ்பால், அருகிலுள்ள வீட்டாருக்கு தகவல் தெரிவித்தார்.

அவர்கள் சென்று பார்த்தபோது வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது. இதையடுத்து மதுரையிலிருந்து திருநெல்வேலி வந்த ஜேம்ஸ்பால் தனது வீட்டுக்கு சென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டிருந்தது. அதில் இருந்த உண்டியல் மற்றும் பர்ஸ் ஆகியவற்றில் இருந்த ரூ.25 ஆயிரம் திருடப்பட்டிருந்தது. பேட்டை போலீஸார் அங்குவந்து விசாரணை நடத்தினர். தடயவியல் நிபுணர்களால் தடயங்களும் சேகரிக்கப்பட்டன. அப்போது வீட்டின் அறையில் ஒரு கடிதம் கிடந்தது. அதில், 'உன் வீட்டில் ஒரு ரூபாய்கூட இல்லை, இதற்கு இத்தனை கேமராவா?. அடுத்தமுறை என்னை மாதிரி யாராவது திருடன் வந்தால் ஏமாறாமல் இருக்க காசாவது வை. மன்னித்துக்கொள்ளவும்.

இப்படிக்கு திருடன்' என்று எழுதப்பட்டிருந்தது. இந்த கடிதத்தை கைப்பற்றிய போலீஸார், அப்பகுதியிலுள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

## 'சென்னை ஒன்' செயலி வாயிலாக மாதாந்திர பயண அட்டை பெறும் வசதி: அமைச்சர் சிவசங்கர் தொடங்கி வைத்தார்

**சென்னை, நவ.29:**

சென்னை ஒன் செயலி வாயிலாக மின்னணு மாதாந்திர பயண அட்டை பெறும் வசதியை அமைச்சர் சிவசங்கர் தொடங்கி வைத்தார்.



மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் கும்டா இணைந்து சென்னை ஒன் செயலி வாயிலாக ரூ.1,000 (கோல்டன் டிக்கெட்) மற்றும் ரூ.2,000 (டைமண்ட் டிக்கெட்) மின்னணு மாதாந்திர பயண அட்டை பெறும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை பல்லவன் சாலையில் உள்ள மாநகர போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் இந்த வசதியை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அறிமுகம் செய்து வைத்தார்.

தற்போது, மாநகர் போக்குவரத்துக் கழக முக்கிய பேருந்து நிலையங்களில் மாதாந்திர பயணச்சீட்டு மையங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வரும் விருப்பம்போல் பயணம் செய்யும் ரூ.1000 மற்றும் ரூ.2000 மதிப்பிலான பயண அட்டைகள், சென்னை ஒன் செயலி வாயிலாக எங்கும் எப்போதும் கைபேசியில் எளிதாக பெறக்கூடிய மின்னணு பயண அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன.

சென்னை ஒன் செயலி வாயிலாக பெறப்படும் இந்த மின்னணு பயண அட்டை வாங்கிய நாளிலிருந்து, தொடர்ந்து 30 நாட்களுக்கு செல்லுபடியாகும்.

மேலும், இது முழுக்க முழுக்க பண மில்லா பரிவர்த்தனை முறையில் இயங்குவதால் யுபிஐ அல்லது டெபிட், கிரெடிட் கார்டுகள் மூலம் உடனடியாக கட்டணம் செலுத்தி, பயண அட்டை பெறும் வசதி உள்ளது என அதிகாரிகள் கூறினர்.

இதை தொடர்ந்து நாட்டிலேயே சிறந்த பொதுப் போக்குவரத்து அமைப்பை கொண்ட நகரம் என்ற தேசிய விருது பெற்றதற்காக மாநகர் போக்குவரத்துக் கழக அனைத்து பணியாளர்களுக்கும் அமைச்சர் பாராட்டுச் சான்றிதழும், பதக்கமும் வழங்கி கவுரவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் த.பிரபுசங்கர், சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து அதிகார அமைப்பு (கும்டா) உறுப்பினர் செயலர் ஐ.ஜெயக்குமார், மாநகர் போக்குவரத்துக் கழக இணை மேலாண் இயக்குநர் ராம.சுந்தரபாண்டியன், உயர் அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# “வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையைப் பின்பற்றி...” - மக்களுக்கு முதல்வர் வேண்டுகோள்

**சென்னை நவ.29:**

டித்வா புயலையொட்டி, பொதுமக்கள் வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையினைப் பின்பற்றி, அவசியமின்றி வெளியில் வருவதைத் தவிர்த்து, பாதுகாப்பான இடங்களில் இருக்க வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நேற்றைய தினம் (நவ.27) டித்வா புயல் உருவானது. இப்புயல் காரணமாக இன்றும், நாளையும் (நவ., 28,29) சில இடங்களுக்கு கனமழை பாதிப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இந்நிலையில், முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், “டித்வா புயல் பாதிப்புகளில் இருந்து மக்களைக் காக்க 14 மாவட்ட ஆட்சியர்களுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டு அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறேன்.

16 எஸ்.டி.ஆர்.எஃப் படைகளும் 12 தேசிய பேரிடர் மீட்புப் படைபடைகளும் கடுமையான மழைப்பொழிவு ஏற்படக்கூடிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

அனைத்துத்துறைகளும் முறையான திட்டமிடுதலோடு ஒருங்கிணைந்து செயல்படுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிசெய்திட வேண்டும்.

பொதுமக்கள் வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையினைப் பின்பற்றி, அவசியமின்றி வெளியில் வருவதைத் தவிர்த்து, பாதுகாப்பான இடங்களில் இருக்க வேண்டும் எனக்கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார். இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் துரை.ரவிச்சந்திரன், சி.ஹரிப்ரியா, மா.கவிதா, பொ.ஜெயராமன், கோ.செ. மங்கையர்க்கரசி, சி. கல்யாணி, இணை ஆணையர் பெ.ரமேஷ், அறங்காவலர் குழுத்தலைவர் ச.ஜெயக்குமார், துணை ஆணையர் ஆர்.செந்தில்குமார், கண்காணிப்புப் பொறியாளர்கள் எஸ்.செல்வராஜ், எம்.பழனி, செயற்பொறியாளர் ரேவதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### ஒளியில் ஒளிந்திருக்கும் காந்தத்தின் சக்தி



ஒளி என்பது மின்புலம் மற்றும் காந்தப்புலம் ஆகிய இரண்டும் இணைந்த ஒரு மின்காந்த அலை. ஒளியானது ஒரு காந்தப் பொருளின் ஊடாகச் செல்லும் போது, ஒளியில் உள்ள ‘மின்புலம்’ மட்டுமே அந்தப் பொருளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்று விஞ்ஞானிகள் இவ்வளவு காலம் நம்பி வந்தனர். ஒளியின் மற்றொரு பகுதியான ‘காந்தப்புலம்’, எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாத அளவுக்கு மிகவும் பலவீனமானது என்பதே அவர்களின் கருத்து. ஆனால், இஸ்ரேலில் உள்ள ஹீப்ரு பல்கலை ஆய்வாளர்கள், அந்தக் கருத்தைத் தவறென நிரூபித்து உள்ளனர். ஒளியின் அந்த ‘பலவீனமான’ காந்தத்தன்மைதான், ‘பாரடே விளைவு’ எனப்படும் ஒளிச் சுழற்சிக்கு மிக முக்கியக் காரணமாக இருக்கிறது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களின் பகுப்பாய்வு, ஒளியியல் ஆய்வகங்களில் பரவலாகப் பயன்படும் ‘டெர்பியம் காலியம் கார்னட்’ (Terbium Gallium Garnet -- TGG) என்ற படிகத்தை மையமாகக் கொண்டது. ‘சுழல் இயக்கவியல் மாதிரி’ (Spin-dynamics model) என்ற முறையைப் பயன்படுத்தி, அகச்சிவப்புக் கதிரில் உள்ள அலைவுறும் காந்தப்புலம், ஒரு சிறிய, வேகமாகச் சுழலும் காந்தம் போலச் செயல்படுவதை அந்தக் குழு கண்டறிந்தது.

ஒளியின் இந்தச் சுழற்சியானது, அந்தப் படிகத்தில் உள்ள அணுக்களின் சுழற்சியின் மீது ஒரு திருப்பு விசையைச் (Torque) செலுத்துகிறது. இதற்குக் காரணம் மின்புலம் மட்டுமே என்று முன்பு கருதப்பட்டது. ஆனால், ஒளியின் காந்தப்புலம்தான் அந்தச் சுழற்சியில் 70 சதவீதம் வரை பங்களிக்கிறது என்று ஆய்வாளர்கள் அதிர்ச்சிகரமான தகவலைத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வு முடிவு, ஒளி குறித்த 180 ஆண்டுகால அறிவியல் அனுமானத்தைத் திருத்தி எழுதுகிறது. இந்தக் கண்டுபிடிப்பு, தற்போது எலக்ட்ரானிக்ஸ் துறைக்குப் போட்டியாக வேகமாக வளர்ந்து வரும் ‘ஸ்பின்ட்ரானிக்ஸ்’ (Spintronics), ஒளிவடிவத் தகவல் சேமிப்பு (Optical storage) மற்றும் மிகவேகமான காந்த-ஒளியியல் நிலைமாற்றம் (Magneto--optical switching) போன்ற துறைகளில், புதிய முன்னேற்றங்களுக்கு வழிவகுக்கும்.

# டித்வா புயல் எதிரொலி: பாம்பன் பாலத்தில் ரயில்கள் செல்ல தடை

**ராமேசுவரம், நவ.29:**

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் உருவாகியுள்ள ‘டித்வா’ புயலின் தாக்கத்தினால் ராமேசுவரம் தீவுப் பகுதியில் பலத்த காற்றுடன் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பாம்பன் பாலத்தில் ரயில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டு, மண்டபம் மற்றும் ராமநாதபுரத்தில் ரயில்கள் நிறுத்தப்பட்டன.




இலங்கை அருகே தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் உருவாகியுள்ள புயலுக்கு டித்வா எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது தமிழகத்தின் வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து, நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) சென்னை மற்றும் ஆந்திர கடலோர பகுதிகளில் கரையைக் கடந்து செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புயலினால் பாம்பன் மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணை கடலோரப் பகுதிகளில் மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் காற்று வீசியது. மேலும், காற்றுடன் இடைவிடாத மழையும் பெய்தது.

இந்நிலையில், பாம்பன் பாலத்தில் ரயில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டு, ராமேசுவரத்திற்கு ரயில் சேவை நிறுத்தப்பட்டது. இதனால் ராமேசுவரம் வரும் பயணிகள் ரயில்கள் ராமநாதபுரம் வரையிலும், எக்ஸ்பிரஸ் ரயில்கள் மண்டபம் வரையிலும் இயக்கப்பட்டது.

நாளை (சனிக்கிழமை) மதுரையிலிருந்து ராமேசுவரத்திற்கு இயக்கப்படும் பயணிகள் ரயில் உச்சிப்புளி ரயில் நிலையம் வரையிலும் இயக்கப்படும்.

சென்னை - ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் ரயில், தாம்பரம் -ராமேசுவரம் எக்ஸ்பிரஸ், திருவனந்தபுரம் - ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் ரயில், திருச்சி - ராமேசுவரம் எக்ஸ்பிரஸ், ராமநாதபுரம் ரயில் நிலையம் வரையிலும் இயக்கப்படும்.

ராமேசுவரம் - சென்னை வரையிலுமான போட் மேயில், புவனேஸ்வர் ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் ஆகிய ரயில்கள் மண்டபம் ரயில் நிலையம் வரையிலும் இயக்கப்படும், என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

# சான்றிதழ்களை துரிதமாக வழங்க வேண்டும்: கல்லூரிகளுக்கு யுஜிசி எச்சரிக்கை

**சென்னை, நவ.29:**

பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) செயலர் மணிஷ் ஆர். ஜோஷி, அனைத்து உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: நாட்டில் உள்ள சில உயர்கல்வி நிறுவனங்கள், உரிய காலக்கட்டத்துக்குள் பருவத் தேர்வுகளை நடத்துவதில்லை.




பட்டப் படிப்பு சான்றிதழ்களையும் வழங்கவில்லை என்றும் யுஜிசியின் கவனத்துக்கு புகார் வந்துள்ளது. இந்த தாமதம் மாணவர்கள் தகுதியான வேலை வாய்ப்புகளை பெறவும், உயர்கல்விக்கும் இடையூறாக இருக்கிறது. யுஜிசி விதியின்படி மாணவர்கள் பட்டம் பெற தகுதி பெற்ற 180 நாட்களுக்குள், அவர்களுக்கு பட்டங்களை வழங்க வேண்டும்.

இந்த விதிகளை பின்பற்றாத உயர்கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மாணவர்களுக்கு பட்டப்படிப்பு சான்றிதழ்களை தாமதமின்றி வழங்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் சக்தியால் முதல்வர் அரியணையில் விஜய் அமர்வார்” - கோவையில் செங்கோட்டையன் உற்சாகம்

**கோவை, நவ. 29:**

“தவெகவின் வெற்றி என்பது உறுதி செய்யப்பட்ட ஒன்று. எந்த தடை இருந்தாலும், மக்கள் சக்தி மூலமாக, 2026-ல் விஜய் முதல்வராக அரியணையில் அமர்வார்” என தவெக உயர்மட்ட மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.



அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், தனது எம்.எல்.ஏ.பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தவெக தலைவர் விஜய் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தார். அவருக்கு, தவெக உயர்மட்ட மாநில நிர்வாகக்குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் மற்றும் கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு மாவட்ட அமைப்புச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

தவெகவில் இணைந்தபின், சென்னையில் இருந்து கோவை வந்த செங்கோட்டையனுக்கு, தவெக நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் செங்கோட்டையன் கூறியது: “அதிமுக இரு பிரிவுகளாக பிரிந்து இருந்தபோது, நான் ஜெயலலிதாவின் அணியில் இருந்தேன். தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், நாளைய முதல்வருமான விஜய் உடன் இப்போது இருக்கிறேன்.

திராவிட இயக்கத்தை மீண்டும் தமிழகத்தில் உருவாக்க, எம்ஜிஆர், ஜெயலலிதா வழியில், மக்கள் சக்தியோடு எங்கள் பணிகள் அமையும். மக்கள் முழு மனதாக அவரை ஏற்றுக் கொள்வார்கள். மக்கள் சக்தியை வீழ்த்துவதற்கு, எந்த சக்தியாலும் முடியாது. தவெகவின் வெற்றி என்பது உறுதி செய்யப்பட்ட ஒன்று. எந்த தடை இருந்தாலும், மக்கள் சக்தி மூலமாக, 2026-ல் விஜய் முதல்வராக அரியணையில் அமர்வார்.

தமிழகத்தில் ஒரு மாற்றத்தை, புதிய சமுதாயத்தை உருவாக்க, ஒரு நேர்மையான ஆட்சியை தமிழகத்தில் உருவாக்க விஜய் புறப்பட்டு இருக்கிறார். அவரது வெற்றிப் பயணம், மக்களுக்கு சேவை செய்வதாக இருக்கும். ஆண்டுக்கு ரூ.500 கோடி வருவாயை தூக்கி எறிந்து விட்டு மக்கள் சேவைக்காக விஜய் அரசியலுக்கு வந்துள்ளார்.

தமிழகத்தில் ஒரு புனித ஆட்சியை கொண்டுவர இந்த இயக்கத்தை உருவாக்கி இருக்கிறார். அதில் நான் இடம்பெற்று இருக்கிறேன். என் உயிர் மூச்சு உள்ளவரை இவர்களுடன் இருப்பேன். எம்ஜிஆர் ஆட்சியில் அமர்ந்தபோது, ‘அண்ணாயிசம்’ எனது கொள்கை என அறிவித்தார். அதுபோல, அனைவரின் பொருளாதாரமும் உயர வேண்டும் என்ற நோக்கில், எல்லோருக்கும் வீடு, இரு சக்கர வாகனம் வேண்டும் என விஜய் அறிவித்து உள்ளார்.

தவெகவில் ஜனநாயகம் இருப்பதால், யார் படத்தை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். தவெக தலைவர் விஜய் வாகனத்தில் ஒருபுறம் எம்ஜிஆர் படமும், மறுபுறம் அண்ணா படமும் இருப்பதை மறந்து விடக்கூடாது.

என்னை பொருத்தவரை ஒன்பது முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். மூன்று முறை வாக்கே கேட்காமல் என்னை மக்கள் வெற்றி பெற வைத்திருக்கின்றனர். எனக்கு பின்னால் மக்கள் இல்லை என்று சொல்வது சரியல்ல. அதை மக்களே பார்த்துக் கொள்வார்கள். நான் என்று ஒருவர் நினைத்தால், ஆண்டவன் தான் என்று காட்டுவான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்” என்று அவர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அவர் தவெக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் ஊர்வலமாக கோபிக்கு புறப்பட்டுச் சென்றார்.

## க்ரைம் கார்னர்

### பங்குச் சந்தை வர்த்தக மோசடியில் ரூ.35 கோடியை இழந்த மும்பை முதியவர்!

**சென்னை, நவ.29:**

மகாராஷ்டிராவின் மேற்கு மாதுங்காவை சேர்ந்தவர் பரத் ஹரக்சந்த் ஷா (72). இவரும் இவரது மனைவியும் பரேல் பகுதியில் புற்றுநோயாளிகளுக்கு குறைந்த கட்டணத்தில் விடுதி நடத்தி வருகின்றனர். 1984-ல் பரத் ஷாவின் தந்தை இறந்த பிறகு அவரது பெயரில் இருந்த பங்குகள் இவரது பெயருக்கு வந்தன. என்றாலும் பரத் ஷாவுக்கு பங்குச் சந்தை அனுபவம் இல்லாததால் அவர் பங்கு வர்த்தகத்தில் ஈடுபடவில்லை.

இந்நிலையில் 2020-ல் நண்பர் ஒருவரின் ஆலோசனைப் படி பரத் ஷா பங்கு வர்த்தகத்தில் இறங்கினார். இதற்காக அவரும் அவரது மனைவியும் ‘குளோப் கேப்பிட்டல் மார்க்கெட்ஸ்’ என்ற நிறுவனத்துடன் இணைந்து டீமேட் கணக்கு தொடங்கினர். பிறகு அவர்கள் தங்கள் பெயரில் உள்ள பங்குகளை நிறுவனத்தின் பெயருக்கு மாற்றினர். இதையடுத்து பரத் ஷா, அவரது மனைவியின் டீமேட் கணக்குகளை அந்த நிறுவனத்தின் அக் ஷய் பரியா, கரண் சிரோயா ஆகிய 2 பிரதிநிதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டனர். அவர்கள் தினமும் பரத் ஷாவை தொடர்பு கொண்டுபேசியதுடன் அடிக்கடி வீட்டுக்கும் வந்து சென்றனர். அவர்களை நம்பிய ஷாவும் அவர்கள் கேட்ட ஓடிபி உள்ளிட்ட அனைத்து தகவல்களை கொடுத்து வந்தார். அவர்கள் கூறியது போல மெயில்களுக்கு பதில் அனுப்பினார். 2020 மார்ச் முதல் 2024 ஜூன் வரை பரத் ஷா பெற்ற வருடாந்திர அறிக்கைகள் தொடர்ந்து லாபங்களை காட்டின. இந்நிலையில் 2024 ஜூலையில் பரத் ஷா மற்றும் அவரது மனைவியின் கணக்குகளில் ரூ.35 கோடி கடன் இருப்பதாகவும் அதை உடனே செலுத்தாவிட்டால் அவர்களின் பங்குகள் விற்கப்படும் என்றும் பரத் ஷாவுக்கு குளோப் கேப்பிட்டல் ரிஸ்க் நிர்வாகத் துறையிடம் இருந்து தகவல் வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த பரத் ஷா, அந்த நிறுவனத்தின் உண்மையான ஆவணங்களை பதிவிறக்கம் செய்தபோது, தனக்கு அனுப்பப்பட்ட அனைத்து தகவல்களும் பொய் எனத் தெரியவந்தது. இதையடுத்து பரத் ஷா மீதமுள்ள பங்குகளை விற்று ரூ.35 கோடி கடனை முழுவதுமாக செலுத்தினார். போலி ஆவணங்களை காண்பித்து 4 ஆண்டுகளில் ரூ.35 கோடி மோசடி செய்யப்பட்டது தொடர்பாக மும்பை பொருளாதார குற்றப் பிரிவு போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

### பணமோசடி வழக்கில் வின்சோ நிறுவனர்கள் கைது

**பெங்களூரு, நவ.29:**

ஆன்லைன் கேமிங் தளமான வின்சோ (WINZO) தடை செய்யப்பட்ட ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளை நடத்தவதாக புகார் எழுந்தது. மேலும், பெரும்பான்மையான நேரங்களில் வாடிக்கையாளர்கள் மனிதர்களுடன் விளையாடாமல் மென்பொருளுடன் விளையாடும் வகையில் ஆட்டத்தை வடிவமைத்தது தெரியவந்தது. இதைக் கண்டறிந்த சில வாடிக்கையாளர்கள் தங்களின் பணத்தை கோரினர். ஆனால் , வின்சோ நிறுவனம் வாடிக்கையாளர்களின் ரூ.43 கோடியை முடக்கி வைத்திருந்தது. மேலும் அந்நிறுவனம் அமெரிக்க வங்கிக் கணக்கில் ரூ.489 கோடியை மறைத்து வைத்திருந்தது. அமலாக்கத்துறை நடத்திய சோதனையில் ரூ.505 கோடி மதிப்பிலான பத்திரங்கள் முடக்கப்பட்டுள்ளன. இதையடுத்து வின்சோ நிறுவனர்கள் சவுமியா சிங் ரத்தோர், பவன் நந்தா ஆகியோர் பெங்களூருவில் கைது செய்யப்பட்டு, நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, இருவரையும் 7 நாள் காவலில் எடுத்து விசாரித்து வருகின்றனர்.

### ரவுடி நாகேந்திரன் மகன் மீது ரியல் எஸ்டேட் அதிபர் போலீஸில் புகார்

**சென்னை, நவ.29:**

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில், ரவுடி நாகேந்திரன் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்டு கைது செய்யப்பட்டு சமீபத்தில் உடல் நலக் குறைவால் உயிரிழந்தார். இவரது 2-வது மகன் அஜித்ராஜ் வழக்கு ஒன்றில் கைதாகி சிறையில் உள்ளார். இந்நிலையில் ரியல் எஸ்டேட் அதிபரான அண்ணா நகரைச் சேர்ந்த லோகநாதன் (53) என்பவர் தனது ரூ.2 கோடி மதிப்புடைய நிலப் பிரச்சினையில் முன்பு அஜித்ராஜ் தலையிட்டு மிரட்டி கட்டப்பஞ்சாயத்தில் ஈடுபட்ட தாகவும், தன்னுடைய சொகுசு காரை பறித்துச் சென்றதாகவும் எம்கேபி நகர் காவல் நிலையத்தில் தற்போது புகார் அளித்துள்ளார். போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

### தொழிலில் முதலீட்டு ஆசை காட்டி ரூ.7 லட்சம் மோசடி: மாநகராட்சி முன்னாள் ஊழியர் கைது

**சென்னை, நவ.29:**

சென்னையை அடுத்த பனையூரைச் சேர்ந்தவர் கோகுல் (31). இவர் கடந்த 2021-ம் ஆண்டு, கரோனா காலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒப்பந்த ஊழியராக வேலை செய்து வந்தார்.

அப்போது மாநகராட்சியில் அவருடன் லேப் டெக்னீஷியனாக வேலை செய்து வந்த பாடியநல்லூரைச் சேர்ந்த பிரவீன் குமார் (36) மற்றும் அவரது மனைவி கலைவாணி ஆகிய இருவரும் நாங்கள் தொழில் ஒன்றை தொடங்கியுள்ளோம். அதில் முதலீடு செய்தால் இரட்டிப்பு லாபம் தருகிறோம் என ஆசை வார்த்தை கூறியுள்ளனர்.

இதை நம்பிய கோகுல் 2021 ஜனவரி முதல் டிசம்பர் வரை சுமார் ரூ.9 லட்சத்து 4 ஆயிரம் பணத்தை பிரவீன் குமார் மற்றும் அவரது மனைவிக்கு ஆன்லைன் பணப்பரிவர்த்தனை மூலம் அனுப்பியுள்ளார். பணத்தை பெற்றுக் கொண்ட இருவரும் லாபத் தொகையை கொடுக்காமல் ஏமாற்றியுள்ளனர். போலீஸில் புகார் இதனால் விரக்தி அடைந்த அவர் முதலீடு செய்த பணத்தை திரும்பக் கேட்டுள்ளார். தொடர் வற்புறுத்தலையடுத்து ரூ.2.30 லட்சத்தை மட்டும் திரும்பிக் கொடுத்துள்ளனர். மீதம் உள்ள ரூ.6.74 லட்சத்தை கொடுக்கவில்லை. இதையடுத்து போலீஸார் வழக்குப் பதிந்து பிரவீன்குமாரை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

# விடியோவால் வந்த வினை! ரயிலில் நூடுல்ஸ் சமைத்த பெண்ணை கண்டுபிடித்த ரயில்வே!

**புதுடெல்லி, நவ.29:**



ஓடும் ரயிலில், செல்போன் சார்ஜ் செய்ய அளிக்கப்பட்டிருந்த வசதியைப் பயன்படுத்தி, சுடுநீர் தயாரிக்கும் கெட்டிலில், நூடுல்ஸ் செய்ததோடு மட்டுமல்லாமல், அதனை விடியோ எடுத்து வெளியிட்ட பெண்ணை ரயில்வே கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துள்ளது.

மின்சாரத்தில் இயங்கும் கெட்டிலில் தண்ணீரை ஊற்றி, அதனை போன் சார்ஜ் செய்யும் வசதியுடன் இணைத்து நூடுல்ஸ் தயாரித்துக் கொடுத்த பெண்ணின் விடியோ ஒன்று ஒரு சில நாள்களுக்கு முன்பு சமூக வலைத்தளங்களில் வைரலானது.

ஆனால், செல்போன் சார்ஜ் போடும் வசதியைப் பயன்படுத்தி கெட்டிலில் சமைத்த பெண்ணுக்கு சமூக வலைத்தளங்களில் கடுமையான எதிர்ப்பும் கிளம்பியிருந்தது. இது தவறான முன்னுதாரணமாக இருக்கும் என்று பலரும் பதிவிட்டிருந்தனர்.

இந்த நிலையில், அப்பெண்ணின் முகவரியை தேடிக் கண்டுபிடித்துள்ளது இந்திய ரயில்வே. புனேவில் உள்ள சின்ச்வாத் பகுதியைச் சேர்ந்த சரிதா லிங்காயத் என்பவர்தான் ரயிலில் நூடுல்ஸ் தயாரித்தவர் என்பது கண்டறியப்பட்டு, அவர் மீது ரயில்வே சட்டம் 154ன் கீழ், பயணிகளின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுத்தியதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், அவர் தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில், ரயிலில் நூடுல்ஸ் தயாரித்தது குற்றம்தான் என்று மன்னிப்புக் கோரும் விடியோ ஒன்றையும் பகிருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அக். 16 அன்று, ஹரித்வாரிலிருந்து புனே சென்றுகொண்டிருருக்கும்போது, சரிதா ரயிலில் நூடுல்ஸ் தயாரித்துள்ளார். சமையலறை எங்கும் எப்போதும் என்று மிகவும் உற்சாகமாகப் பேசியபடியும், விடுமுறைப்பயணங்களின்போதும் தங்களுக்கு விடுமுறை இல்லை என்று சரிதா விடியோவில் பேசியிருந்தார். எங்கள் பெட்டியில் சில சிறுவர்கள் இருந்தார்கள்.

அவர்களுக்காக நூடுல்ஸ் தயாரித்ததாகவும், அன்றைய நாள் நாங்கள் விரதம் என்பதால், கெட்டிலில் தேநீர் தயாரித்து அங்கிருந்த முதியவர்கள் பகிர்ந்து கொண்டதும் தெரிய வந்துள்ளது.

சரிதா வெளியிட்ட விடியோவில், ரயிலில் கெட்டிலைப் பயன்படுத்தக் கூடாது என்பது தெரியாமல், இந்த தவறை செய்துவிட்டதாகவும், யாருக்கும் ஆபத்து ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் எந்த தவறையும் செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ரயிலில், நூடுல்ஸ் தயாரிப்பது போன்ற எந்த மின்னணு சாதனங்களையும் பயன்படுத்த வேண்டாம். அது தவறு மட்டுமல்லாமல், ரயிலில் இருக்கும் பயணிகளுக்கும் ஆபத்து. எனக்கு இது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்திய மும்பை ரயில்வே பாதுகாப்புப் படையினருக்கு நன்றி. என்னைப் போல வேறு யாரும் தவறுகளை செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ரயில் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்துவரும் இந்திய ரயில்வேக்கு நன்றி. நான் மீண்டும் இதுபோன்ற தவறை செய்ய மாட்டேன் என்று கூறியிருக்கிறார்.

## நேபாளம் வெளியிட்ட புதிய பணத்தாளால் சர்ச்சை!




**புதுடெல்லி, நவ.29:**

நேபாளத்தில், இந்தியப் பகுதிகளை உள்ளடக்கிய நேபாள வரைபடத்துடன் கூடிய புதிய ரூ.100 பணத்தாள்கள் வெளியிடப்பட்டுள்ளன.

உத்தரகண்டில் உள்ள கலாபானி, லிபுலேக் மற்றும் லிம்பியதுரா பகுதிகளை நேபாளம் மற்றும் சீனா ஆகிய நாடுகள் உரிமைக்கோரி வருகின்றன. இதனால், மூன்று நாடுகள் இடையில் எல்லைப் பிரச்னை நீண்டகாலமாக நிலவி வருவதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், நேபாள ராஷ்டிர வங்கி வெளியிட்டுள்ள புதிய ரூ.100 பணத்தாள்களில் கலாபானி, லிபுலேக் மற்றும் லிம்பியதுரா பகுதிகளை உள்ளடக்கிய நேபாள வரைபடம் அச்சிடப்பட்டுள்ளது. இந்தப் புதிய பணத்தாள்கள், கடந்த 2024 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுபற்றி, நேபாள ராஷ்டிர வங்கியின் செய்தித்தொடர்பாளர் கூறுகையில், நேபாள வரைபடம் பழைய ரூ.100 பணத்தாள்களிலும் அச்சிடப்பட்டிருந்ததாகவும், அரசின் முடிவின்படி தற்போது திருத்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

முன்னதாக, நேபாளத்தின் முன்னாள் பிரதமர் சர்மா ஒலி தலைமையிலான அரசு கடந்த 2020 ஆம் ஆண்டு கலாபானி, லிபுலேக் மற்றும் லிம்பியதுரா ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய புதிய நேபாள வரைபடத்தை வெளியிட்டது. இந்த வரைபடத்துக்கு, இந்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்திருந்தது. இருப்பினும், அந்த வரைபடம் நேபாளத்தின் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கர்நாடக முதல்வர் மாற்றம் குறித்த குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைப்போம்: மல்லிகார்ஜுன கார்கே

கர்நாடக முதல்வர் மாற்றம் குறித்த குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூரில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: புது தில்லிக்கு சென்றபிறகு முக்கியமான 3 அல்லது 4 தலைவர்களை அழைத்து முதல்வர் மாற்றம் குறித்த பிரச்னை குறித்து விவாதிப்பேன். அதன்பிறகு, முதல்வர் மாற்றம் குறித்த குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.

இந்த விவாதத்தின்போது முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே.சிவகுமார் மற்றும் எல்லோரையும் அழைத்துப் பேசுவேன். அந்த விவாதத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அங்கம் வகிப்பார். அனைவருடன் கலந்தாலோசித்த பிறகு, இந்த விவகாரத்தில் முடிவு எடுக்கப்படும். தொடர்ந்து, கட்சி மேலிடக்குழு விவாதித்து முடிவெடுக்கும் என்றார்.

இதனிடையே, இந்த கருத்துக்கு பதிலளித்து முதல்வர் சித்தராமையா கூறுகையில், 'கட்சி மேலிடம் அழைத்தால், தில்லி செல்வேன்' என்று கூறினார். துணை முதல்வர் டி.கே.சிவகுமார் கூறுகையில், 'கட்சி மேலிடம் அழைப்பு விடுத்தால் நானும், முதல்வரும் தில்லி செல்வோம்' என்றார்.

இதனிடையே, தனக்கு நெருக்கமான அமைச்சர்கள் ஜி.பரமேஸ்வர், சதீஷ் ஜார்கிஹோளி, எச்.சி.மகாதேவப்பா, கே.வெங்கடேஷ், முன்னாள் அமைச்சர் கே.என். ராஜண்ணா ஆகியோருடன் முதல்வர் சித்தராமையா ஆலோசனை நடத்தினார்.

துணை முதல்வர் டி.கே.சிவகுமாருக்கு ஆதரவாக ஒக்கலிகர் சமுதாய மடாதிபதிகள் பலர் கருத்து தெரிவித்துள்ள நிலையில், முதல்வர் பதவியில் இருந்து சித்தராமையாவை மாற்றினால் அதன் விளைவுகளை காங்கிரஸ் சந்திக்க நேரிடும் என்று பிற்படுத்தப்பட்டோர் சங்கம் அறிவித்துள்ளது.

## வெளிநாட்டு சொத்துகளை கணக்கில் காட்டாதவர்கள் மீண்டும் வரிக் கணக்கு தாக்கல் செய்ய வேண்டும்: வருமான வரித் துறை நடவடிக்கை

**புதுடெல்லி, நவ.29:**




வெளிநாடுகளில் உள்ள சொத்துகளை கணக்கில் காட்டாதவர்கள் மீண்டும் 2025 டிசம்பர் இறுதிக்குள் முழுமையான வரிக் கணக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று வருமான வரித் துறை அறிவுறுத்தியுள்ளது.

முதல்கட்டமாக, வெளிநாட்டில் அதிக சொத்துகள் இருந்தும் அதைக் கணக்குக் காட்டாத 25,000 பேருக்கு குறுஞ்செய்தி (எஸ்எம்எஸ்) மற்றும் மின்னஞ்சல் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன.

வெளிநாடுகளில் இருந்து தகவல்கள் பெறும் ஒப்பந்தத்தின்படி வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் சொத்து, வருமான விவரங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த நபர்கள் இந்தியாவில் வருமான வரிக் கணக்குத் தாக்கலின்போது அந்த விவரங்களைத் தெரிவிக்கவில்லை என்பதை வருமான வரித் துறை கண்டறிந்துள்ளது.

அதன் அடிப்படையில் முதல்கட்டமாக மீண்டும் முழு சொத்து விவரங்களுடன் வரிக் கணக்கைத் தாக்கல் செய்ய அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளது.

பெரு நிறுவனங்களில் பணியாற்றுவோர் உள்ளிட்ட பலர் வெளிநாடுகளிலும் சொத்துகளை வைத்துள்ளனர். அவர்களில் பலர் வெளிநாட்டு சொத்துகளை கணக்கில் காட்டவில்லை என்று தெரிகிறது. முதல் கட்டமாக 25,000 பேருக்கு மீண்டும் வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்ய வலியுறுத்தப்படவுள்ளது.

இரண்டாவது கட்டமாக, வெளிநாட்டில் சொத்துகள் வைத்திருப்போர் வருமான வரித் தாக்கலில் அதைக் தெரிவிக்க வேண்டிய அவசியம் குறித்து டிசம்பர் மத்தியில் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட இருக்கிறது. இது தொடர்பாக தொழில், வர்த்தக சம்மேளனங்களும் உரிய நடவடிக்கை எடுக்கும் என்று தெரிகிறது.

வெளிநாடுகளில் உள்ள சொத்துகளை வருமான வரிக் கணக்குத் தாக்கலின்போது தெரிவிக்கவில்லை என்றால் கருப்புப் பணத் தடுப்புச் சட்டத்தின்கீழ் ரூ.10 லட்சம் வரை அபராதம், கணக்கில் காட்டாத சொத்து மீது 30 சதவீத வரி மற்றும் 300 சதவீத அபராதம் விதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டும் வருமான வரித் துறை இதேபோன்ற விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொண்டது. இதன்மூலம் 24,678 பேர் வெளிநாடுகளில் உள்ள தங்கள் சொத்து விவரங்களைத் தெரிவித்து வரிக் கணக்கை தாக்கல் செய்தனர். ரூ.29,208 கோடி மதிப்பிலான வெளிநாட்டு சொத்துகள், ரூ.1,089.88 கோடி வெளிநாட்டு வருவாய் கணக்கில் காட்டப்பட்டது.

துபையில் இந்தியர்கள் மேற்கொண்ட முதலீட்டில் இருந்து கிடைத்த வருவாய்க்கு உரிய கணக்கு காட்டாதவர்கள் வீடுகளில் ஏற்கெனவே வருமான வரி சோதனையும் நடைபெற்றுள்ளது. தில்லி, மும்பை, புணேயில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

## திருப்பதி லட்டு நெய் கலப்பட விவகாரம்: தேவஸ்தானம் மூத்த அதிகாரி கைது!

**திருப்பதி, நவ.29:**

நாடு முழுவதும் பெரும் சர்ச்சையைஏற்படுத்திய,திருமலை திருப்பதி தேவஸ்தானத்துக்கு கலப்பட நெய் விநியோகம் செய்த விவகாரத்தில் தேவஸ்தான பொறியியல் துறை மூத்த அதிகாரியை சிபிஐ விசாரணைக் குழு வெள்ளிக்கிழமை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருவதாக விசாரணைக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரசித்தி பெற்ற திருமலை திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பிரசாதமாக விற்பனை செய்யப்படும் லட்டு தயாரிப்பதற்காக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை டெண்டர் விடப்பட்டு பல்வேறு நிறுவனங்களிடமிருந்து நெய் பெறப்படுகிறது. அவ்வாறு கடந்த ஆண்டு மே மாதம் டெண்டர் விடப்பட்டதில் திண்டுக்கல்லை சேர்ந்த ஏ ஆர் பால் பண்ணை நிறுவனம் ஒரு கிலோ நெய் ரூ 319.80 என 10 லட்சம் கிலோ நெய் விநியோகம் செய்ய ஒப்பந்தம் செய்தனர்.

அந்த நிறுவனத்தின் பெயரில் அனுப்பப்பட்ட நெய்யில் கலப்படம் செய்யப்பட்டிருப்பதை தேவஸ்தான அதிகாரிகள் சந்தேகித்தனர்.

இதை உறுதி செய்ய குஜராத்தில் உள்ள தேசிய பால்வள மேம்பாட்டு ஆணைய ஆய்வகத்துக்கு மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த ஆய்வகத்தில் கலப்படம் உள்ளது உறுதி செய்யப்பட்டது. தேவஸ்தான அதிகாரிகள் அளித்த புகாரின் அடிப்படையில் திருப்பதி கிழக்கு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

உச்சநீதிமன்றத்தில் இதுதொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், சிபிஐ ஹைதராபாத் பிரிவு இணை இயக்குநா் வீரேஷ் பிரபு, விசாகப்பட்டினம் சி.பி.ஐ எஸ்.பி. முரளி ரம்பாவுடன், விசாகப்பட்டினம் டிஐஜி கோபிநாத் ஜெட்டி, குண்டூர் ஐ.ஜி. சாவஷ்ரேஷ்டா திரிபாதி மற்றும் எஃப்எஸ்எஸ்ஏஐ அதிகாரி சத்யகுமார் பாண்டா ஆகியோர் கொண்ட சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது.

இதனையடுத்து திண்டுக்கல் பால் பண்ணையில் விசாரணை மேற்கொண்ட சிறப்பு புலனாய்வுக் குழு உறுப்பினர்கள் விசாரணை மேற்கொண்டு, நிர்வாக இயக்குநர் ராஜூ ராஜசேகரன், போலே பாபா, பால் பண்ணை முன்னாள் இயக்குநர்கள் பிபின் ஜெயின், பொமில் ஜெயின், வைஷ்ணவி டெய்ரி சிஇஓ அபூர்வா வினய் காந்த் சாவ்டா, தேவஸ்தான முன்னாள் அறங்காவல் குழு தலைவர் சுப்பா ரெட்டியின் உதவியாளர் ஆகியோரை ஏற்கனவே கைது செய்தனர்.

கடந்த 8 ஆம் தேதி திருமலை திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பிரசாதமாக விற்பனை செய்யப்படும் லட்டு தயாரிப்புக்கு பாமாயிலை நெய் போன்று மணக்கச் செய்யும் அசிட்டிக் அமில ஆஸ்டர் போன்ற ரசாயனங்களை விநியோகம் செய்த குற்றத்திற்காக உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த அஜித்குமார் சுகந்த் என்பவரை சிபிஐ விசாரணைக் குழுவினர் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் முன்பு தேவஸ்தானத்தில் கொள்முதல் பிரிவு பொது மேலாளராக பணியாற்றிய பொறியியல் துறை மூத்த அதிகாரி ஆர்எஸ்எஸ்விஆர் சுப்பிரமணியத்தை சிபிஐ விசாரணைக் குழு வெள்ளிக்கிழமை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருவதாக விசாரணைக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர் தேவஸ்தானத்தில் கொள்முதல் பிரிவு பொது மேலாளராக பணியாற்றியபோது லட்டு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் நெய் உள்ளிட்ட மூலப் பொருட்களை வாங்குவதற்குப் பொறுப்பேற்றதாகவும் கூறினார்.

## விளையாட்டு செய்திகள்

### மதுரையில் மாநில வாலிபால் போட்டி: வெற்றி பெற்ற அணிக்கு பரிசு

**புதுடெல்லி, நவ.29:**

2026-ம் ஆண்டுக்கான மகளிர் பிரீமியர் லீக் டி 20 கிரிக்கெட் தொடருக்கான மெகா ஏலம் டெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில் ஐசிசி உலகக் கோப்பை தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய அணியில் ஆல்ரவுண்டராக ஜொலித்த தீப்தி சர்மாவை ரூ.3.20 கோடிக்கு யுபி வாரியர்ஸ் அணி ரைட் டு மேட்ச் கார்டு மூலம் வாங்கியது.

இதன் மூலம் மகளிர் பிரீமியர் லீக்கில் அதிக தொகையை பெறும் 2-வது வீராங்கனை என்ற பெருமையை பெற்றார் தீப்தி சர்மா. இந்த வகையில் ஆர்சிபி அணியின் ஸ்மிருதி மந்தனா அதிகபட்சமாக ரூ.3.40 கோடி வாங்குகிறார்.

தீப்தி சர்மாவுடன், இளம் வேகப்பந்து வீச்சாளரான இந்தியாவின் கிரந்தி கவுடை ரூ.50 லட்சத்துக்கும், ஹர்லின் தியோலை ரூ.50 லட்சத்துக்கும், இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளரான சோபி எக்லஸ்டோனை ரூ.85 லட்சத்துக்கும், ஆஸ்திரேலியாவின் மெக் லேனிங்கை ரூ.1.9 கோடிக்கும், ஃபோப் லிட்ச்ஃபீல்டை ரூ.1.20 கோடிக்கும் யுபி வாரியர்ஸ் அணி வாங்கியது.

மும்பை இந்தியன்ஸ் அணி நியூஸிலாந்து ஆல்-ரவுண்டரான அமெலியா கெர்ரை ரூ.3 கோடிக்கு ஏலம் எடுத்தது. 25 வயதான அமெலியா கெர் கடந்த 2023 மற்றும் 2025-ல் மும்பை இந்தியன்ஸ் அணி சாம்பியன் பட்டம் வென்றதில் முக்கிய பங்கு வகித்திருந்தார். யுபி வாரியர்ஸ் அணி அதிர்ச்சி கொடுக்கும் விதமாக இந்திய ஆல்-ரவுண்டரான ஷிகா பாண்டேவை ரூ.2.40 கோடிக்கு வாங்கியது. அவர், கடைசியாக இந்திய அணிக்காக 2023-ல் விளையாடி இருந்தார்.

இந்திய அணியின் இடதுகை சுழற்பந்து வீச்சு வீராங்கனையான ஸ்ரீசரணியை டெல்லி கேபிடல்ஸ் அணி ரூ.1.30 கோடிக்கு ஏலம் எடுத்தது. அவரது அடிப்படை தொகை ரூ.30 லட்சமாக இருந்தது. மேலும் அந்த அணி தென் ஆப்பிரிக்காவின் லாரா வோல்வார்ட்டை ரூ.1.10 கோடிக்கும், மேற்கு இந்தியத் தீவுகளின் சினெல்லே ஹென்றியை ரூ.1.130 கோடிக்கும், இந்திய ஆல்-ரவுண்டரான ஸ்னே ராணாவை ரூ.50 லட்சத்துக்கும் வாங்கியது.

குஜராத் ஜெயண்ட்ஸ் அணி ரேணுகா சிங்கை ரூ.60 லட்சத்துக்கும், சோபி டிவைனை ரூ.2 கோடிக்கும் ஏலம் எடுத்தது. ஆர்சிபி அணியானது தென் ஆப்பிரிக்காவின் நதின் டி கிளெர்க்கை ரூ.65 லட்சத்துக்கும், ஆல்-ரவுண்டர்களான அருந்ததி ரெட்டியை ரூ.75 லட்சத்துக்கும், ராதா யாதவை ரூ.65 லட்சத்துக்கும் வாங்கியது.

### ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பை: மதுரை, சென்னையில் தொடக்கம்

**சென்னை, நவ.29:**

சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் 14-வது ஆடவர் ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை தொடர் இன்று (நவ.28) முதல் வரும் டிசம்பர் 10-ம் தேதி வரை சென்னை மற்றும் மதுரையில் நடைபெற உள்ளது. இதில் போட்டியை நடத்தும் இந்தியா உள்ளிட்ட 24 அணிகள் கலந்து கொள்கின்றன. இவை 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் நான்கு அணிகள் இடம் பெற்றுள்ளன. நடப்பு சாம்பியனான ஜெர்மனி 'ஏ' பிரிவில் இடம் பெற்றுள்ளது. இதே பிரிவில் தென் ஆப்பிரிக்கா, கனடா, அயர்லாந்து அணிகளும் இடம் பெற்றுள்ளன.போட்டியை நடத்தும் இந்தியா 'பி' பிரிவில் இடம் பெற்றுள்ளது. இதே பிரிவில் ஓமன், சிலி, சுவிட்சர்லாந்து ஆகிய அணிகளும் உள்ளன.

'சி' பிரிவில் 2021-ம் ஆண்டு சாம்பியனான அர்ஜென்டினா, நியூஸிலாந்து, ஜப்பான், சீனா ஆகிய அணிகள் இடம் பிடித்துள்ளன. 'டி' பிரிவில் ஸ்பெயின், பெல்ஜியம், எகிப்து, நமீபியா ஆகிய அணிகளும், 'இ' பிரிவில் நெதர்லாந்து, மலேசியா, இங்கிலாந்து, ஆஸ்திரியா ஆகிய அணிகளும் 'எஃப்' பிரிவில் பிரான்ஸ், ஆஸ்திரேலியா, கொரியா, வங்கதேசம் ஆகிய அணிகளும் இடம் பெற்றுள்ளன. லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் தனது பிரிவில் இடம் பெற்றுள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்றின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பிடிக்கும் அணிகள் கால்இறுதிக்கு முன்னேறும். இந்த 6 அணிகளுடன் லீக் சுற்றில் 2-வது இடத்தை பிடிக்கும் 2 சிறந்த அணிகளும் கால் இறுதி சுற்றில் இணையும். கால் இறுதி ஆட்டங்கள் டிசம்பர் 5-ம் தேதி சென்னையில் நடைபெறுகிறது. தொடர்ந்து அரை இறுதி ஆட்டங்கள் டிசம்பர் 7-ம் தேதியும் இறுதிப் போட்டி 10-ம் தேதியும் சென்னையில் நடைபெறுகின்றன.

### சையது மோடி பாட்மிண்டன் தொடர்: நோசோமி ஒகுஹாராவை வீழ்த்தினார்

**லக்னோ, நவ.29:**

சையது மோடி சர்வதேச பாட்மிண்டன் தொடர் லக்னோவில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் இந்தியாவின் தன்வி சர்மா, முன்னாள் உலக சாம்பியனான ஜப்பானின் நோசோமி ஒகுஹாராவை எதிர்த்து விளையாடினார்.

59 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 16 வயதான தன்வி சர்மா வெற்றி பெற்று கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினார். சகநாட்டைச் சேர்ந்த தஸ்னிம் மிர்ரை வீழ்த்தி கால் இறுதி சுற்றுக்குள் நுழைந்தார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் இந்தியாவின் ஹெச்.எஸ்.பிரனாய், சகநாட்டைச் சேர்ந்த 19 வயதான மன்ராஜ் சிங்குடன் மோதினார். 43 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மன்ராஜ் சிங் 21-15, 21-18 என்ற நேர் செட் கணக்கில் பிரனாயை வீழ்த்தி கால் இறுதி சுற்றில் கால்பதித்தார்.

# டித்வா புயலால் இலங்கையில் 56 பேர் உயிரிழப்பு; 44,000 பேர் பாதிப்பு?



**கொழும்பு, நவ.29:**

டித்வா புயலால் இலங்கையில் 56 பேர் உயிரிழந்தனர்; காணாமல் போன 21 பேரை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது; அதி கனமழை - வெள்ளத்தால் 44,000-க்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டித்வா புயலால் இலங்கையின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால், பல வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. பெரும்பாலான ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அதி கனமழை, வெள்ளம், நிலச்சரிவு காரணமாக இதுவரை 56 பேர் உயிரிழந்தனர்; 21 பேரை காணவில்லை; 44,000-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக 20,500 ராணுவ வீரர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். பதுல்லா மாவட்டத்தில் மட்டும் 21 பேர் உயிரிழந்ததாக இலங்கையின் பேரிடர் மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கெலானி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இதையடுத்து கரையோர மக்களுக்கு சிகப்புநிற வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தலைநகர் கொழும்புவிலும் பல பகுதிகள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

அநுராதாபுரத்தில் வெள்ளத்தில் சிக்கிக்கொண்ட ஒருவர் இலங்கையின் விமானப் படை ஹெலிகாப்டர் மூலம் பத்திரமாக மீட்கப்பட்டார்.

இலங்கையின் மத்திய மற்றும் வடக்குப் பகுதிகளில் இன்று 200 மிமி மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனமழை காரணமாக மாணவர்களுக்கான பல்வேறு தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மோசமான வானிலையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு இந்தியா உதவிகளை அளித்து வருகிறது. இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "டித்வா புயலால் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த இலங்கை மக்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களின் பாதுகாப்பு, ஆறுதல், விரைவான மீட்சிக்காக நான் பிரார்த்திக்கிறேன்.

ஆபரேஷன் சாகர் பந்து திட்டத்தின் கீழ், பேரிடர்கால உதவிகள் மற்றும் நிவாரணப் பொருட்களை இந்தியா அவசரமாக அனுப்பியுள்ளது. தேவை எழும் எனில் மேலும் உதவிகளை வழங்கவும் இந்தியா தயாராக உள்ளது.

இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை கொள்கையின் கீழ், இலங்கைக்கு ஆதரவாக இந்தியா தொடர்ந்து உறுதியுடன் நிற்கிறது" என தெரிவித்துள்ளார்.

## தாய்லாந்தை புரட்டிப்போட்ட வெள்ளம்: உயிரிழப்பு 145 ஆனது



**பாங்காக், நவ.29:**

தாய்லாந்தின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள 12 மாகாணங்களில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக அப்பகுதிகளில் முன்பு இல்லாத வகையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், 36 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால், அங்கு உள்கட்டமைப்பு மற்றும் சொத்துக்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. மேலும், வெள்ளம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 145 ஆக அதிகரித்துள்ளது. அதில், கோங்க்லா மாகாணத்தில் மட்டும் 110 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் வெள்ளத்தில் சிக்கியவர்களில் பலரைக் காணவில்லை. இதனால், பலி எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

வெள்ள நீர் வடியத் துவங்கிய பகுதிகளில் மீட்டுப் படையினர், இறந்தவர்களின் உடல்களை மீட்டு வருகின்றனர். வெள்ளம் பாதித்த பகுதிகளில் வசித்த லட்சக்கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மழை வெள்ளத்தால், சாலைகள், வீடுகள், வாகனங்கள் தண்ணீரில் மூழ்கி காணப்படுகின்றன. சேதமடைந்து காணப்படும் சாலைகள், தரையில் விழுந்து கிடக்கும் மின்சார கம்பங்கள், சகதிகளில் சிக்கிக் காணப்படும் வீட்டு உபயோக பொருட்கள் குறித்த வீடியோக்கள் சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளன.

## அமெரிக்காவில் 3ம் உலக நாட்டினர் குடியேற நிரந்தர தடை விதிக்கப்படும்; டிரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், நவ.29:**

அமெரிக்காவில் 3ம் உலக நாட்டினர் குடியேற நிரந்தர தடை விதிக்கப் போவதாக அந்நாட்டு அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார்.

அண்மையில், வெள்ளை மாளிகை அருகே அமெரிக்க தேசிய காவல் படை வீரர்கள் மீது ஆப்கனை சேர்ந்த ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தினார். இந்த சம்பவத்தை அடுத்து, ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்களின் அனைத்து குடியேற்ற கோரிக்கைகளை கால வரையின்றி நிறுத்தி வைத்து அமெரிக்கா உத்தரவிட்டது. க்ரீன் கார்டு வைத்து இருப்பவர்களின் ஆவணங்களை மறுபரிசீலனை செய்ய அதிபர் டிரம்ப் உத்தரவிட்டு இருந்தார்.

இந் நிலையில், 3ம் உலக நாட்டினர் அமெரிக்காவில் குடியேற நிரந்தர தடை விதிக்கப் போவதாக டிரம்ப் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் தமது ட்ரூத் சோஷியல் பதிவில் கூறி உள்ளதாவது;

தொழில்நுட்பத்தில் நாம் முன்னேறியிருந்தாலும், குடியேற்றக் கொள்கை பலரின் ஆதாயங்களையும் வாழ்க்கை நிலைமைகளையும் அரித்துவிட்டது. அமெரிக்காவை முழுமையாக மீட்கும் வகையில், மூன்றாம் உலக நாடுகளிலிருந்து இடம்பெயர்வை நிரந்தரமாக இடைநிறுத்துவேன்.

நம் நாட்டின் குடிமக்களாக இல்லாதவர்களுக்கு அனைத்து சலுகைகள் மற்றும் மானியங்களையும் முடிவுக்குக் கொண்டுவருவேன். மேற்கத்திய நாகரீகத்துக்கு பொருத்தமில்லாத, பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் வெளிநாட்டினரும் அவர்களின் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்.

இவ்வாறு அதிபர் டிரம்ப் தமது பதிவில் கூறி உள்ளார்.

## ஹாங்காங்கில் அடுக்குமாடி கட்டிடங்களில் ஏற்பட்ட தீ விபத்தில் இதுவரை 75 பேர் உயிரிழப்பு



**ஹாங்காய், நவ.29:**

ஹாங்காங்: ஹாங்காங் அடுக்குமாடி குடியிருப்புகளில் ஏற்பட்ட தீ விபத்தில் இதுவரை 75 பேர் உயிரிழந்துள்ளனர். 70-க்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயமடைந்து உள்ளனர். 279 பேரை காணவில்லை.

ஹாங்காங்கின் டய் போ பகுதியில் வாங் பக் கோர்ட் என்ற அடுக்குமாடி குடியிருப்பு வளாகம் உள்ளது. இதில் 8 அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. ஒவ்வொரு அடுக்குமாடி குடியிருப்பும் 31 மாடிகளை கொண்டதாகும்.

ஒட்டுமொத்தமாக 2,000-க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இந்த வீடுகளில் சுமார் 5,000 பேர் வசித்து வந்தனர். கடந்த சில மாதங்களாக வாங் பக் கோர்ட் அடுக்குமாடி குடியிருப்பில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்தன. இதற்காக சாரம் அமைக்க மூங்கில் கட்டைகளும் தூசி பறக்காமல் இருக்க தார்பாலின் துணிகளும் பெருமளவில் பயன்படுத்தப் பட்டன.

இந்த சூழலில் கடந்த புதன் கிழமை பிற்பகலில் வாங் பக் கோர்ட் வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டது. மூங்கில் சாரம், தார்பாலின் காரணமாக 8 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் தீ மளமளவென்று பரவியது. பராமரிப்பு பணி காரணமாக பெரும்பாலான வீடுகளின் ஜன்னல்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக தீ விபத்து ஏற்பட்டதை பொதுமக்களால் உடனடியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

ஒரே நேரத்தில் 8 அடுக்குமாடி குடியிருப்புகளிலும் வானளாவிய உயரத்துக்கு தீப் பற்றி எரிந்தது. சுமார் 20 மணி நேர போராட்டத்துக்குப் பிறகு தீ அணைக்கப்பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். தீ விபத்து நேரிட்ட பகுதியை ஹாங்காங் தலைமை செயல் அதிகாரி ஜான் லீ நேற்று பார்வையிட்டார்.

அவர் கூறியதாவது: வாங் பக் கோர்ட் வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 75 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். முதல்கட்ட கணக்கெடுப்பின்படி 279 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முதல்கட்ட விசாரணையில் சிகரெட்டை அணைக்காமல் வீசியதால் தீ விபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. அடுக்குமாடி குடியிருப்பில் பராமரிப்புப் பணியை மேற்கொண்ட நிறுவனத்தின் 3 மூத்த அதிகாரிகள் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

## "இம்ரான் கான் நலமுடன் இருக்கிறார்" - வதந்திகளுக்கு சிறை நிர்வாகம் மறுப்பு

**இஸ்லாமாபாத், நவ.29:**

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் சிறையில் கொல்லப்பட்டதாக வெளியான தகவலுக்கு அடியாலா சிறை நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் (பிடிஐ) கட்சியின் நிறுவனருமான இம்ரான் கான் சிறையில் கொலை செய்யப்பட்டுவிட்டதாக சமூக வலைதளங்களில் செய்திகள் பரவின. இதையடுத்து அடியாலா சிறை வளாகத்தில் இம்ரான் கானின் பிடிஐ கட்சி ஆதரவாளர்கள் பெருமளவில் திரண்டனர்.

இம்ரான் கானை பார்க்க வேண்டும் என்று அவர்கள் சிறை வளாகத்துக்குள் புகுந்து ரகளையில் ஈடுபட்டனர். இதையடுத்து அங்கு கூடுதல் போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்றம் அளித்த உத்தரவின்படி சிறையில் இம்ரான் கானை சந்திக்க அவரது சகோதரிகள் நோரின் நியாஸி, அலீமா கான், உஸ்மா கான் ஆகியோரும் வந்தனர். ஆனால், இம்ரானை சந்திக்க அவர்களுக்கு போலீஸாரும் சிறை நிர்வாகத்தினரும் அனுமதி தரவில்லை.

இந்த நிலையில் இம்ரான் கான் குறித்து சமூக வலைதளங்களில் பரவி வரும் தகவல்களுக்கு அடியாலா சிறை நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "இம்ரான் கான் முழு ஆரோக்கியத்துடன் இருக்கிறார். அவருக்கு முழுமையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அடியாலா சிறையிலிருந்து அவர் மாற்றப்பட்டதாக வெளியான செய்திகளில் எந்த உண்மையும் இல்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் வெள்ளை மாளிகை அருகே துப்பாக்கிச் சூட்டில் 2 வீரர்கள் படுகாயம்: ஆப்கன் நபர் கைது



**வாஷிங்டன், நவ.29:**

அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள அதிபரின் வெள்ளை மாளிகை அருகே நேற்று முன்தினம் தேசியப் படை வீரர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு வந்த காரிலிருந்து இறங்கிய ஒருவர் தேசிய படை வீரர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளார். இதைப் பார்த்த சக வீரர்கள் அந்த நபரை நோக்கி துப்பாக்கியால் சுட்டு மடக்கிப் பிடித்து கைது செய்தனர். எனினும் அந்த நபர் சுட்டதில் 2 வீரர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். வீரர்கள் சுட்டதில் கைது செய்யப்பட்ட நபர் காயங்களுடன் உயிர் தப்பினார். அவரிடம் நடத்திய விசாரணையில் அவரது பெயர் ரஹ்மனுல்லா லக்கன்வால் (29) என்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது. ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்த அமெரிக்க படைகள் கடந்த 2021ம் ஆண்டு தாயகம் திரும்பியது. ஆப்கனில் அமெரிக்க ராணுவத்தில் பணியாற்றிய ஆப்கனைச் சேர்ந்த சுமார் 76 ஆயிரம் பேர் வாஷிங்டனுக்கு அழைத்துச் சென்று குடியமர்த்தப்பட்டனர். அப்போது வாஷிங்டனில் வந்து குடியேறியவர்தான் லக்கன்வால்.

குடியேற்ற கோரிக்கை நிறுத்தம்: இந்நிலையில், அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் துறை தனது எக்ஸ் சமூக வலைதளத்தில், "ஆப்கானிஸ்தானியர்களின் குடியேற்றம் தொடர்பான அனைத்து கோரிக்கைகளும் கால வரையறையின்றி நிறுத்தி வைக்கப்படுகிறது. அமெரிக்கா மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது" என கூறப்பட்டுள்ளது.

# எல்லை பாதுகாப்பில் ரோபோக்களை நிறுத்த சீனா திட்டம்

**பெய்ஜிங், நவ.29:**

அமெரிக்க ராணுவத்துக்கு இணையாக சீன ராணுவத்தின் பலம் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகிறது. சீன ராணுவத்தில் ஏற்கெனவே ரோபோ நாய்கள் சேர்க்கப்பட்டு உள்ளன. அடுத்த கட்டமாக ரோபோ வீரர்கள் சேர்க்கப்பட உள்ளனர்.

இது தொடர்பாக சீனாவின் யுபி டெக் ரோபோடிக்ஸ் நிறுவனத்துக்கும் சீன ராணுவத்துக்கும் இடையே அண்மையில் ரூ.330 கோடியில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி யுபி டெக் ரோபோடிக்ஸ் சார்பில் இந்த ஆண்டு இறுதிக்குள் மனித வடிவிலான 500 ரோபோக்கள் சீன ராணுவத்தில் ஒப்படைக்கப்பட உள்ளன. இவற்றை வியட் நாம் எல்லைப் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபடுத்த சீன ராணுவம் திட்டமிட்டுள்ளது. படிப்படியாக சீன எல்லைப் பகுதிகள் முழுவதும் ரோபோ வீரர்களை நிறுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.




இதுதொடர்பாக யுபி டெக் ரோபோடிக்ஸ் வட்டாரங்கள் கூறியதாவது: 1.76 மீட்டர் உயரத்தில் ரோபோக்களை தயாரிக்கிறோம். இதற்கு வால்கர் எஸ் 2 என்று பெயரிட்டு உள்ளோம். இதன் ஒரு கரத்தில் 15 கிலோ வரையிலான பொருட்களை தூக்கிச் செல்ல முடியும். இது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் செயல்படும்.

உலகத்திலேயே முதல் முறையாக இதில் 2 பேட்டரிகளை பொருத்தியிருக்கிறோம். ஒரு பேட்டரியில் சார்ஜ் குறைந்தால் மற்றொரு பேட்டரி மூலம் ரோபோ தொடர்ந்து செயல்படும்.

சார்ஜ் குறைந்த பேட்டரியை ரோபோ தானாகவே அகற்றி சார்ஜ் செய்து கொள்ளும். இதன்மூலம் 24 மணி நேரமும் வால்கர் எஸ் 2 ரோபோவால் செயல்பட முடியும்.

இந்த ரோபோ ஒரு விநாடிக்கு 2 மீட்டர் கடந்து செல்லும். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் எந்தவொரு பணிக்கும் அதனை பயன்படுத்தி கொள்ள முடியும். இது மனிதர்களை போன்றே செயல்படும். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கின்னஸ் சாதனை: சீனாவின் ஷாங்காய் நகரில் உள்ள ரோபோ தயாரிப்பு நிறுவனம் ஏஜிபாட். இந்நிறுவனம் 'ஏஜிபாட் ஏ2' என்ற மனித ரோபோ ஒன்றை உருவாக்கியது. 169 செ.மீ உயரமுள்ள இந்த மனித ரோபோ சில்வர் மற்றும் கருப்பு நிறத்தில் தயாரிக்கப்பட்டது. இதை நெடுஞ்சாலையில் தானாக நடக்க வைக்க முடிவு செய்யப்பட்டது.

சீனாவின் சூசோ நகரில் கடந்த 10-ம் தேதி மாலை தனது நடைபயணத்தை தொடங்கியது ஜிபாட் ஏ2. நெடுஞ்சாலைகள், நகரங்களின் சாலைகள் ஆகியவற்றை கடந்து சென்று கடந்த 13-ம் தேதி ஹாங்காய் நகரின் வாட்டர் ஃபிரன்ட் பண்ட் பகுதியை அடைந்தது.

செல்லும் வழியில் போக்குவரத்து விதிகளையும் பின்பற்றி ஏஜிபாட் ஏ நடந்து சென்றது. 3 நாட்களில் மொத்தம் 106 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்றது.

மனித ரோபோ இவ்வளவு தூரம் தொடர்ந்து நடந்து சென்றது இதுவே முதல் முறை என்பதால், ஏஜிபாட் ஏ நடை பயணம் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.